நூற்றாண்டு விழா மலர்

1994

வெளியீடு : பெற்றோர் ஆசிரியர் கழகம், சேலம்.1.

IN MEMORY OF

RAO SAHIB P. RATHINASAMI PILLAI

PROPRIETOR SWARNAMBIGAI MOTOR SERVICE AND CHAIRMAN SALEM MUNICIPALITY 1941 - 1947



His legendary contribution to Education in Salem District from the level of Primary, Secondary and especially to the level of college is unsurpassed.

On this Memorable Day, we the family members pay our homage to our Illustrious Father.

R. SHANMUGAVEL - UMA MAHESWARI   R. JAYAKUMAR - KALAIVANI

R. BALASUBRAMANIAM - PUNITHAVATHI   KAMALAVENI - PICHAMUTHU

MALLIGESWARI - S. RAMALINGAM CHIEF TECHNICAL ADVISOR, UNITED NATIONS.

VASANTHAKUMARI - S.K. RAJAVELU, M.A.B.L.,

SAVITHIRI - Dr. R. CHANDRASEKARAN, M.B.B.S.,

KANAGESWARI - R. BALASUBRAMANIAM, M.Sc.,M.Phil.,

ALL GRAND CHILDREN

நகராட்சி மேல்நிலைப் பள்ளி, கோட்டை, சேலம்-1

1994

நூற்றாண்டு விழா மலர்

1891 - 1991

MHSS
SALEM

அறிவே ஆற்றல்

வெளியீடு:-
பெற்றோர் ஆசிரியர் கழகம், சேலம்-1.*

நூற்றாண்டு விழா மலர்க் குழு

மலர் ஆசிரியர்கள்

திரு. புலவர் பி. அண்ணாமலை எம்.ஏ.பி.எட்., தலைமை ஆசிரியர்
திரு. கு.ந. வரதாச்சாரி எம்.ஏ சி., எம்.எட்.,
திரு. புலவர் பெ. கோவிந்தராசுலு எம்.ஏ., பி.எட்.
திரு. மு. இராமநாதன் பி.ஏ., பி.எட்.,
திருமதி. இரா. எலன் சாந்தாமணி எம்.ஏ., பி.எட்.,

குழு உறுப்பினர்கள்

திரு. ஓ.ச. சுப்பிரமணியச் செட்டியார், தலைவர், பெற்றோர் ஆசிரியர் கழகம்
திரு. மா. ஈசுவரன், பொருளாளர், ,, ,, ,,
திரு.பி. பாண்டியன், திரு.ஏ.ஜே. ஸ்டெர்லிங் ,, ,, ,,
திரு. க.அ. பழனிச்சாமி பி.ஏ.,பி.எல்., தலைவர், பழைய மாணவர் சங்கம்
திரு. இரா. பழனிச்சாமி, துணைத்தலைவர், பழைய மாணவர்கள் சங்கம்.
திரு. மா.ரா. மரியசோசப், பி.எஸ்சி., எம்.எட்.
திரு. வீ. நாகராசன் எம்.ஏ.,எம்.எட்.,
திரு. லா. முக்தர்பாட்சா எம்.ஏ.,எம்.எட்.,
திரு. ஆ. அரங்கசாமி எம்.ஏ.,எம்.எட்.,
திருமதி. அ. கௌசல்யா கிருஷ்ணன், எம்.ஏ.எம்.பில்., எம்.எட்.,
திரு. க. பெஞ்சமின்

ஓவியர்கள்:
திரு. நா. இராமமூர்த்தி
திரு. காசி

சிறப்பாகச் செயல்பட்டு, 17.2.93 இல் மறைந்த ஆசிரியர், பள்ளி ஆசிரியர் சங்கச் செயலாளர், அன்புக்குரிய திரு. அ. வீரப்பன் எம்.ஏ., பி.எட். அவர்களுக்கு இக்குழு தன் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறது.

கட்டுரை, கதைகளின் உண்மைத் தன்மைகளுக்கு எழுதியவர்களே பொறுப்பு.

மலர் அன்பளிப்பு - ரூ.20

தமிழே உனக்கு வணக்கம்
தாயுன் புகழ் இந்த உலகில் மணக்கும் - பாரதிதாசன்

மேலும் வளர்க!

மலர்தலை ஞாலம் மகிழ்வுடன் போற்றப்
பலகலை நாளும் பயிற்றும் - நலமிகு
சேலம் நகராட்சி மேல்நிலைப் பள்ளி நீ
மேலும் வளர்க மிளிர்ந்து.

தமிழே, வாழ்த்து!

அன்னை மொழியே! அருந்தமிழே! ஆருயிரே!
நின்னை நினைந்து பணிகின்றோம் - மன்னும்
பெருங்கல்வி பேணவரும் பெட்புடைய மக்கள்
வருங்காலம் ஓங்கிடநீ வாழ்த்து.

— புலவர் பெ. கிருஷ்ணராஜன், எம்.ஏ.,எம்.எட்.

பொருளடக்கம்

		பக்கம்
1.	நூற்றாண்டு விழா மலர்க்குழு	2
2.	வாழ்த்து	3
3.	பொருளடக்கம்	4
4.	படையல்	5
5.	நன்றி	6
6.	அழைப்பு	7
7.	தமிழக முதல்வர்	9
8.	ஆளுனர்	10
9.	கல்வி அமைச்சர்	11
10.	செல்வகணபதி	12
11.	இயக்குனர், முதன்மை கல்வி அலுவலர், மாவட்டக் கல்வி அலுவலர்	13
12.	படங்கள்	14-17
13.	பள்ளியில் பெரியார்	18
14.	கல்வி அமைச்சர் வாழ்த்து	19
15.	இயக்குனர் வாழ்த்து	20
16.	செயலர், பெற்றோர் ஆசிரியர் கழகம் வாழ்த்து	21
17.	பெற்றோர் ஆசிரியர் கழகம் படங்கள்	22
18.	சேலம் மாவட்ட முதல் பள்ளி	23-29
19.	எனது தலைமை ஆசிரியர்	30-33
20.	புலவரும் பொருளும்	34
21.	பள்ளியில் நடந்த முப்பெரும் விழா	35-44
22.	ஓய்வு பெறும் ஆசிரியர்கள்	45-50
23	முப்பெரும் விழா	51-54
24.	நூலைப்படி	55-64
25.	நற்பள்ளி வாழியவே	65
26.	ருஷ்யாவில் கல்வி	66
27.	ஆசிரிய ரத்தினங்கள்	68
28.	பண்புடைக் கல்வியே	69-70
29.	விடியலை நோக்கி பாரதம்	70-71
30.	எனது பள்ளி நினைவுகள்	72-73
31.	புதுக்குறள்	74
32.	உழைப்பும் ஓய்வும்	75-80
33.	திருமணம்	81-83
34.	உள்ளத்தனையது உயர்வு	84
35.	என் பழைய நினைவுகள்	85-88
36.	வெளிச்சம் தேடும் விழிகள்	89-92
37.	விளையாட்டுத் திடலில் ஒரு திருவிளையாடல்	93-95
38.	பள்ளி இலக்கிய மன்றம்	96-98
39.	பள்ளி மாணவர் படங்கள்	99-114
40.	படங்கள்	115
41.	பெற்றோர் ஆசிரியர் கழகம்	116-129
42.	தாய் வீடு	130
43.	கடலரசி	132
44.	பள்ளிக் கல்விப் புரவலர் திட்டம்	134 137
45.	விளம்பரங்கள்	145 முதல்

படையல்

எத்துணையும் பேதமுறா தெவ்வுயிரும் தம்
முயிர் போலெண்ணி யுள்ளே
ஒத்துரிமை யுடையவரா யுவக்கின்றார்
யாவரவ ருளந்தான் சுத்த
சித்துருவா யெம்பெருமா னடம்புரியு
மிடமென நான்தெரிந் தேனந்த
வித்தகர்தம் அடிக்கேவல் புரிந்திடவென்
சிந்தைமிக விழைந்த தாலோ!

— வள்ளலார்

எவ்வுயிரும் தம்முயிர் போல் எண்ணி, வாடிய பயிருக்கு வாட்டமுற்றுத் தொண்டு செய்த இப்பள்ளியின் நிறுவனர்களுக்கும், அவர்கள் வழியில் தளராது நின்று தொண்டு செய்த தலைமையாசிரியர்கட்கும், அவ்வழி நின்று பணிசெய்த ஆசிரியர் பெருந்தகைகளுக்கும் இம்மலரை நன்றி மலராய்ப் படைக்கின்றோம்.

''கீழ்த்திசை வாயில் கணவனொடு புகுந்தேன்
மேற்றிசை வாயில் வறியேன் பெயர்கென''

என்ற கண்ணகிபோல், அடிமைநாடாய் சுதந்திரமற்று கிடந்தபோது இப்பள்ளி பெற்றிருந்த விளையாட்டுத் திடலை சுதந்திர நாட்டில் இழந்து நிற்கிறது.

''அறிவு பெறாமல் அடையும் சுதந்திரம் அழிவைத்தான் தரும்''

என்று பெரியார் கூறியதை பொருத்தமாய் மெய்ப்பித்துள்ள சாட்சியம் இது.

''வாயில் காத்து நிற்போன் வீட்டை
வைத்தி ழுத்தல் போலும்
கோயில் பூசை செய்வோன் சிலையைக்
கொண்டு விற்றல் போலும்''

நடந்துவிட்ட இக்கொடுமையைத் தட்டிக்கேட்கும் சான்றோரும் உண்டு கொல்! சான்றோர் இருந்தால் திடலைக் காட்டவும் வழியுண்டு! ஆனால், சான்றோர் எங்கே? அந்தச் சான்றோரை எதிர்பார்த்து அவர்தாளுக்கும் இம்மலரைப் படைக்கின்றோம்.

— மலர்க்குழு மற்றும் பெற்றோர் ஆசிரியர் கழகம்

நன்றி

சேலம் நகராட்சி, கோட்டை மேல்நிலைப் பள்ளியின் நூற்றாண்டுவிழா சிறப்புற நடைபெற விழா மலர் சிறப்பாய் வெளிவர ஒத்துழைப்பு நல்கிய பெற்றோர் ஆசிரியர் கழகத்திற்கு முதற்கண் நன்றியைத் தெரிவித்துக் கொள்கி றேன்.

விரும்பியபடியெல்லாம் பள்ளியில் மாற்றங்கள் செய்யத் திட்டம் தந்தவுடன் எந்த மறுப்பும் தயக்கமுமின்றி ஒப்புதலளித்து உறுதுணை நின்ற தலைவர் திருமிகு.ஓ.ச. சுப்பிரமணியச் செட்டியார் அவர்களுக்கு நெஞ்சார்ந்த நன்றி

திட்டப்படி செயல்கள் நடைபெறத் துணைநின்ற ஆசிரியர்கள், நண்பர்கள், தொழில் வினைஞர்கள் அனைவருக்கும் நன்றி. மலருக்கு வாழ்த்துரையும் பாராட்டுரையும் வழங்கிய மாண்புமிகு கல்வி அமைச்சர், பள்ளிக்கல்வி இயக்குநர், பெற்றோர் ஆசிரியர் கழக மாநிலச் செயலர் மற்றும் கட்டுரைகள் வழங்கியவர்கள், ஓவியர்கள், அச்சிட்டுத் தந்தவர்கள், விழாவில் கலந்துகொண்டு சிறப்பித்தவர்கள் அனைவருக்கும் நன்றி.

குறிப்பாக விளம்பரங்கள் தந்து உதவிய வணிகப்பெருமக்களுக்கும், பள்ளி யின் பழைய மாணவர்களுக்கும், மிகுந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

1955 முதல் 1994 வரை சேலம் நகராட்சிப் பள்ளிகளில் பணியாற்ற எனக்கு வாய்ப்பளித்த சேலம் நகராட்சிக்கும், பணிக்காலத்தில் என்னுடன் பழகிய - என்னைத் தெரிந்த - மற்றவர்களுக்கும் என் பணிக்கு உறுதுணையாய் இருந்த அன்புத்தோழர்களுக்கும், உளம் நிறைந்த நன்றியினை உரித்தாக்கி மகிழ்கின் றேன். என்பணியில்

குணம்நாடிக் குற்றமும் நாடிஅவற்றுள்
மிகைநாடி மிக்க கொளல்.

வேண்டும் எனத் தெரிவித்து நன்றியுடன் விடைபெறுகின்றேன்.

நன்றி வணக்கம்.

அன்பன்

28.5.94
சேலம்-1

புலவர் பி.அண்ணாமலை
தலைமையாசிரியர் & செயலர்
நகராட்சி மேனிலைப்பள்ளி, பெற்றோர் ஆசிரியர் கழகம்.

'உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல்'

நகரவை மேல்நிலைப்பள்ளி, கோட்டை, சேலம் – 1.

நூற்றாண்டு விழா அழைப்பு

அன்புடையீர், வணக்கம்.

இப்பள்ளி 1856இல் தோன்றியது. 1890ல் கல்லூரியாக உயர்ந்தது. 1891இல் உயர்நிலைப்பள்ளிக்கு உரிய நிலைஏற்பினை அரசு வழங்கி 1991 உடன் 100 ஆண்டு நிறைகிறது.

நூற்றாண்டை முன்னிட்டு 1991 முதல் இப்பள்ளியில் பல சீர்திருத்தங்கள் செய்யப்பட்டு 12 – 7 – 93இல் திருவள்ளுவர் வாயில், க்காமராசர் வாயில், தந்தை பெரியார் அறிவியல் ஆய்வகம், புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் நூற்றாண்டு நினைவுப் புத்துணர்வு கலைமன்றம் முதலியன திறந்து வைக்கப்பட்டன.

நூற்றாண்டு விழாவும், நூற்றாண்டு மலர் வெளியீட்டு விழாவும், ஓய்வுபெறும் ஆசிரியர்கட்குப் பாராட்டு விழாவும் பள்ளியில் புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் நூற்றாண்டுப் புத்துணர்வுக் கலை மன்றத்தில் நடைபெற உள்ளன. தாங்கள் அருள்கூர்ந்து வருகை தந்து சிறப்பிக்க அன்புடன் அழைக்கின்றோம்.

நாள் : **28 – 5 – 1994** சனிக்கிழமை காலை 10.00 மணி

தலைமை : டாக்டர். திரு. சிலம்பொலி. சு. **செல்லப்பனார்** அவர்கள்

முன்னிலை : திரு. க.அ. பழநிச்சாமி பி.ஏ., பி.எல்., அவர்கள்
தலைவர் பழைய மாணவர் கழகம்

வரவேற்புரை : திரு. ஓ.ச. சுப்பிரமணியச் செட்டியார் அவர்கள்
தலைவர், பெற்றோர் ஆசிரியர் கழகம்

அறிமுகவுரை : புலவர் பி. அண்ணாமலை, தலைமையாசிரியர்

நூல் வெளியீடு : முனைவர் துளசி. இராமசாமி அவர்கள் எழுதிய
" நாட்டுப்புறக் கலைகளில் பாரதிதாசன்"
[வெளியிடுதல் – தலைவர், பெறுதல் – இயக்குனர்]

பாராட்டப் பெறுபவர் : அய்நூறுக்கும் மேற்பட்ட நூல்கள் எழுதிய இப்பள்ளியின் முன்னாள் தமிழ் ஆசிரியர் புலவர். செந்துறை முத்து அவர்கள்.

நூற்றாண்டு விழாக் கல்வெட்டு திறந்து சிறப்புரை :

டாக்டர் . **சி. பழநிவேலு**, M.sc., B.T., Phd.,அவர்கள்
பள்ளிக் கல்வி இயக்குனர், சென்னை

பாராட்டுரை : திரு **இலட்சுமி நாராயணன்** M.S., B.T.,(வர்ஜினியா)
முன்னாள் பள்ளிக்கல்வி இணை இயக்குனர்

திரு. க. மாணிக்கவாசகம் B.Sc.,
ஆணையாளர், நகராட்சி, சேலம்.

வாழ்த்துரை :

1. திரு. டாக்டர். **பி.ஆர். அரங்கராசன் குமாரமங்கலம்**
   பாராளுமன்ற உறுப்பினர், சேலம்
2. திரு. **எம். நடேசன்** M.A., L.L.B.,
   சட்டமன்ற உறுப்பினர், சேலம் 2 ஆவது தொகுதி
3. திரு. **புவனா எஸ்.ஆர். ஜெயராமன்**
   சட்டமன்ற உறுப்பினர், சேலம் 1 ஆவது தொகுதி

பிற்பகல் 3.00 மணி :

சேலம் மாவட்ட உயர்நிலை, மேல்நிலைப்பள்ளித் தலைமையாசிரியர்கள் கூட்டம்

சிறப்புரை :

டாக்டர் . சி. **பழநிவேலு**, M.Sc., B.T., Phd.,அவர்கள்

5.00 மணி தேநீர்

மாலை 6.00 மணி

நூற்றாண்டுமலர் வெளியீடு,ஓய்வுபெறும் ஆசிரியர்கட்குப் பாராட்டு, பழைய மாணவர்களுக்கும், புரவலர்களுக்கும் பாராட்டு.

தலைமை : பேராசிரியர். திரு. **தி.வை. சொக்கப்பா** M.A., L.T.,அவர்கள்
(சேலம் நகராட்சிக் கல்லூரியின் முன்னாள் வரலாற்றுப் பேராசிரியர்)

முன்னிலை : திரு. S. இராமலிங்கம் அவர்கள்
பள்ளி நலக்குழுத் தலைவர்

மலர்பெறுதல் : பள்ளியின் பழைய மாணவர்
தொழிலதிபர் **ந. இராமசாமி உடையார்** அவர்கள்

மலர் வெளியீடும் பாராட்டும் :

டாக்டர் . சி. பழநிவேலு, M.Sc., B.T., Phd.,அவர்கள்

ஓய்வு பெற்ற ஆசிரியர்கள்

திரு புலவர் பி. அண்ணாமலை,
தலைமையாசிரியர்

திரு புலவர் பெ .கிருஷ்ணராஜன்
துணைத் தலைமையாசிரியர்

திரு நா. குமரேசன்
துணைத் தலைமையாசிரியர்

திரு நா. சீ . வெங்கட்ராசன்
துணைத் தலைமையாசிரியர்

திரு கா.இராமசாமி
பொறியியல்ஆசிரியர்

திரு ச. பாகன்
இடைநிலைஆசிரியர்

திரு சி. சுப்பிரமணியன்
இடைநிலைஆசிரியர்

பாராட்டுரை :

திரு தெ. செகநாதன் M.A., B.Ed.,அவர்கள்
முதன்மைக் கல்வி அலுவலர்

திருமதி. கமலம் ஜோதிகிருஷ்ணன் B.Sc., M.A.B.T.,
மாவட்டக் கல்வி அலுவலர் (பொறுப்பு)

பாராட்டப்படும் பழைய மாணவர்கள்:

திரு. மா. கோபால் அவர்கள்
முன்னாள் சேலம் நகரமன்றத் தலைவர்

திரு சங்கரராமன் அவர்கள்
ஆடிட்டர்

திரு வெ. தேவராசன். B.A.B.T.,
ஓய்வு பெற்ற தலைமையாசிரியர்

டாக்டர் திரு. G. மாதவராசன் எம். பி., பி. எஸ்.,
திரு S. விவேகாநந்தன்

பள்ளி ப் புரவலர்கள்:

திரு மு.அ. கலையரசன் B.Com., அவர்கள்
பாண்டியன் பேப்பர் கம்பனி, சேலம் - 1.

திரு எஸ்.ஏ.பி. அங்கண்ணன் அவர்கள்
அம்பிகா ஆப்செட், சேலம் .

திரு ஏ.ஜே. ஸ்டெர்லிங், மற்றும் புரவலர்கள்

சிறப்பு ரை:

கவிஞர் தி. முருகுசுந்தரம் M.A., அவர்கள்

பொருள் : பாரதிதாசனில் பழமையும் புதுமையும்

கலை நிகழ்ச்சி :

உலகத்தமிழ் ஆராய்ச்சி நிறுவனக் கலைக்குழு வழங்கும்

"நாட்டுப்பு றக் கலைகளில் பாரதிதாசன்"

என்னும் கலை நிகழ்ச்சி நடைபெறும்.

நன்றியுரை : புலவர் பி. அண்ணாமலை,
தலைமையாசிரியர் மற்றும் செயலர் பெற்றோர் ஆசிரியர் கழகம்

அனைவரும் வருக வருக என அழைக்கின்றோம்

இவண்,
பள்ளிஆசிரியர்களும் மாணவர்களும்,
மற்றும்

ஒ.ச. சுப்பிரமணியச் செட்டியார்	புலவர் பி. அண்ணாமலை	ஈசுவரன்
தலைவர்	செயலர்	பொருளர்

பெற்றோர் ஆசிரியர் கழகம், சேலம் - 1.

NEMARA PUBLIC LI
24 Oct 1997
MADRAS-600 008.

தமிழக ஆளுநர்
மேதகு. டாக்டர் எம். சென்னாரெட்டி

தமிழக முதல்வர்

மாண்புமிகு டாக்டர்

செல்வி : ஜெ. ஜெயலலிதா அவர்கள்

EMARA PUBLIC LIBRA
24 Oct 1997

தமிழக கல்வி அமைச்சர்

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி

தமிழக உள்ளாட்சித்துறை அமைச்சர்

மாண்புமிகு டி.எம். செல்வகணபதி



தமிழக பள்ளிக் கல்வி இயக்குநர்
டாக்டர் சி. பழனிவேலு

சேலம் முதன்மைக் கல்வி அலுவலர்
தெ. ஜெகந்நாதன்

மகளிர் பள்ளி ஆய்வாளர்
கமலம் ஜோதிகிருஷ்ணன்

புலவர்
திரு. பி. அண்ணாமலை,
எம்.ஏ.பி.எட்., தலைமை ஆசிரியர்



திருவள்ளுவர்
(இவர் பெயரால் பள்ளி வாயில்
திறக்கப்பட்டுள்ளது)



புரட்சிக்கவிஞர் பாரதிதாசன்



ஸ்பென்சர் A. ஷூட்டி பி.ஏ.,
(1890-1914)

எ. இராமசாமிக் கவுண்டர் எம். எ., எல்.டி
(1927—1949)

B. N. சங்கமேசுவர அய்யர் எம். ஏ.,எல்.டி.
(1932—1947)



ப. மாணிக்கம் பிள்ளை பி. ஏ., எல்டி.
(1948—1961)



கே. நாராயணசாமி பிள்ளை பி. ஏ.,எல்டி.
(1962—1966)



சோம. தீனதயாளன் பி.ஏ., பி. டி.
(1966—1972)

திரு. கோ.தேவராசன், எம்.ஏ.,பி.டி.
(1972-76, 1977-79, 1981-83)

திரு. சோம. வீரகேசரி, எம்.ஏ.,எம.எட.
(1983-1990)



திரு. வெ. தேவராசன், பி.ஏ.,பி.டி
(1976-77, ,1979-81)

பழமையும் புதுமையும்



பள்ளி இலக்கிய மன்ற விழாவில் பெரியார்

திராவிடர் கழகத் தலைவர் தந்தை பெரியார் ஈ.வெ. இராமசாமி அவர்கள். 1972ல் பள்ளி இலக்கிய மன்ற விழாவில் கலந்து கொண்டபோது அன்றைய தலைமையாசிரியர் சோம. தீனதயாளன் அவர்கள் வரவேற்புரை ஆற்றுகிறார். இன்றைய தலைமை ஆசிரியர் புலவர் பி. அண்ணாமலை அவர்கள் பெரியார் பின் நிற்கிறார்.

பள்ளியில் பெரியார்

1970ல் பகுத்தறிவாளர் கழகத்தை தந்தை பெரியார் அவர்கள் தொடங்கி வைத்தார்கள். உடனிருப்பர் மாவட்டக் காவல் துறை கண்காணிப்பாளர் இராமதாசு அவர்கள். மற்றும், சேலம் நடேசன் பகுத்தறிவாளர் கழகத் தலைவரும் பள்ளித் தலைமை ஆசிரியருமான சோம தீனதயாளன், பகுத்தறி-வாளர் கழகத் துணைச் செயலாளரும் தமிழாசிரியருமான திரு புலவர் பி. அண்ணாமலை. பகுத்தறிவாளர் கழகப் பொருளாளரும், பள்ளியின் பழைய மாணவரும் ஆசிரியருமான சேலம் செ. வெங்கடாசலம், பகுத்தறிவாளர் கழகச் செயலாளர் திரு. குப்புசாமி, வட்டாட்சியர் திரு. கிருட்டினசாமி.

பள்ளி எனும் பூந்தடத்தில் மலர்கின்ற தாமரைகள்

முனைவர் ஔவை நடராசன்
துணைவேந்தர்
தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

வீடுகள் தோறும் கலையின் விளக்கம்
வீதிகள் தோறும் இரண்டொரு பள்ளி

என்பது கவியுலகக் கனவாக இருந்த காலம். கல்விக்கூடங்கள் மாவட்டத்துக்கு ஒன்றாக முகிழ்த்து வட்டங்களுக்கு ஒன்றாக வளர்கின்றன. இத்தகைய சூழலில் சேலம் மாவட்டத்திலேயே முதன் முதலாகத் தோன்றிய சேலம் கோட்டை நகராட்சி மேனிலைப்பள்ளி தன்னுடைய வரலாற்றின் நூற்றாண்டு விழாவினைக் கொண்டாடு கின்றது. 'ஈன்று புறந்தருதல் என்தலைக் கடனே சான்றோன் ஆக்குதல் தந்தைக்குக் கடனே' என்று இரண்டாயிரம் ஆண்டு களுக்கு முன்பே ஒரு தாய் உள்ளம் பெருமிதம் கொண்டது.

அத்தகைய பெருமித உணர்வோடு தன்னுடைய கடந்த கால வரலாற்றினை எண்ணிப்பார்க்கும் வேளையில் கல்வி பற்றிய குறிக்கோளையும் நாம் நினைவு கொள்ளவேண்டியவர்களாகின்றோம். எந்தத் திட்டமும் உருக்கொண்டு நாளுக்கு நாள் வளர்கின்ற வளர்ச்சியில் நொடிதோறும் சில மாற்றங்கள் நிகழ்தல் இயற்கை. முடிவில் அந்த வளர்ச்சி தோன்றிய திசைக்கு எதிர்த் திசைக்குச் சென்றுவிடுவதும் உண்டு. கல்வியின் வளர்ச்சியிலும் இந்த மாற்றம் நிகழவே செய்துள்ளது.

கல்வி, அறிவு, ஒழுக்கம் என்ற அகவளர்ச்சி மறக்கப்பட்டுவிட்டன. படிப்பு, பட்டம், பதவி என்ற புறவளர்ச்சியே முதன்மையுற்று நிற்கின்றது. இத்தகைய சூழலில் கல்வி பற்றிய கருத்துக்களை மீளவும் ஒருமுறை நினைவரங்கில் நிலைபெறச் செய்வது இன்றியமையாதது. கல்வி என்பது எழுதப்படிக்கப் பழகுதல் என்ற நிலை காணப்படுகின்றது. ஆனால் முன்னோர்கள் இவற்றை வெறும் பயிற்சி அல்லது பழக்கம் என்றே கூறினர். **சித்திரமும் கைப்பழக்கம் செந்தமிழும் நாப்பழக்கம்** என்பதுதானே முன்னோர் உரைத்த முடிவுரைகள். அப்படியானால் கல்வி என்பது என்ன? அது குணங்களின் மலர்ச்சி. அறிவின் தெளிவு - ஒழுக்கத்தின் உயர்வு - வைத்த தொரு கல்வி மனப்பழக்கம் அன்றோ !

இன்று நாம் வெறும் திறமைகளை அறிவின்பாற்படுத்திப் பேசுகின்றோம். ஆனால் திருவள்ளுவரோ அறிவினைப் பேரறிவு, கூரறிவு, நூலறிவு, நுண்ணறிவு என்றெல்லாம் வேறுபிரித்துக்காட்டி முடிவாகச் **'சென்றவிடத்தால் செலவிடாது தீதொரீஇ நன்றின்பால் உய்ப்பது அறிவு'** என்று வரையறுத்து வழிகாட்டுகின்றார்.

உலகம் தழீஇயது ஒட்பம் மலர்தலும்
கூம்பலும் இல்லது அறிவு
என்று கூறுகின்றார்.

அறிவினான் ஆகுவது உண்டோபிறிதின் நோய்
தன்நோய்போல் போற்றாக் கடை

என்று வினவுகின்றார்.

தாம் இன்புறுவது உலகு இன்புறக் கண்டு,
காமுறுவர் கற்றறிந்தார் என்று சிறப்பும் கூறுகின்றார்.

எவ்வழி நல்லவர் ஆடவர்
அவ்வழி நல்லை வாழிய நிலனே

என்று ஔவையார் கூறுவது போன்று நாடு சிறக்கவேண்டுமென்றால் நாட்டு மக்கள் நல்லவர்களாக இருக்க வேண்டும். அவர்கள் நல்லவர்களாக உருவாக்கப்படவேண்டும்.

ஈன்று புறந்தருதல் என்தலைக்கடனே
சான்றோன் ஆக்குதல் தந்தைக்குக் கடனே
நன்னடை நல்கல் வேந்தர்க்குக் கடனே

என்ற பொருள் மொழிகள் புது மொழிகள் ஆகவேண்டும்.

உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும் கற்றுக்கொண்ட காலம் மாறி, இன்று

உற்றுழி உதவியும், உறுபொருள் கொடுத்தும் கற்பிக்கும் காலம் மலர்ந்துள்ளது. இந்த வாய்ப்பினுக்குரிய மாணவர்கள்

பருகுவன் அன்ன ஆர்வம் உடையவர்களாக
உடையார்முன் இல்லார்போல் ஏக்குற்றுக்
கற்றுக்கொள்கின்றவர்களாகத் திகழவேண்டும்.

இந்த அறிவியல் ஊழியில் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட சிந்தனைகள் ஏலுமா என்று எண்ணத் தோன்றும். **இன்றைய வளர்ச்சி புறவளர்ச்சி** மட்டுமே. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு **முன்பிருந்த அகவளர்ச்சி இன்றில்லையே** என்பதனை நாம் எண்ணிப்பார்க்கத் தவறுவது ஏற்புடையதாகாது.

புறநானூற்றுக் காலத்துப் புலவர்களின் பொருள்மொழிகளையும் அறிவுரைகளையுமே திருவள்ளுவர் திருக்குறளாக வழங்கினார். தொடக்கத்தில் மக்கள் திருக்குறளைப் படித்தனவர். சிறிது காலத்துக்குப் பிறகு பதவுரை கேட்டனர். பின்னர் தெளிவுரை கேட்டனர். கருத்துரை போதுமே என்றனர். வினாவிடையாக இருந்தால் நல்லது என்றனர். இன்று திருக்குறளைவிட்டே நெடுந்தூரம் ஒதுங்கி வந்துவிட்டனர்.

மீண்டும் திருக்குறளையே கற்போம், திருவள்ளுவர் சொல்வதை கேட்போம். கற்போம். கசடறக் கற்போம். கற்றபடி நிற்போம். கற்றதனாலாய பயன் கொள்வோம்.

பள்ளி எனும் பூந்தடத்துப் பயில்கின்ற
மாணவர் தம் உள்ளம் எனும் தாமரையில்
ஊக்கமெனும் ஒளி மிளிர தெள்ளுதமிழ்
மணங்கமழச் செயல்தோறும் புகழ்விளக்க
வள்ளுவனார் காட்டியதோர்
வழிநடப்போம் வாரீரே !

வாழ்க !

பெறுநர்:

புலவர். பி. அண்ணாமலை அவர்கள்,
செயலர் & தலைமை ஆசிரியர்
பெற்றோர் ஆசிரியர் கழகம்
நகரவை மேனிலைப் பள்ளி
கோட்டை, சேலம் - 636 001.

ஒரு ஆசிரியரின் குமுறல்

பெற்றோரே ...!
எப்போதும் டி.வி.
என்னென்னவோ சினிமா.
ஏதேதோ அரட்டை.
"எப்பவோதானே எக்சாம்" - என
எண்ணும் உன் மகனை நீ
எண்ணிப் பார்ப்பதே இல்லையா?
"படிடா ! படிடா ! எனும் உன் வேதமும்
படிக்க நீ கொடுக்கும் துட்சிணையும்
பத்தவே பத்தாது!
கணக்கு டியூசன் மட்டும் - உன் கனவை
நனவாக்கி விடுமா, என்ன?
நீ புரட்டிப் பார் அவன் புத்தகத்தை
புத்தியையும் அலசிப் பார்!
சமையல் கட்டையே அம்மாவும்
பிடிக்கட்டையே அப்பாவும்
கட்டி அழுதது போதும் !
ஏக்கங்கள் பல எனினும்
ஏன் தானுன்னறியாமை ஒன்றும்
அறியாத குழந்தையை
அறிவில்லாதவனாகவே
ஆக்கி விடுகிறது?
இலவசப் படிப்பு உன் மகனை
இன்றியமையாதவனாக ஆக்கத்தான்
இல்லாதவனாகவே ஆக்கிவிடுவதற்கல்ல.
இனியாவது நீ கவனி
இமைபோல உன் மகனை!

வெ. கல்யாணராமன்
(முன்னாள் மாணவன் 1984 - 86)

பேராசிரியர் க. பொன்னுசாமி
எம்.எஸ்ஸி.,பி.எல்.,
கல்வி அமைச்சர்

தலைமைச் செயலகம்
சென்னை - 600 009

நாள்: 04.03.1994

வாழ்த்துச் செய்தி

கோட்டை நகராட்சி மேல்நிலைப் பள்ளி, சேலம் மாவட்டத்தில் 1856-இல் முதன் முதலில் தொடங்கப்பட்டு, ஏறத்தாழ 150-ஆண்டுகாலப் பழைமை வரலாற்றினைக் கொண்ட பள்ளியாகும்.

இப்பள்ளி சேலம் நகராட்சியில் 1885-இல் ஒப்படைக்கப்பட்டு, 1891-இல் அரசு ஏற்பினைப் பெற்றுள்ளது. இதனையொட்டி, இப்பள்ளியின் பெற்றோர் ஆசிரியர் கழகம், ''அரசு ஏற்பினைப் பெற்ற நூற்றாண்டு விழா''-வைச் சிறப்பாகக் கொண்டாட முடிவு செய்திருப்பது அறிந்து மகிழ்ச்சியடைகிறேன்.

விழா நிகழ்ச்சிகள் சிறப்பாக அமைய உளமார வாழ்த்துகிறேன். இப்பள்ளியின் நீண்ட கல்வித் தொண்டில் தங்களை ஈடுபடுத்திக் கொண்ட சான்றோர்கள் அனைவரையும் அன்புடன் பாராட்டுகிறேன்.

(ஒம்)

(க. பொன்னுசாமி)

பெறுநர்

புலவர் பி. அண்ணாமலை
செயலாளர்
நகரவை மேல்நிலைப் பள்ளி பெற்றோர் ஆசிரியர் கழகம்
கோட்டை
சேலம் - 636 001

டாக்டர் சி. பழனிவேலு, எம்.எஸ்ஸி.,பி.டி., பிஎச்.டி.,
பள்ளிக் கல்வி இயக்குநர்.

கல்லூரிச் சாலை
சென்னை - 6.

நாள்: 6.4.94

அன்புடையீர்

தங்கள் பள்ளியின் நூற்றாண்டு விழா சிறப்புடன் கொண்டாடப்பட இருப்பதாகவும், விழா மலர் வெளியிட இருப்பதாகவும் அறிந்து மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்.

சேலம் மாவட்டம் இனிய மாங்கனிக்கும், உறுதியான எஃகு இரும்பிற்கும் உலகப்புகழ் வாய்ந்தது. அதேபோல், சேலம் கோட்டைப் பகுதியில் விளங்கி வரும் தங்கள் பள்ளியும் இனிமை ் உறுதிப்பாடும் கொண்டு ஓங்கி வளர்ந்து வருவது குறித்து அகம்மிக மகிழ்கிறேன்.

தங்கள் பள்ளி, நூற்று அய்ம்பது ஆண்டுக் காலத் தொன்மையுடன் படிப்படியாக வளர்ச்சியடைந்து வருவதையும் அறிகிறேன். பல்லாயிரக்கணக்கான மாணாக்கர் கற்றுச் சிறந்து மாநிலமெங்கும் பவனி வருகிறார்கள் என்பதையும், கல்வியறிவோடு, பன்னருங்கலைஞானத் தால், அன்பால் - பராக்கிரமத்தால் உயர்ந்து ஒளி விடுகிறார்கள் என்பதையும் அறிந்து தங்களைப் போலவே நானும் மகிழ்ச்சியும் பெருமிதமும் கொள்கிறேன்.

பெற்றோர் ஆசிரியர் கழகம் என்னும் அமைப்பின் நோக்கத்திற்கு ஆக்கமும் ஊக்கமும் சேர்க்கும் வகையில் செயற்பட்டுத் தங்கள் பள்ளி வளர்ச்சியில் இடையறாப்பங்குப் பணியாற் றிப் பள்ளி வளர்ச்சிக்கு உறுதுணையாக நிற்கும் நும்பெற்றோர் ஆசிரியர் கழகத்தைச் சார்ந்த பெரியோர் யாவருக்கும் என் பாராட்டுகளையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன். தங்களைப் போன்றோரின் ஆதரவாலும் ஆசியாலும் பள்ளி மேலும் சிறப்படையும் என நம்புகிறேன், வாழ்த்துகிறேன்.

விழாமலரானது, முழுத்தேர்ச்சிக் கல்வியாண்டு, பள்ளிப்புரவலர் திட்டம், பள்ளிச்சீரமைப் புத் திட்டம், வீரியப்புளியமரம் நடுதல், பள்ளி நூலக வளர்ச்சித் திட்டம் முதலான சிறந்த கல்வித் திட்டங்கள் பற்றியும், அவற்றின் மிகு பயன் பற்றியும் கருத்துக்களை வழங்கும் கருத்துக் கருவூலமாகத் திகழட்டும் என விழைகிறேன், வாழ்த்துகிறேன்.

நன்றி.

அன்பார்ந்த,

(ஒம்)

(சி. பழனிவேலு)

பெறுநர்

புலவர் பி. அண்ணாமலை,
செயலர் & தலைமையாசிரியர்,
நகராட்சி மேல்நிலைப் பள்ளி,
கோட்டை, சேலம்-1

கேப்டன் ஒய். எர்ஸ்கின் தேவாசீர்வாதம்

செயலாளர்,
தமிழ்நாடு பெற்றோர் ஆசிரியர் கழகம்,
சென்னை - 6.

வாழ்த்துச் செய்தி

சேலம் நகரவைக் கோட்டை மேல்நிலைப் பள்ளி நூற்றாண்டு விழாவைப் பெற்றோர் ஆசிரியர் கழகம் மூலம் கொண்டாடுவது குறித்து மிக்க மகிழ்ச்சி அடைகிறேன். பள்ளியின் முன்னேற்றத்திற்கு உறுதுணையாக உள்ள இப்பள்ளியின் பெற்றோர் ஆசிரியர் கழகம் மேன்மேலும் சீரிய முறையில் பணியாற்றி அப்பள்ளிக்குப் புகழ் சேர்க்க எனது நல்வாழ்த்துக்கள்.

ஒம்/-.......
ஒய். எர்ஸ்கின் தேவாசீர்வாதம்
செயலாளர்

பெறுநர்

செயலர்,
பெற்றோர் ஆசிரியர் கழகம்
நகரவைக் கோட்டை மேல்நிலைப் பள்ளி
சேலம் - 636 001

திரு. O.S. சுப்ரமண்ய
செட்டியார்
பெற்றோர் ஆசிரியர் கழகத்தலைவர்

புலவர் பி. அண்ணாமலை
செயலர்
பெற்றோர் ஆசிரியர் கழகம்

திரு. மா. ஈஸ்வரன்
பொருளாளர்
பெற்றோர் ஆசிரியர் கழகம்



திரு க. அ. பழனிச்சாமி B.A.B.L.,
திராவிடர் கழகப் பொதுச்
செயலாளர் கி. வீரமணி M.A.B.L.
பேராசிரியர் தி.வை. சொக்கப்பா M.A.,B.G.L.,
பள்ளியின் பழைய மாணவர்கள்
சு. பொ. கண்ணன், அ. இளவழகன்.

சேலம் மாவட்டத்து முதல் பள்ளி

சேலம் நகராட்சி மேனிலைப்பள்ளி சேலம் மாவட்டத்தில் முதன் முதலில் தொடங்கப்பட்ட பெருமைக்கு உரிய பள்ளி யாகும். சேலம் கோட்டைப் பகுதியில் நகராட்சி அலுவலகத்தை ஒட்டி, மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு எதிரில், தந்தை பெரியார் சிலை அருகில், அடையாறு ஆலமரம் போல், ஆலமரமும் அரசு மரமும் தழைத்திருக்கும் குளிர்ந்த சூழ்நிலையில், இப்பள்ளி அமைந்துள்ளது.

1856ல் திரு. சி.ஜே.மெகார்த்தி என்ற ஆங்கிலேயரால் ஒரு வாடகைக் கட்டிடத்தில் இப்பள்ளி தொடங்கப்பட்டு 1857ல் அப்போதைய மாவட்ட ஆட்சித் தலைவரான திரு.ஜியார்ஜ் அர்பத்னாட்டு என்பவரால் ''வர்னாகுலர் ஸ்கூல்'' என்று பெயரிடப்பட்டு அரசாங்கத்தாராலேயே நடத்தப்பட்டு வந்தது. சென்னையிலும், கல்கத்தாவிலும், பம்பாயிலும், பல்கலைக் கழகங்கள் தோன்றிய ஆண்டில் தோன்றியது இப்பள்ளி. இந்திய சுதந்திரப் போராட்டத்தின் தொடக்கமும் இந்த ஆண்டு தான். பின்னர் இது திரு. டி.எம்.ஸ்காட் தலைமையில் 'ஜில்லா ஸ்கூல்' என்றழைக்கப்பட்டு நடந்து வந்தது. தருமபுரி உள்ளிட்ட பெரிய மாவட்டமான சேலம் ஜில்லாவில் இருந்த முதல் பள்ளியானதால் அப்பெயர் பெற்றது. திரு.ஜான்ஸ்மால் என்பவராலும், இ.இ.பொரட் என்பவராலும் பதினொன்றாம் வகுப்பு வரை உயர்த்தப்பட்டு உயர்நிலைப் பள்ளியாகியது. 1885ல் சேலம் நகராட்சியிடம் இப்பள்ளி ஒப்படைக்கப்பட்டுள்ளது. முதல் நிலை வகுப்பு, (இண்டர் மீடியட்) கொண்ட கல்லூரியாகவும், இப்பள்ளி வளர்ச்சியடைந்தது. 1891ல் உயர்நிலைப்பள்ளிக்குரிய நிலையான அரசு ஏற்பினை இப்பள்ளி (அரசு ஏற்பு எண் ஆர்.ஓ.சி.எண்.8288) பெற்றது. 1892ல் கல்லூரியாக வளர்ச்சி பெற்றது. கல்லூரி முதல்வராக திரு. ஸ்பென்சா ஏ.ஷூட்டி, பி.ஏ., பொறுப்புக்கு வந்து கல்லூரியைச் சிறப்பாக வளர்ச்சி பெறச் செய்தார்.

1914ல் திரு.சேஷாத்திரி, எம்.ஏ., என்பவரும் பின் திரு.யக்ஞ நாராயண அய்யர், எம்.ஏ., அவர்களும், 1922ல் திரு.எல்.எஸ். நாராயண அய்யர் அவர்களும் தொடர்ந்து முதல்வர்களாக இருந்தனர். 1927ல் சேலம் திரு.அ.இராமசாமிக் கவுண்டர், எம்.ஏ. எல்.டி., அவர்கள் முதல்வராக வந்தார்கள். அப்போது உயர்நிலைப் பள்ளி நிர்வாகம், திருவாளர்கள் அனந்தநாராயண சாஸ்திரி, வி.எம். இராமனாத அய்யர் அவர்களால் நடத்தப்பட்டு வந்தது. 1932 முதல் உயர்நிலைப் பள்ளிக்குத் தனித் தலைமை ஆசிரியர் நியமிக்கப்பட்டு திரு.பி.என். சங்கமேசுவர அய்யர் எம்.ஏ.எல்.டி., பொறுப்புக்கு வந்து 1947 முடிய அவர் தலைமை ஆசிரியராக இருந்தார். இப்பள்ளியில் ரைட் ஆனரபுள் **வி.எஸ். சீனிவாச சாஸ்திரி, சேலம் டைகர் சி.விஜயராகவாச்சாரி,** திருப்பதி வடமொழிக் கல்லூரி முதல்வராகப் பின் உயர்வுபெற்ற திரு.எஸ். சுப்பாராவ் போன்றவர்கள் ஆசிரியர்களாக இருந்து தொண்டாற்றியுள்ளனர். 1948ல் திருவாளர் ப.மாணிக்கம் பிள்ளை, பி.ஏ.எல்.டி. தலைமை ஆசிரியராகப் பொறுப்பேற்று 1961 வரை பணியாற்றி ஓய்வு பெற்றார். அவரைத் தொடர்ந்து 1967 வரை திரு.கே.நாராயணசாமி பிள்ளை பி.ஏ.எல்.டி. அவர்களும் 1972 வரை திரு. சோம. தீனதயாளன், பி.ஏ.பி.டி; அவர்களும் 1976 வரை திரு. கோ. தேவராசன், எம்.ஏ. பி.டி அவர்களும், 1977 வரை வெ. தேவராசன் அவர்களும், கோ. தேவராசன் அவர்கள் 1979 வரையிலும், வெ. தேவராசன் அவர்கள் 1981 வரையிலும், கோ. தேவராசன்

வையகத்திற் சிறந்த பண்பாடு
வாய்ந்தநாடு செந்தமிழ் நாடு - பாரதிதாசன்

அவர்கள் 1983 வரையிலும் தலைமை ஆசிரியர்களாக இருந்தனர். 1983 முதல் 1990 வரை திரு.சோம வீரகேசரி, எம்.ஏ.,எம்.எட்., தலைமை ஆசிரியராக இருந்தார். மாநகராட்சிப் பள்ளிகளின் நிர்வாகத்தை அரசே ஏற்றுக்கொண்ட 1990 ஏப்ரல் முதல் திரு.புலவர் பி.அண்ணாமலை, எம்.ஏ.,பி.எட்., தலைமை ஆசிரியராக இருந்து வருகிறார்.

இக்காலகட்டத்தில் இப்பள்ளியிலும் கல்லூரியிலும் புகழ் வாய்ந்த தமிழ்ப் பெருமக்கள் பலர் பணியாற்றிப் பேரும் புகழும் பெற்றுள்ளனர்.

மொழிஞாயிறு ஞா. தேவநேயப் பாவாணர் வரலாற்றுப் புகழ்படைத்த வரலாற்றுப் பேராசிரியர், பேராசிரியர் தி.வை. சொக்கப்பா, எம்.ஏ., எல்.டி., தமிழ்ப் பேராசிரியர்கள், உலக ஊழியனார், அந்தணர் க.நடேச உடையார், திருமதி. அ. காமாட்சி குமாரசாமி அம்மையார் போன்ற பெருமக்கள் நகராட்சிக் கல்லூரியில் பணியாற்றித் தம் பெயர் நிறுவியவர்கள். திருக்குறள் வகுப்புகளையும், தொல்காப்பிய வகுப்புகளையும், நகரமாந்தர்க்கு இப்பள்ளியிலிருந்து மாலை நேரத்தில் நடத்தித் தமிழ் வளர்த்தவர்கள்.

பழம்பெரும் புலவர்களான திரு. சோமநாதன் செட்டியார் அவர்களும், திரு. திம்மப்ப அய்யர் அவர்களும் சிறந்த தமிழாசிரியர்களாக விளங்கினர்.

உலகத்தனித்தமிழ் இயக்கம் கண்டு அதன் தலைவராக இருந்து தனித்தமிழ் வளர்த்த மொழிஞாயிறு பாவாணர் அவர்கள் வழியில் தொடர்ந்து அப்பணியாற்றி வரும், தனித்தமிழ்ப் பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்கள் துரை மாணிக்கம் என்ற பெயரில் மாணவராயிருந்து படித்து உயர்ந்ததும் இப்பள்ளியில்தான் என்பது குறிப்பிடத்தக்கது.

இவ்விருவருடனும் நிழல் போல் தொடர்ந்து அவர்கள் தொண்டில் தோன்றாத் துணையாய் நின்று பாவாணரின் பின் உலகத் தனித்தமிழ் இயக்கத்தின் தலைவராகவும், இயற்கை மருத்துவ இயக்கத்தின் தலைவராகவும், மனவளக்கலை மன்றத்தின் தலைவராகவும் விளங்கிய அரிமாப் புலவர் எனப் புலவர் மி.மு.சின்னாண்டார். அவர்களும் இப்பள்ளியில் பணியாற்றிச் சிறப்பெய்தியவராவார்.

புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் அவர்கள் கவிதையின்பால் ஈர்க்கப்பபட்டு அவர் வழி சென்று, பெருங்கவிஞராகப் பெயர் விளங்கும் சண்முகசுந்தரம் எனவிருந்த தன் பெயரை முருகுசுந்தரம் என மாற்றிக் கொண்ட பற்பல கவியரங்க மேடைகளில் உலாவந்த பாவேந்தர் விருது பெற்ற கவிதை இலக்கிய நூல்கள் பல எழுதிய நல்லாசிரியர் விருது பெற்ற கவிஞர் தி. முருகுசுந்தரம் பணியாற்றிப் புகழ்பெற்றதும் இப்பள்ளியில் தான்.

பாவேந்தர் நூற்றாண்டு விழாவில் தமிழக அரசால் சேலத்தைச் சார்ந்த மற்றும் இரு கவிஞர்களுக்கும், விருது வழங்கப்பட்டது அவர்களில் ஒருவரான புலவர் மு. அர்ச்சுணன் அவர்களும் இப்பள்ளியில் பணியாற்றியவர். மற்றொருவர் கவிஞர் செல்வி.அ. அருள்மொழி, பி.ஏ.,பி.எல்., பள்ளியின் இன்னாள் தலைமை ஆசிரியர் புலவர் பி. அண்ணாமலை அவர்களின் மகளார் ஆவர்.

பாவாணருடனும் பாரதிதாசனாருடனும் தந்தை பெரியாருடனும் நெருங்கிப் பழகும் நிலை பெற்றிருந்த தமிழ்ப்புலவர் தமிழ் மறவர் எனப் பெரியாரால் பட்டமளிக்கப் பட்ட, மானமிகு புலவர் வை. பொன்னம்பலனார் அவர்கள் பணியாற்றிப் பலருக்குத் தமிழுணர்வூட்டிய பள்ளிகளில் இப்பள்ளியும் ஒன்றாகும்.

அழியாதிருப்பது புகழொன்றே ஆகும் - பிற
அனைத்தும் மறைந்து போகும் - பாரதிதாசன்

தமிழ் மறவர் பொன்னம்பலனார் அவர்களால் தமிழ்ப் பணியாற்ற அவரது பகுதியிலிருந்து அனுப்பி வைக்கப்பட்டவர்கள் இருவர். ஒருவர் புலவர் செந்துறை சி. முத்துப்பிள்ளை, மற்றொருவர் புலவர் பி. அண்ணாமலை.

திரு. முத்துப்பிள்ளை அவர்கள், தன் பெயரைச் **செந்துறை முத்து** என அமைத்துக் கொண்டவர். ஏறத்தாழ 500க்கு மேற்பட்ட தமிழ்நூற்களை எழுதித் தமிழக எழுத்தாளர்கள் வரிசையில் முதலிடம் பெற்றுத் திகழும் ஒரு தலைசிறந்த தமிழறிஞர். இவர் தொட்டு எழுதாத துறைகளே தமிழில் இல்லை எனலாம். அனைத்துத் துறைகளிலும் நூல் எழுதி எழுத்துலகில் இமயமாய்த் திகழ்ந்து வருகிறார். தன் பணிக்காலம் முழுதும் இப்பள்ளியிலேயே இருந்து தமிழ்ப்பணியாற்றிய சான்றோர்.

இப்பள்ளியில் நல்லாசிரியராகப் பணியாற்றி 'வர்ச்சினியா' பல்கலைக் கழகத்தில் எம்.எஸ். படித்து கல்வித்துறையில் இணை இயக்குநர் வரை உயர்வு பெற்றுச் சிறந்துள்ள திரு. **இரா. இலக்குமி நாராயணன்** அவர்கள் இப்பள்ளியில் பணியாற்றிப் பள்ளிக்குப் பெருமை சேர்த்து விளங்குபவராவார்.

இதுவரை சேலம் நகராட்சித் தலைவர்களில் பெரும்பாலானவர்கள் இப்பள்ளியில் பயின்ற மாணவர்களாகவே இருந்துள்ளனர். அவர்களில் **வெங்கடப்ப செட்டியார்**, நகராட்சித் தலைவராக இருந்ததும் அவரது மகன் **எஸ்.வி. இராமசாமி** பார்-அட்- லா அவர்கள் மத்திய இரயில்வே அமைச்சராக ஆனதும் குறிப்பிடத்தக்கது. அவரே சேலம் சாரதா கல்லூரியையும் நிறுவியுள்ளது மகிழத்தக்கது.

இவர்கள் போல் பள்ளியில் படித்தும், பணியாற்றியும் புகழ்பெற்ற சான்றோர் பலர்; தொழில் மேதைகள் பற்பலர். சேலம் மாவட்டத் தொழில் வல்லுநர்களில் ஒருவரான, திருவாளர் **சேலம் ந.இராமசாமி உடையார்** அவர்கள் இப்பள்ளியின் பழைய மாணவர். கைத்தறி நெசவுத் தொழிலுக்கும் நூற்பாலைக்கும் முதலிடம் வகிக்கும் சேலம் மாவட்டத்தில், நூற்பாலைத் தொழிலில், உலகத்தரம் வாய்ந்த நூல் தயாரிக்கும் நிறுவனமாக **ஐ.எஸ்.ஐ.9001**-க்கு தேர்ந்தெடுக்கப்பட்டு சான்றளிக்கப்பட்ட ஒரே நிறுவனம், இந்தியாவில் **'சேலம் டெக்ஸ்டைல்'** என்ற திரு. இராமசாமி உடையார் அவர்களின் நிறுவனம் ஒன்றுதான் என்பது சேலத்துக்கே பெருமை தருவதொன்றாகும். பள்ளிக்குப் பெருமை தரும் இதுபோன்ற நிறுவனங்களைப் படைத்தவர் பற்பலர் இப்பள்ளியின் பழைய மாணவராக உள்ளனர். இப்பள்ளியின் நலக்குழு உறுப்பினரும் பழைய மாணவர் சங்கத்தலைவரும் ஆகிய திருவாளர் **க.அ.பழநிச்சாமி, பி.ஏ.,பி.எல்.** அவர்கள் இன்று தமிழ்நாடு பாண்டி மாநிலங்களின் வழக்கறிஞர்கள் மன்றத்தின் துணைத்தலைவராக உயர்ந்திருப்பதும் பள்ளிக்குப் பெருமை தருவதொன்றாகும். பழைய மாணவரான மறைந்த திருமிகு **அ.சங்கர முதலியார் பி.ஏ.பி.எல்.,** அவர்கள் அதன் தலைவராகவே பலமுறை இருந்துள்ளார். சாரணர் இயக்கத்திலும் உயர் பதவியிலிருந்து பணியாற்றி சேசஞ்சாவடியில் மிகப் பெரியதொரு நிலப்பரப்பை சாரணர் முகாம் நடத்த ஏற்படுத்திக் கொடுத்துள்ளார். தமிழகத்திலேயே சிறப்பாக அமைந்த அது, இன்று **'சங்கர் பார்க்'** என்று பல கட்டிடங்களுடன் விளங்கி வருகிறது.

சரியான தொகுப்பும் தொடர்பும் இல்லாததால் குறிப்பிடத்தக்க சான்றோர்களின் பெயர்கள் பல குறிப்பிட இயலாமல் உள்ளதற்கு அவர்கள் மன்னிப்பார்களாக.

இத்தகு சாதனையாளர்களுக்கு உரிய 1856ல் தொடங்கிய இப்பள்ளியின் தொடக்க

அறைக்குள் யாழிசை ஏதென்று எட்டிப்பார்த்தேன் - பேத்தி
நெட்டுருப் பண்ணினாள் நீதிநூல் திரட்டை! - பாரதிதாசன்

வகுப்புகளும் முதல் மூன்று படிவங்களும் நேரு கலையரங்கம் உள்ள போஸ் மைதானத்தில் சர்க்கஸ் காட்சி நடத்துமிடத்தில் இருந்த பழமையான மாடிக் கட்டிடத்தில் நடந்து வந்தது. அதன் மீது சங்கு (Siren) பொறுத்தப் பட்டதால் சங்கு ஊதும் கட்டிடம் என்று அது அழைக்கப்பட்டது. மாணவர் தங்கிப் படிக்கும் விடுதியும் அங்கு நடந்து வந்தது. அப்பொழுது அது டவுன் ஸ்கூல் என்று அழைக்கப்பட்டது. அக்கட்டிடத்தின் முன் வாயிலின் தாழ்வாரப்பகுதியை மேடையாகப் பயன்படுத்திப் பொதுக்கூட்டங்கள் பிற்காலத்தில் நடத்தப்பட்டு வந்தன. இடிக்கப்பட்ட விக்டோரியா திரையரங்கு வரையிலும் இருந்த பகுதி முழுதும் பள்ளிக்கு விளையாட்டுத் திடலாகப் பயன்படுத்தப்பட்டு வந்தது.

சேலம் நகராட்சிக் கடைகள் கட்டப்பட்டுள்ள போஸ் மைதானம், பெரியார் பேரங்காடி உட்பட தலைமை அஞ்சலகம் தொடங்கி, காந்தியார் சிலை, நேரு கலையரங்கம், ஆற்றங்கரை மாரியம்மன் கோவில் வரை உள்ள மதுரைப் பிள்ளை பேருந்து நிலையம் அடங்க பரந்துபட்ட சுமார் 100 ஏக்கர் பகுதி முழுவதும் இந்தப் பள்ளியின் கல்வி வளர்ச்சிக்காகவும், மகளிர் கல்வி வளர்ச்சிக்காகவும், அருணாசல ஆசாரித் தெரு என்று பெயருள்ள தெருவிலிருந்த திரு.அருணாசல ஆசாரி என்பவரால் ஆவணம் செய்து நகராட்சிக்குத் தரப்பட்டுள்ளது. அவர் ஆங்கிலேய மன்னருக்குச் சேலத்து இரும்பிலிருந்து செய்து கொடுத்த வாள் ஒன்றுக்காக அவர் பெற்ற பரிசாம் இந்நிலங்கள். அந்த வாள் இன்றும் இலண்டன் தொல் பொருள் நிலையத்தில் (Museum) உள்ளது.

இப்பள்ளி சேலம் மாவட்டத்தில் மட்டு மல்லாது சென்னை மாகாணமாக இருந்த காலத்திலேயே மாகாணத்தில் பெரிய சிறந்த பள்ளிகளில் ஒன்றாகத் திகழ்ந்தது. சகாதேவ புரம் என்ற பகுதியில் 'இரயில்வே கேட்' அருகில் இப்பள்ளிக்குப் பெரிய விளையாட்டு மைதானம் நகராட்சியால் பின் அமைத்துக் கொடுக்கப்பட்டது. சங்கூதும் கட்டிடத்தில் இருந்த 6 முதல் 8 வரையிலான வகுப்புகளுக்கு அங்கு வகுப்பறைகள் அமைத்து மாற்றப்பட்டன. கல்வி வளர்ச்சிக்காக அன்று நகராட்சி நடத்திய பொருட் காட்சி வருமானம் கல்வி வளர்ச்சிக்குப் பயன்படுத்தப்பட்டது.

'மாணிக்கம் பிள்ளை காலம்' என்று குறிப்பிட்டுக் கூறக்கூடிய நிர்வாகத் திறம் பெற்ற லண்டன் மாணிக்கம் பிள்ளை என்ற திரு.ப.மாணிக்கம் பிள்ளை தலைமை ஆசிரியராக இருந்தபோது, 1856 முதல் 1956 முடிய பள்ளி தொடங்கி நூறாண்டு நிறைவுற்றதைச் சிறந்த முறையில் விழாச் செய்து சிறப்பிக்க முயற்சிகள் மேற்கொண்டார். இப் பள்ளியின் பழைய மாணவரான திரு.வி. இராமலிங்க முதலியார் என்பவர் நகராட்சித் தலைவராக அப்போது இருந்தார். சகாதேவ புரத்திலிருந்த விளையாட்டுத்திடலில் புதிய பன் மாடிக்கட்டிடங்கள் எழுப்பி அங்கு இப்பள்ளியைக் கொண்டு செல்ல அவர் காலத்தில் திட்டமிடப்பட்டது. அந்நாளில் பள்ளிக் கல்வி இயக்குநராக இருந்த பகலுணவுத் திட்டம் தந்த திருவாளர் நெ.து.சுந்தர வடிவேல், எம்.ஏ.,எல்.டி., அவர்கள் பள்ளிக்கு வருகை தந்தார்கள். அவரது முயற்சியால் நூற்றாண்டு விழாவை முன்னிட்டுப் பள்ளிக்குப் புத்துணர்வுக் கலை மன்றம் ஒன்று மத்திய அரசின் உதவியுடன் கட்டி ஏற்பாடு செய்யப்பட்டது.

அடுத்து வந்த நகர மன்றத் தலைவரும், இப்பள்ளியின் பழைய மாணவருமான திரு.மா.கோபால் என்பவர் காலத்தில் மத்திய அரசு வழங்கிய ரூ.35,000/- நிதியுதவியில் சுமார் 80 ஆயிரம் ரூபாய் மதிப்பில் புத்துணர்வுக் கலை மன்றம் விளையாட்டுத் திடலின் வட பகுதியில் கட்டி முடிக்கப்பட்

துன்பம் பிறக்கு! நல் இன்பம் தமக்கெனும் கெட்டமனோபாவம்
அன்பினை மாய்க்கும் அறங்குலைக்கும் புவி ஆக்கந்தனைக் கெடுக்கும்.

டது. 7.10.1960-ல் அன்றைய தமிழக முதலமைச்சர் பெருந்தலைவர் மாண்புமிகு. கு.காமராசர் அவர்களால் அம்மன்றம் மட்டும் திறந்து வைக்கப்பட்டது. பள்ளி நூற்றாண்டு விழாவும் போட்ட பிற திட்டங்களும் ஏட்டளவுடன் நின்றுவிட்டன.

திரு. ப. மாணிக்கம்பிள்ளை அவர்கள் காலத்தில் 1948 முதல் 1961 வரை ஆண்டுதோறும் பள்ளி ஆண்டு மலர் சிறப்பாக வெளிவந்துள்ளன. அதன் பின் 1976ல் தான் ஒரு மலர் வெளி வந்துள்ளது. இவ்வாண்டு நூற்றாண்டு விழாமலர் வெளியிடப்படுகிறது. உயர்நிலைப் பள்ளியாக அரசு ஏற்பினைப் பெற்று 1891 முதல் 1991 முடிய முடிந்த நூற்றாண்டை நூற்றாண்டாகக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது. பள்ளியின் சீர்திருத்த வேலைகளைப் பெற்றோர் ஆசிரியர் கழகம் முன்னின்று நடத்தி வருகிறது. அதன் 1993ல் சிறந்த பணியாக 51 ஆயிரம் ரூபாய் புரவலர் நிதியாகச் சேர்த்து வங்கியில் நிலை வைப்பில் போட்டுள்ளது. 1990 முதல் 1994 மே வரை பெற்றோர் ஆசிரியர் கழகம் செய்துள்ள பணி தனியாக வெளியிடப்பட்டுள்ளது.

இப்பள்ளி ஒரு பன்னோக்குப் பள்ளியாகும். இங்கு வடமொழி (சமஸ்கிருதம்), உருது, இந்தி ஆகிய மொழிகள் கற்பிக்கப்பட்டு வந்தன. 1947 முதல் பொறியியல் கல்வியும் ஒரு சிறப்புப் பாடமாக ஒன்பதாம் வகுப்பு முதல் கற்றுத்தரப்பட்டு வருகிறது. 1957 முதல் செயலாண்மைத் துறைக்கல்வியும், தட்டெழுத்துப் பொறிகள் வசதியுடன் கற்றுத்தரப்பட்டு வருகிறது.

கண்டு, கேட்டு, கற்கும் முறையில் பாடம் பயிற்ற 70 படச்சுருளுடன் ஒரு படச்சுருள் நூலகமும் தொடங்கப்பட்டு நடந்து வந்தது. இப்பள்ளியில் 10,000க்கும் மேற்பட்ட பழம்பெரும் நூல்களைத் தமிழிலும், ஆங்கிலத்திலும் கொண்ட சிறந்த நூலகமும் இயங்கி வருகிறது. முன் இதற்கென ஒரு நூலகரும் நியமிக்கப்பட்டிருந்தார்.

1978 முதல் இப்பள்ளி 12 ஆம் வகுப்பு வரை கற்பிக்கும் மேல்நிலைப் பள்ளியாக உயர்த்தப்பட்டது. முதல் தொகுதியான கணக்குப்பிரிவும் (ஆங்கிலம் - தமிழ் இருவழியிலும்) தமிழில் இரண்டாம் தொகுதியான அறிவியல் தொகுதியும், மூன்றாம் தொகுதியில் பொருளியல், வணிகவியல், கணக்குப்பதிவியல் மூன்றுடன், வரலாறு சேர்ந்த ஒரு தொகுதியும், சிறப்புத்தமிழ் சேர்ந்த மற்றொரு தொகுதியும், வீட்டு மின் இணைப்பும், பழுது பார்த்தலும், கொண்ட பொறியியல் தொகுதியும், தட்டெழுத்துப் பயிற்சியுடனான அலுவலக மேலாண்மைத் தொகுதியும், ஏற்படுத்தப்பட்டு நடந்து வருகின்றன. இடையில் சிறப்புத் தமிழ் தொகுதி நிறுத்தப்பட்டது. பின் 1990-91ல் மீண்டும் இத்தொகுதி தொடங்கப்பட்டு நடந்து வருகிறது.

மீண்டும் சிறப்புத் தமிழ் ஒழிக்கப்பட்டாலும் வியப்படைவதற்கில்லை. இப்பள்ளியில் வடமொழி - சமஸ்கிருதம் நடத்தப்பட்டு வந்தது. திரு.நடராசன் என்பவர் வடமொழி கற்பித்து வந்தார். அவருக்கு முன் வடமொழி கற்பித்து வந்தவர் பிராமணர். அந்த இடத்திற்கு திரு.நடராச கவுண்டர் என்ற சூத்திரர் சேர்மன் , இராவ் பகதூர் பி. இரத்தினசாமி பிள்ளை அவர்கள் பரிந்துரையால் நியமிக்கப்பட்டார். வேதம்பயின்ற சூத்திரன் புரோகிதம் பண்ணவோ கோயிலில் மந்திரம் சொல்லி அர்ச்சனை செய்யவோ அனுமதியில்லாத காலமானதால் அவருக்குப் பள்ளியில் ஆசிரியப்பணி அளித்தனர். ஆனால், வேதம் படிக்க அவரிடம் பிராமண மாணவர்கள் விரும்பி வரவில்லை. வராததுடன், படித்துக் கொண்டிருந்த சில பிராமண மாணவர்களும் சூத்திரரான அவர் வடமொழி நடத்தக் கூடாதென போராட்டம் நடத்தினர். வகுப்பில் அவருடன் வம்பு செய்து வேட்டியைப்

கூழுக்குப் பற்பலர் வாடவும் சிற்சிலர் கொள்ளையடிப்பதும் நீதியோ?
புவி வாழ்வதுதான் எந்தத் தேதியோ?

பிடித்து இழுத்து அவிழ்த்துவிட்டனர். இத்த னையையும் சமாளித்துக் கொண்டு அவர் வடமொழி கற்பித்தார். அவர் எதிர்பாராமல் இயற்கை அடைந்தார். அத்துடன் வடமொ ழிப் பாடம் நடத்த ஆசிரியர் நியமிக்கப்படா மல் வடமொழி நடத்துவதும் பள்ளியில் நிறுத்தப்பட்டது.

உருது பாடமும் நடந்து வந்தது. அவ் வாசிரியர் ஒய்வு பெற்றதும் அம்மொழி கற்பிப்பதற்கு ஆசிரியர் இன்றி அம்மொழி கற்பிப்பதும் நின்றுபோனது.

இப்படி தச்சுத்தொழில், கருமார் தொழில், போன்றவைகளும் அதற்குரிய ஆசிரியர் ஒய்வு பெற்றால் அவைகளும் ஓய்வு பெற்று விட்டன. இது இப்பள்ளியின் மரபாகப் போய்விட்டது.

இப்பள்ளியின் அனைத்து வகுப்பறைக ளும் ஓட்டுக் கட்டிடத்திலேயே இயங்கி வந்தது. 1979 இல் 16 அறைகளுடன் ஒரு தார்சுக் கட்டிடம் மேல்நிலைக்கு என கட்டப் பட்டுள்ளது. அதன் ஒரு பகுதிக்கு **அறிஞர் அண்ணா பவள விழாக் கட்டிடம்** என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது. முதல் மாடிக் கட்டிடம் 1982ல் 10 அறைகளுடன் திறக்கப் பட்டுள்ளது. அதற்கு மகாகவி பாரதியார் *நூற்றாண்டு விழா நினைவுக் கட்டிடம்* என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது.

நடுவணரசு உதவியுடன் 1990ல் அறிவி யல் ஆய்வகத்திற்கு மூன்று வகுப்பறைகள் கட்டித்தரப்பட்டுள்ளன. 12.07.1993ல் அவ் வறைகள் தந்தை பெரியார் அறிவியல் ஆய் வகம் என்று பெயர் சூட்டப்பட்டுத் திறந்து வைக்கப்பட்டன.

பெற்றோர், ஆசிரியர் கழகத்தின் மூல மாகப் பள்ளி நடுவிலுள்ள பயன்படுத்த முடியாத நிலையிலிருந்த நடு மன்றக்கூடம் புதுப்பிக்கப்பட்டு யாற்றியமைக்கப்பட்டு 105 அடி நீளமும் 22 அடி அகலமும் உடைய நீண்ட மன்றமாக மேடையுடன் புதுப்பிக்கப் பட்டது. 30 அடி நீள மைய மேடையின் பக்க அறைகள் இரண்டும் மேடையை நோக்கி இருக்குமாறு அமைக்கப்பட்டு மேலே பலகை அடைப்புகள் செய்யப்பட்டு, ஒலி, ஒளி, வளி, வசதிகள் கொடுக்கப்பட்டு புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் நூற்றாண்டுவி ழாப் புத்துணர்வுக் கலைமன்றம் என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது. இவையன்றி மொத்தம் 39 வகுப்பறைகள் உடையதாகப் பள்ளியின் கட்டிட வசதி அமைக்கப்பட்டுள் ளது.

இப்பள்ளிக்கு என இருந்த விளையாட் டுத்திடல் 2.13 ஏக்கர் உடையது. அதில் மத்திய அரசு வழங்கிய நிதியுதவியுடன் கட்டப்பட்ட மாணவர் புத்துணர்வுக் கலை மன்றம் ஒன்றும் இப்பள்ளிக்கு உண்டு. ஆனால், அது இன்று பள்ளிக்குப் பயன்படா தபடி விளையாட்டுத் திடலில் கல்யாண மண்டபம் கட்டி அதற்கு அன்னசத்திரமாக ஆக்கப்பட்டுள்ளது. அதை செய்தவரும் இப் பள்ளியில் பயின்ற மாணவர்தான்.

இப்பள்ளியில் பயின்ற பல்லோர் இந் திய அளவிலும் உலக அளவிலும் பரவிய பேரும் புகழும் பெற்றவர்களாகத் திகழ்கின்ற னர். சிறந்த அறிவியலாளர்களாகவும் ஒலிம் பிக் விளையாட்டில் கலந்து கொண்டவர்களா கவும், பெருங்கவிஞர்களாகவும், நகரமன்றத் தலைவர்களாகவும், சட்டமன்ற, பாராளு மன்ற உறுப்பினர்களாகவும், வழக்கறிஞர்க ளாகவும், வழக்கறிஞர் மன்றத் தலைவர்களா கவும் பொறியாளர், மருத்துவர்களாகவும், நடுவணரசில் அமைச்சராகவும், தொழில் வல்லுநர்களாகவும் விளங்கியுள்ளனர் - விளங்கி வருகின்றனர். எளிய, குடும்பங்க ளைச் சேர்ந்த ஏழை, எளிய, நடுத்தர மக்களின் புகலிடமாக விளங்கிவரும் இப் பள்ளி மேலும் பல தேவைகளைப் பெற வேண்டிய நிலையிலேயே இன்றும் உள்ளது.

பிறவியில் உயர்வும் தாழ்வும் சொல்லல் மடமை - இந்தப்
பிழைநீக்குவதே உயிருள்ளாரின் கடமை

தற்போது 6-ஆம் வகுப்பில் 4 பிரிவுகளும், 7ல் மூன்று பிரிவுகளும், 8ல் மூன்று பிரிவுகளும், 9ல் ஆறு பிரிவுகளும், 10ல் நான்கு பிரிவுகளும் இயங்கி வருகின்றன. 11ல் 177 மாணவர்களும், 12ல் 239 மாணவர்களும் ஆக 1340 மாணவர்கள் பள்ளியில் பயில்கின்றனர்.

முதுகலை ஆசிரியர்கள்	12
அலுவலக மேலாண்மை ஆசிரியர்	1
பொறியியல் ஆசிரியர்	1
உடற்கல்வி இயக்குநர்	1
பட்டதாரி ஆசிரியர்கள்	9
தமிழாசிரியர்கள்	5
இடைநிலை ஆசிரியர்கள்	12
உடற்கல்வி ஆசிரியர்கள்	3
பகுதிநேர ஆசிரியர்கள்	2

ஆக 46 ஆசிரியர்கள் பணியாற்றி வருகின்றனர். தலைமை ஆசிரியர் ஒருவரும், மூன்று வகைத் துணைத்தலைமை ஆசிரியர்களும் பதவியிலுள்ளனர். தலைமை ஆசிரியருடன் இம்மூவரும் மற்றும் மூன்று ஆசிரியர்களும் 1994 மே 31-ல் ஓய்வு பெறுகின்றனர்.

மாநிலத் தேர்ச்சி விகிதத்திற்குக் குறையாத அளவில் மாணவர் தேர்ச்சி விகிதம் இருந்து வருகிறது. மாணவர்களிடம் ஒழுக்கமும், கட்டுப்பாடும் பேணிக்காக்கப்பட்டு வருகிறது. தேர்வு முறைகளில் கண்டிப்பும், கட்டுப்பாடும் மிக்கப் பள்ளி என்ற பெயருடன் இப்பள்ளியின் பழமைக்கு இன்றும் மெருகூட்டி வருகிறது.

— புலவர் பி. அண்ணாமலை
(தலைமை ஆசிரியர்)

புகழ் மொழிகள்

பெரியார் என்னும் பெயருக்கு ஏற்ற
பெருமைவீரர்!
மூடநம்பிக்கை ஒழித்த முத்தமிழ்க் காவலர்!
தீண்டாமை ஒழித்த திராவிடத் தமிழர்!
சாதி என்னும் பேயை ஒழித்த சங்கத் தமிழர்!
சமுதாயம் போற்றும் சந்திரன்!
அறியாமை ஒழித்த அறிஞன்!

— கோ. பாபு, 12-ம் வகுப்பு சிறப்புத் தமிழ்

ஓர் பெண்ணின் குரல்

பத்துத் திங்கள் பக்குவமாய்ச் சுமந்தவளோ!
பெற்றெடுத்தாள் பெண் ஒன்று!
ஊருறவு அதை அறிந்து முகம் சுளித்துப்
போனதங்கே!
கட்டிலிட்ட கணவனும் தொட்டிலிட
மறுத்துவிட்டான்!
வாழ்த்தி வைத்த மாமியும் வாளாக இல்லாமல்
குழந்தையின் உயிர்போக்கக் குழிதேடித்
திரிகின்றாள்
பட்டதுயர் தீரவில்லை பழிச்சொல்லும்
மாளவில்லை
பாலூட்டத் துடிக்கின்றேன், பாவியவன்
தடுக்கின்றான்!
பெண் இனத்தைப் போற்றுகின்ற தென்னகமே
பெண்ணை வாழ வைப்பது இப்படித்தானா?

— கோ. பாபு
12-ஆம் வகுப்பு சிறப்புத் தமிழ் பிரிவு

தன்பெண்டு தன்பிள்ளை சோறு வீடு
சம்பாத்தியம் இவையுண்டு தானுண்டென்போன்
சின்னதொரு கடுகுபோல் உள்ளங்கொண்டோன்
கடுகுக்கு நேர்மூத்த துவரையுள்ளம்!
கன்னலடா என் சிற்றூர் என்போனுள்ளம்
தெருவோர்க்கும் பயனற்ற சிறிய வீணன்!

— புரட்சிக் கவிஞர்

என்றுமே ஒருவர் செய்த நன்றியை மறக்காதே
இந்நாட்டின் பண்பாட்டைத் துறக்காதே — புரட்சிக்கவிஞர்

என் தலைமையாசிரியர்கள்

கவிஞர் தி. முருகுசுந்தரம்.

'சிப்பாய்க்கலகம்' என்று ஆங்கில வரலாற்றாசிரியர்களால் குறிப்பிடப்பட்ட, முதல் சுதந்திரப்போர் நடைபெற்ற கி.பி.1857 ஆம் ஆண்டில், 'ஜில்லா ஸ்கூல்' என்ற பெயரில், சேலம் மாவட்டத்தில் முதன் முதலாகத் தொடங்கப்பட்ட பள்ளி இது. 'வெள்ளி நாக்குச் சொல் வீரர்' (Silver tongue Orater) என்று இந்திய நாட்டினரால் பாராட்டப் பட்ட மேன்மைமிகு வி.எஸ்.சீனிவாச சாஸ் திரி இப்பள்ளியில் ஆசிரியராகப் பணிபுரிந்தி ருக்கிறார் என்பது இப்பள்ளியின் வரலாற் றில் குறிப்பிடத்தக்க ஒரு செய்தி.

சேலம் மாநகரத்தின் தொன்மையான பள்ளி என்பதோடு, சேலம் மாவட்டத்துக்குப் பெருமை தேடித்தந்த அறிஞர்களையும், அறி வியல் வல்லுநர்களையும், மருத்துவர்களை யும், வழக்கறிஞர்களையும், இலக்கிய வாதிக ளையும் உருவாக்கித் தந்த பெருமையும் இப்பள்ளிக்கே உண்டு. இப்பள்ளியின் புக ழுக்கும், நிலைத்த வரலாற்றுக்கும் அடிப்ப டைக் காரணமாக விளங்கியவர்கள் இதைத் திறம்பட நிர்வாகம் செய்த தலைமையாசிரி யர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

1956-57 ஆம் கல்வியாண்டுத் தொடக் கத்தில் செவ்வாய்ப்பேட்டை நகரவை உயர் நிலைப் பள்ளியிலிருந்து நான் இங்கு மாற்றப் பட்டேன். அப்போது இப்பள்ளியில் தலை மையாசிரியராக இருந்தவர் திருவாளர் ப. மாணிக்கம் பிள்ளை அவர்கள்.

திரு. ப. மாணிக்கம்பிள்ளை, பி.ஏ., எல்.டி.

இவரை இலண்டன் மாணிக்கம் பிள்ளை (London Returned) என்று எல்லாரும் குறிப்பிடு வர். இவர் எம்.ஏ., படிப்பதற்காக இலண் டன் சென்றுவிட்டு, அந்நகரின் தட்பவெப்ப நிலை ஒத்துக் கொள்ளாத காரணத்தால் திரும்பி வந்துவிட்டார். தமது இங்கிலாந்து அனுபவங்களை ஒரு கட்டுரையாக எழுதியி ருக்கிறார். அக்கட்டுரை பத்தாம் வகுப்பு மாணவர்களுக்குப் பாடமாகவும் வைக்கப் பட்டிருந்தது.

ஒரு தலைமையாசிரியருக்குரிய எல் லாப் பண்புகளும் வாய்க்கப் பெற்றவர் மாணிக்கம் பிள்ளை. இவர் பெரிய நிலக்கி ழார்; காவிரிக்கரையில் நிறைய நிலபுலன்கள் இவருக்கிருந்தது; செல்வாக்கு மிக்கவர். சொந்தமாகக் கார் வைத்திருந்தார்.

சில நாட்களில் காரிலும், சில நாட்களில் குதிரை வண்டியிலும் பள்ளிக்கு வருவார். அவர் பள்ளி வாயிலுக்குள் நுழைந்தால் பள்ளி மணிப்பொறி சரியாக 9.45அய் காட் டும். காலந்தவறாமையைக் கண்டிப்பாகக் கடைப் பிடிப்பவர்.

நடுத்தர உயரம்: பளிச்சென்ற மாநிறம். எப்போதும் ஆங்கில உடையில் கழுத்துச் சுருக்கோடு 'டிரிம்'மாக வருவார். வேறு யாருக்கும் எழுந்து நிற்காத கஃபூர் என்னும் 'பியூன்' இவரைக் கண்டதும் எழுந்து நின்று வரவேற்பான். நாகப்பன் என்ற மற்றொரு

எங்கள் வாழ்வும் எங்கள் வளமும்
மங்காத தமிழென்று சங்கே முழங்கு! — பாரதிதாசன்

பணியாள் மூலையில் ஒடுங்கிப்போய் நடுக்கத்தோடு நிற்பான். ஆசிரியர்கள் அவசர அவசரமாகக் கையில் சாக்கட்டியை எடுத்துக் கொண்டு வகுப்புகளுக்கு விரைவர். இவர் காலத்தில் இவை அன்றாடக் காட்சிகள்.

மாணிக்கம் பிள்ளையிடம் மரியாதை கலந்த ஒருவித அச்சம் ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் இருந்தது. இவர் தம் அறையை விட்டு வெளியில் வரும் வழக்க மில்லை. ஆனால், பள்ளி முடுக்கிவிட்ட யந்திரமாக வேலை செய்யும்.

நாள்தோறும் பள்ளியில் ஒரு சுற்று வருவார்; யாரிடமும் பேசமாட்டார்; ஆசிரியர்களோடு பேச வேண்டுமானால், தம் அறைக்குள் அழைத்துத்தான் பேசுவார்; சத்தம் போட்டுப் பேசமாட்டார். ஆனால், அவர் பார்க்கும்போது பார்வை சுடுவதுபோல் இருக்கும்.

பல சிறப்புக்கள் பெற்ற இவரிடத்தில் ஒரே ஒரு குறையுண்டு. ஆசிரியர்களை உளவறிய ஒருவரை இவர் ஏற்பாடு செய்து வைத்திருப்பார்; அவர் கூறுவதையெல்லாம் இவர் நம்பிவிடுவார்.

திரு. நாராயணசாமி பிள்ளை, பி.ஏ.,எல்.டி

1960-61 ஆம் ஆண்டுகளில் ஐம்பது வயதுமிக்க ஒரு பெரியவர் நான்கு நாள் தாடியோடும், கலைந்த தலையோடும், அழுக்குச் சட்டையோடும், தோளில் சுழற்றிப் போட்ட துண்டோடும் ஒரு கையில் பையையும், மறு கையில் பையனையும் பிடித்துக் கொண்டு எங்கள் பள்ளிக்கும் நகராட்சி அலுவலகத்துக்கும் நடந்து கொண்டிருப்பார். அடிக்கடி மாணிக்கம் பிள்ளையையும் வந்து பார்ப்பார். மாணிக்கம் பிள்ளை ஓய்வு பெற்ற பிறகு அப்பெரியவர்தான் எங்கள் பள்ளிக்குத் தலைமையாசிரியராக வந்தார். அவர் பெயர் திருவாளர் நாராயணசாமி பிள்ளை.

தோற்றத்திலும் நடையுடை பாவனைகளிலும் கேலிக்குரியவராகக் காட்சியளித்தாலும், இவர் கடமையுணர்விலும், நேர்மையிலும் ஒப்பற்றவர் என்பது அவர் பொறுப்பேற்ற பின் தெரிய வந்தது. இரவு பகலாகப் பள்ளியே கதியென்று கிடப்பார். இளகிய உள்ளம் படைத்தவர்; பிறருக்கு உதவும் உள்ளப் பாங்கும், பிறருக்காகத் தமது கைப் பொருளைத் தாராளமாகச் செலவிடும் பண்பும் உடையவர்; ஆனால், பள்ளி வேலைகளில் கண்டிப்பானவர். வேண்டியவர் வேண்டாதவர் என்ற வேறுபாடு கருதாதவர்; போலி நாகரிகத்தைக் கண்டு மயங்காதவர்.

ஆசிரியர்களின் உள்ளம் நோகாதவாறு நயமாகவும், நட்பாகவும் எடுத்துக்கூறிப் பள்ளிக் காரியங்களைச் சாதித்துக் கொள்வார். இவர் மீது கொண்டுள்ள அன்பாலும், மதிப்பாலும் ஆசிரியர்கள் தாங்களாகவே தங்கள் கடமைகளை ஒழுங்காகச் செய்து முடிப்பர்.

பொதுவாகப் பள்ளி வேலை நேரங்களில் ஆசிரியர்கள் வெளியில் செல்லுவதில்லை. ஒருநாள் பள்ளி நேரத்தில் நான் தேநீர் அருந்துவதற்காக வெளியில் சென்று கொண்டிருந்தேன். அப்போது வெளியில் ஏதோ வேலையாகச் சென்று திரும்பிய நாராயணசாமிப் பிள்ளை எதிரில் வந்தார். என்னை வீதியில் பார்த்த அவர் சிரித்த முகத்தோடு ''எங்க கிளம்பிட்டீங்க?'' என்று அமைதியாகக் கேட்டார்.

''தேநீர் அருந்தலாமுன்னு...'' என்று நான் இழுத்தேன்.

'அட வாங்க நீங்க... இந்த வெயில் நேரத்தில வெளியில போய்க்கிட்டு...'' என்று சொன்னவர் என் கையைப் பிடித்து அவர் அறைக்கு அழைத்துச் சென்றார்.

புகழ் உள்ளான் சாவதே இல்லை
இகழ் உடையானோ வாழ்வதே இல்லை! — பாரதிதாசன்

அறைவாயிலில் நின்று கொண்டிருந்த அலுவலகப் பணியாளனைக் கூப்பிட்டு ''நாகப்பா! ஐயா தேநீர் சாப்பிடனுமாம். ஓடிப்போய் இரண்டு தேநீர் வாங்கிட்டுவா'' என்று சொல்லிக் காசும் அவரே கொடுத்தார். நாராயணசாமி பிள்ளையின் அணுகுமுறை எப்படிப்பட்டது என்பதை விளக்குவதற்காக இந்நிகழ்ச்சியைச் சொன்னேன்.

நாராயணசாமி பிள்ளைக்கு வாழ்க்கையில் சில சிக்கல்களுண்டு. இருந்தாலும் அதையெல்லாம் பொருட்படுத்தாமல் எல்லாரிடமும் கலகலப்பாகப் பழகுவார். அவருக்குக் காது கொஞ்சம் மந்தம். என்றாலும், முகத்தைச் சாய்த்து பிறர் சொல்வதைப் பொறுமையோடு கூர்ந்து கேட்பார்.

அவருக்கு ஆன்மீகத்திலும் நல்ல ஈடுபாடு உண்டு. தமது 55 ஆம் வயதில் ஆனந்தமார்க்கம் என்ற இயக்கத்தில் தீவிர உறுப்பினராகிக் காவியணிந்து பீகார் சென்று அம்மார்க்கத்தின் தலைவரான ஆனந்த மூர்த்தியை நேரில் கண்டு ஆசி பெற்றுத் திரும்பினார்.

திரு. சோ. தினதயாளன், பி.ஏ.,பி.டி.

இவர் உயர்ந்த உறுதியான உடல் வாகும், தோற்றமும் உடையவர். கடுமையான உழைப்பாளி. பள்ளியில் தேசிய மாணவர்ப் படை அதிகாரியாக நீண்டநாள் பணிபுரிந்தவர். கலப்பு மணம் செய்து கொண்ட சீர்திருத்தவாதி; துணிச்சலானவர்.

இந்தப் பள்ளியிலேயே பயின்று, இப்பள்ளியிலேயே ஆசிரியராகப் பணியைத் தொடங்கி, இப்பள்ளியிலேயே தலைமையாசிரியராகப் பதவி உயர்வு பெற்று அப்பணிக் காலத்திலேயே உயிர் விட்டவர். வேறு எந்தத் தலைமையாசிரியருக்கும் இல்லாத நெருங்கிய ஒட்டுறவு இந்தப் பள்ளிக்கும் இவருக்கும் உண்டு. இது இவருக்கே உரிய தனிச்சிறப்பு.

இவர் முகம் எப்போதும் சிந்தனையால் கனத்துப் போயிருக்கும்; சிரிக்கமாட்டார். இவரால் முடியாதது ஒன்றே ஒன்று! என்ன? சும்மா இருப்பது!

இவர் ஆசிரியர்களிடம் வேலை வாங்குவதில் சமர்த்தர்; தாட்சண்யம் பார்க்க மாட்டார்; அவசியம் ஏற்படும்போது கடுஞ்சொற்களைப் பயன்படுத்தவும் தயங்கமாட்டார். இவர் காலத்தில் பள்ளியின் கல்வித் தரமும் தேர்வு வெற்றி விழுக்காடும் உயர்ந்தன; புகழும் கூடியது. அதனால் தமிழக அரசு இவருக்கு நல்லாசிரியர் விருது வழங்கியது. இவரிடத்தில் உள்ள குறை, இவருக்கு நண்பர்கள் கிடையாது.

திரு. வெ. தேவராசன், பி.ஏ.,பி.டி.

இவரை எனக்கு இளமையிலிருந்தே தெரியும். என்னோடு ஒன்றாக இதே பள்ளியில் ஆசிரியப் பணி செய்தவர்.

இவருடைய இளமை வாழ்க்கை, எதைப் பற்றியும் யாரைப்பற்றியும் கவலைப்படாத வாழ்க்கை. வசதியான குடும்பத்தில் பிறந்தவர். ஆசிரியராக இருக்கும்போதே சொந்தமாகக் கார் வைத்திருந்தார். விடுமுறை நாட்களில் காரை எடுத்துக்கொண்டு உல்லாசமாக வெளியூர்களுக்குச் சென்று வருவார். பள்ளி வேலைகளை ஒழுங்காகச் செய்வார். ஓய்வாக இருக்கும் பிரிவேளைகளில் சட்டையைக் கழற்றி மாட்டிவிட்டு ஆசிரியர் அறையில் அமைதியாய்ப் படுத்திருப்பார். வம்புச் சண்டைக்குப் போகமாட்டார். வந்த சண்டையையும் விடமாட்டார். இயல்பாகவே நியாயத்துக்குப் போராடும் துணிச்சலும் நெஞ்சுரமும் மிக்கவர். நூல்கள் படிப்பதும் 'லிட்டரசி

சூதும் வாதும் நிறைந்த பூதலமீது நல்லார்
ஓதும் வழி நடந்தால் யாதும் துயரமில்லை — புரட்சிக் கவிஞர்

கிளப்'பில் சென்று விளையாடுவதும் இவர் பொழுது போக்குகள் ஆங்கிலத்தில் நல்ல புலமையுடையவர்; பிறர் புலமையையும் திறமையையும் மதிப்பவர்.

எல்லா ஆசிரியர்களும் இவரைக் கண்டால் ஒதுங்கிச் சென்று விடுவார்கள். பழகினாலும் அச்சத்தோடு பழகுவார்கள். நான் அவரைப் புரிந்து கொண்டு அன்போடு பழகுவேன்; அவரும் என்னிடம் நன்கு பழகுவார்.

இவரும் இப்பள்ளியில் பயின்று இப்பள்ளியிலேயே ஆசிரியராகச் சேர்ந்து தலைமையாசிரியராக உயர்ந்து இப்பள்ளியிலேயே ஓய்வும் பெற்றவர். தமிழக அரசின் நல்லாசிரியர் விருது பெற்றவர்.

அவர் முதன் முதலாக இப்பள்ளிக்குத் தலைமையாசிரியராக வந்தபோது, ''இந்தக் கவலையில்லாத மனிதர் பள்ளியை எப்படிப் பொறுப்பாக நிர்வகிக்கப் போகிறார்?'' என்று எல்லாரும் ஐயத்தோடு பார்த்தனர். ஆனால், தமது செயல் திறமையாலும், பொறுப்புணர்ச்சியாலும் அந்த ஐயத்தைப் போக்கிப் பள்ளியைத் திறம்பட நிர்வாகம் செய்தார்.

அவர் பள்ளித் தலைமையாசிரியராகப் பொறுப்பேற்ற காலத்திலேயே நான் பல நூல்களுக்கு ஆசிரியன்; கவியரங்க மேடையிலும், பேச்சு மேடையிலும் நான் நன்கு அறிமுகமானவன். என் புலமையின் மீது அவருக்கு மதிப்பும் மரியாதையும் உண்டு. ஒருநாள் அவரே என்னை அழைத்துத் தமது அறையில் உட்கார வைத்துக் கொண்டு தமிழக அரசின் 'நல்லாசிரியர் விருது'க்கான விண்ணப்பத்தை அவர் கைப்படப் பூர்த்தி செய்து அனுப்பினார். எனக்கு அவ்வாண்டு விருதும் கிடைத்தது.

இவர் தலைமையில் கொஞ்ச நாள்தான் பணியாற்றும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. இவருக்கு வேண்டாதவர்களின் தலையீட்டால், இவர் இப்பள்ளியிலிருந்து அம்மாபேட்டை ஆண்கள் நகராட்சி மேல்நிலைப் பள்ளிக்கு மாற்றப்பட்டார். நானும், துணைத் தலைமையாசிரியராகப் பதவி உயர்வு பெற்று அம்மாபேட்டைப் பள்ளிக்கே சென்றேன். ஆனால், சில நாட்கள்தான் அங்கு பணி செய்ய முடிந்தது. நான் தலைமையாசிரியராகப் பதவி உயர்வு பெற்று ஈரோடு காமராசர் நகராட்சி மேல்நிலைப் பள்ளிக்குத் தலைமையாசிரியராகச் சென்று விட்டேன். இவருடைய சிறப்பு கை சுத்தம்.

திரு. கோ. தேவராசன், எம்.ஏ.,பி.டி.

குள்ளமான உருவம்; எப்போதும் சிரித்த முகம்; எல்லாரிடமும் எளிமையாகப் பழகும் இயல்பு; அடக்கமான போக்கு. இவர்தான் திருவாளர் G. தேவராசன்.

ஆசிரியராக இருந்த காலத்தில் அமைதியாக வகுப்புக்குப் போவார்; வருவார். தலைமையாசிரியராக இருந்த காலத்திலும் அமைதியாகத் தமது அறையில் வீற்றிருப்பார். பிறர் விஷயங்களில் அதிகமாகத் தலையிட மாட்டார்.

தமிழ்ப் பேராசிரியர் 'உடையார் ஐயா'வின் *உண்மையான மாணவர்; சைவசித்தாந்*தத்தில் ஈடுபாடுடையவர். இவர் தலைமையாசிரியராகப் பணியாற்றிய காலத்தில் இப்பள்ளி மேல்நிலைப் பள்ளியாக உயர்ந்தது.

சினத்தை அடக்குதல் வேண்டும் சினம்
உனக்கே கெடுதியைத் தூண்டும்! — புரட்சிக் கவிஞர்.

புலவரும் பொருளும்

(எழுசீர்க் கழிநெடிலடி, ஆசிரியவிருத்தம்)

கற்பனை ஊற்றுக் கால்கொடு கிளைத்துக்
காவிரி யென்னவே பரந்து
விற்பன ருளமாந் தண்பணை யகத்தே
விழைந்தநற் பொருளெலாம் விளைக்கும்
அற்புதம் படைத்த கம்பனே எனினும்
ஆர்கலி அரற்றுமிவ் வுலகில்
எற்படு விளக்காய் இழிநிலை எய்தும்
எணத்தகு பொருள தொன்றிலையேல்.

ஓவியந் தீட்டும் ஒருவனும் வாழ்வில்
உறுவதை உரைக்குநற் கணியும்
நாவியந் தீட்டும் நற்சொலும் பொருளும்
நாட்டுளோர் உளந்தனில் தைக்கக்
காவியந் தீட்டும் கவிஞனும் வேய்நேர்
கனிஇசை சொரிதிற லோனும்
ஓவியந் தீட்டும் கண்ணினாய் பொருளொன்
றிலாததால் இவர்க்கிலை பெருமை.

தோன்றிடாத் துறைகள் பற்பல தோற்றித்
துறைதொறும் தீஞ்சுவை பயக்கும்
தேன்றனிப்பாடல் செய்துல கோரின்
சிந்தையைக் கவர்பவ ரேனும்
வான்றரு செய்ய மலர்மிசை யுறையும்
கன்னியின் திருவுளம் இலையேல்
கான்றிரி புல்வாய் வல்லியம் நினைத்து
கலங்குறும் கலக்கமே எய்தும்.

முடிந்த முடிபு (நேரிசை வெண்பா)

பொருளொன் றிலனாயின் பூமிசை யாரும்
மருளனாய்ப் பார்ப்பார் மதியார் - அருணிறைந்த
ஆண்டவனும் பார்த்திடான் ஆத்தாளும் அங்கனே
மாண்டிடலே நல்ல வழி.

புலவர் திருக்குறள் : சி. இராமசாமி, சேலம் - 6

---

12 ஆண்டுகள் தமிழ் ஆசிரியராகப் பணியாற்றியும், ஓய்வூதியம் பெற முடியாமல் 16 ஆண்டுகளாகத் தவித்து நிற்கும், சேலத்தில் தமிழ் வளர்த்த செம்மலின் ஏக்கப் பாடல் இது.

பள்ளியில் நடந்த முப்பெரும் விழா

பெற்றோர் ஆசிரியர் கழகத் தலைவர் திரு ஓ.ச.சுப்பிரமணிய செட்டியார் அவர்களுக்கு துணைத் தலைமை ஆசிரியர் நா. குமரேசன் அவர்கள் பொன்னாடை போர்த்துதல்.

1992இல் நடந்த ஓய்வு பெற்ற புலவர் திரு க. கணேசன் அவர்களுக்கு பாராட்டுவிழாவும் ஆண்டு விழாவும்.

பள்ளி நலக்குழு உறுப்பினர் திரு சி. பழநியப்பன் (முன்னாள் நகரமன்றத் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர்) தலைமையாசிரியர், நகராட்சி ஆணையாளர் திரு. வேலு, திரு கணேசன் மாவட்டக்கல்வி அலுவலர் திரு மொ மாசிலாமணி. B.A. (Hons) எம்.எட். பெற்றோர் ஆசிரியர் கழகத் தலைவர் ஓ. எஸ். சுப்பிரமணியம் செட்டியார். பள்ளி நலக்குழு உறுப்பினர் திரு. நந்தகுமார்.

1993ல் ஆண்டுவிழா

ஆண்டு விழாவிற்கு வருகை தருவோர்

1993ல் ஆண்டுவிழா

பெ. திருநாவுக்கரசு தலைமையாசிரியர் ந.மே.ப. அம்மாப்பேட்டை. பள்ளி நலக்குழு உறுப்பினர் க. அ. பழநிச்சாமி தலைமையாசிரியர் புலவர் பி. அண்ணாமலை திராவிடர்கழகப் பொதுச் செயலாளர் மானமிகு கி. வீரமணி M.A.,B.L.

சத்துணவுக்கூடம் திறப்பு



அரசுத் தொட்டில் குழந்தைகள் காப்பகம் நடத்தும் அன்னை தெரசா வழியினருக்குப் பள்ளி மாணவர்கள் அளித்த உதவிப் பொருள்கள்.

பள்ளி இலக்கிய மன்ற விழா 1993ல் ஆண்டுவிழா



பள்ளி நலக்குழு உறுப்பினர் முன்னாள் மாணவர் **க. அ. பழநிச்சாமி** B.A., B.L



திராவிடர்கழகப் பொதுச் செயலாளர் மானமிகு **கி. வீரமணி** M.A., B.L.



திறப்பு விழா மேடையில் தலைவர்கள்

பெற்றோர் ஆசிரியர் கழகம் வழங்கிய தட்டச்சுப்பொறி
மின் விசிறிகள், தொலைக்காட்சிப் பெட்டி,
நடுவணரசு வழங்கிய மின் சாதனங்கள்

முதல் மதிப்பெண் பெற்ற மாணவருக்குப் பரிசளிப்பு

தலைமையாசிரியர் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. இராமையா I.A.S. பெற்றோர் ஆசிரியர் கழகத்தலைவர் O. S. சுப்பிரமணிய செட்டியார், 1வது தொகுதி சட்டமன்ற உறுப்பினர் புவனா செயராமன், தாரமங்கலம் சட்டமன்ற உறுப்பினர் திரு பழநிசாமி, மத்திய அமைச்சர் மாண்புமிகு அரங்கராசன் குமாரமங்கலம் முதன்மைக் கல்வி அலுவலர் செல்வி க. ரா. சீதாலட்சுமி முதலியோர்.

தந்தை பெரியார் அறிவியல் ஆய்வகத்தை அமைச்சர் திறத்தல்

பள்ளிச் சுற்று சுவருக்கு நன்கொடை ரூ 10,000/. வழங்கிய பாண்டியன் பேப்பர் கம்பனி உரிமையாளர் திரு மு.அ.கலையரசன் அவர்களுக்கு மத்திய அமைச்சர் மாண்புமிகு அரங்கராசன் குமாரமங்கலம் பொன்னாடை போர்த்துகிறார்.

தலைமை ஆசிரியர் புலவர் பி.அண்ணாமலை அவர்களுக்கு அமைச்சர் அவர்கள் நல்லாடை அணிவித்துப் பாராட்டல்.

திறப்பு விழாவிற்கு வருகை தந்த மாண்புமிகு டாக்டர் பி.ஆர். அரங்கராசன் குமாரமங்கலம் அவர்களுக்கு நல்லாடை போர்த்தி நன்றி தெரிவிக்கிறார். தலைமை ஆசிரிய..

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் நூற்றாண்டு விழா
புத்துணர்வுக் கலைமன்றம் - திறப்பு விழா -
நாள்: 12.7.1993

துணைத் தலைமை ஆசிரியர், தலைமை ஆசிரியர், மாவட்ட ஆட்சியர் திரு. பி. ஏ. இராமையா சட்டமன்ற உறுப்பினர் புவனா செயராமன் முதன்மைக் கல்வி அலுவலர். செல்வி க. ரா. சீத்தாலட்சுமி, திரு. சிதம்பரம், அமைச்சர். மாண்புமிகு அரங்கராசன் குமாரமங்கலம் அவர்கள் மன்றத்தினை திறக்கிறார்.

புத்துணர்வுக் கலைமன்றத்தை அமைச்சர் பார்வையிடல்

புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் புத்துணர்வுக் கலைமன்றம்
திறப்பு விழா நாள் : 12-7-1993



தந்தை பெரியார் அறிவியல் ஆய்வுக்கூடம் திறப்பு விழா
நாள் : 12-7-1993

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் நூற்றாண்டு விழா
புத்துணர்வுக் கலைமன்றம்





தலைமை ஆசிரியர் அறை

ஆசிரியர்கள்



வரிசை 1

திருவாளர்கள் ரா. சு. புருசோத்தமன் முதுகலைப் பட்டதாரி ஆசிரியர், கு. ந. வரதாச்சாரி (மு. க. ப. ஆ) ச· பாகன் (இ. நி. ஆ,) நா. சீ· வெங்கட்ராசன் (து த ஆ) புலவர் பி· அண்ணாமலை (த. ஆ.) கா· இராமசாமி (L. C. E.) சி. சுப்பிரமணியன் (இ. நி. ஆ.) இரா. இரகுபதி (பட்டதாரி ஆசிரியர்.)

வரிசை 2

திருமதி ஆர். ஹெலன் சாந்தாமணி (இ நி ஆ,) இர. சரசுவதி (ப. ஆ.) மு. கோகிலம் (தமிழ் ஆசிரியை) து. தமிழ்ச்செல்வி (ப. ஆ.) ப. பொன்மணி (ப. ஆ.) அர. தமிழரசி (ப. ஆ.) வே. மல்லிகேசுவரி (த. ஆ) ஆர்· ஹேமலதா (இ. நி ஆ.) வே. காவேரிவள்ளி (மு. க. ப. ஆ.) எ. தவுலத்பேகம் (மு. க. ப. ஆ.)

வரிசை 3

திருவாளர்கள் மு இராமநாதன் (இ. நி. ஆ.) க. சீ· வெங்கடேசுவரன் (மு. க. ப. ஆ.) கு· அரங்கநாதன் (இ. நி. ஆ.) வி. நாகராசன் (மு. க ப ஆ.) ம· ரா· மரியசோசப் (மு. க. ப ஆ.) ல· முக்தர்பாட்சா (மு. க. ப. ஆ.) ஆ. அரங்கசாமி (ப ஆ.) பெ. கோவிந்தராசுலு (த. ஆ.) அ. சித்தையன் (த. ஆ.) கோ· இராசேந்திரன் (உ. க. ஆ.) அ. தங்கவேல் (உ. க. ஆ) வை· அருணகிரி (மு க. ப. ஆ.)

நூற்றாண்டு விழாக்குழு உறுப்பினர்கள்



திரு. ம.ரா.மரியசோசப், திரு. மு. இராமனாதன், திரு. புலவர் பி.அண்ணாமலை, திருமதி. அ. கவுசல்யா கிருட்டிணன், திருமதி. ஆர்.எலன் சாந்தாமணி, திரு. பி.கோவிந்தராசுலு, திரு. வீ.நாகராசன், திரு. கு.ந. வரதாச்சாரி, திரு. ல. முக்தர்பாஷா, திரு. ஆ. அரங்கசாமி, திரு. பெஞ்சமின் மற்றும் அலுவலக உதவியாளர் திரு. பி.இராமன்.

அலுவலகப் பணியாளர்கள்

புலவர் பி. அண்ணாமலை
தலைமை ஆசிரியர்

திரு. நா.சீ. வெங்கட்ராசன்
து. தலைமை ஆசிரியர்

திரு. என். தேவகி
அலுவலக உதவியாளர்

திருமதி. ஐ. லலிதா
துணை எழுத்தர்.

திரு. ஆர். முருகேசன்
இரவுக் காவலர்..

திரு. சி. விசயன்
அலுவலக உதவியாளர்.

திரு. கே. இராசமாணிக்கம்
எழுத்தர்.

திரு. ஆர்.சுப்பிரமணியன்
தோட்டக்காரர்.



பள்ளித் தேசிய மாணவர் படை (N.C.C.)



CHM P.D. ஜோஸ், HOW ஷியாம் தேவ் சிங், தலைமை ஆசிரியர் புலவர் பி. அண்ணாமலை, Sub. K. நாராயணன் நாயர், திரு.வீ. நாகராசன், படை ஆசிரியர் ஆகியவர்களுடன் பள்ளி மாணவர் படையினர்.



1994 மே 31இல் ஓய்வு பெறும் ஆசிரியர்கள் பற்றிய குறிப்பு

புலவர் திரு. பி. அண்ணாமலை,
எம்.ஏ.பி.எட்., தலைமை ஆசிரியர்

பெயர்: பிச்சை பிள்ளை அண்ணாமலை

பிறந்த நாள்: 15.8.1935 யுவ வருடம் ஆடி மாதம் 31 ஆம் நாள்

பிறந்த ஊர்: வெள்ளூர், அறியலூர் வட்டம், திருச்சி மாவட்டம்.

பெற்றோர்: பிச்சைப் பிள்ளை உடையார் - முத்தம்மாள்

தொழில்: உழவுத் தொழில்

படிப்பு: 1 முதல் 8 ஆம் வகுப்பு முடிய (1950) மாவட்ட நடுநிலைப் பள்ளி. செந்துறை பள்ளியில் தமிழில் முதல் மதிப்பெண் (50) பெற்றதால் பெருஞ்சொல் விளக்கனார் அ.மு. சரவண முதலியார் அவர்களால் தஞ்சை கரந்தைத் தமிழ்ச் சங்கம், புலவர் கல்லூரியில் சேர்க்கப்பட்டு ஒன்றரை வயதிலேயே தாயை இழந்த காரணத்தால் திக்கற்ற மாணவர் இல்லத்திலும் இடமளிக்கப்பட்டது.

1955-இல் புலவர் தேர்ச்சி. கல்லூரியில் முதல் நால்வரில் ஒருவர்.
1959-இல் குமார பாளையம் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் தமிழாசிரியர் பயிற்சி.
1979-ல் பி.லிட். தர்க்கம் (Logic)
1982-ல் எம்.ஏ. தமிழ்: சென்னைப் பல்கலைக் கழகம்.
பி.எட்., அண்ணாமலைப் பல்கலைக் கழகம்.

பணி: 8.9.1955-ல் பாவடி நகரவை மேல்நிலைப் பள்ளியில் இரண்டாம் நிலைத் தமிழாசிரியராக ஊதியம்: 35 + 25 + 7 = ரூ.67
3.8.1961-ல் முதல்நிலைத் தமிழாசிரியராகப் பணி உயர்வு
அம்மாப் பேட்டை நகரவை உயர்நிலைப் பள்ளியில்
செவ்வாய்ப்பேட்டை மணக்காடு முதலிய பள்ளிகளில் பணி மாற்றம்.
1968 முதல் 1973 வரையிலும், 1984 முதல் 1994 மே 31 முடிய நகரவை மேல்நிலைப் பள்ளி கோட்டை - சேலம் - 1.

தலைமை ஆசிரியர்: நீதிமன்றத் தீர்ப்பின்படி 1985 சூன் முதல் உயர்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர். 1.6.1986 முதல் மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்.

நிர்வாக நடைமுறைத் தவறுகளின்படி 13.3.1990 முதல் 19.4.1990 முடிய வேலூர் நகராட்சி கசப்பா உயர்நிலைப் பள்ளியில் உயர்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர். 20.4.90 முதல் நகராட்சி மேல்நிலைப் பள்ளி கோட்டை சேலம் 1-ல் மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்.

பணி ஓய்வு: 31.8.1993

பணி நீட்டிப்பு: 31.5.1994 முடிய

மொத்த பணிக் காலம்: 38 ஆண்டுகள், 8 திங்கள், 23 நாள்கள்

நன்றாய்ப் படியுங்கள்! நாட்டின் குழந்தைகள்!
ஒன்றாய் இருங்கள்! உயர்வினை எண்ணுங்கள்! — புரட்சிக் கவிஞர்

தொண்டு: 1961-ல் சேலம் நகரத் தமிழாசிரியர் கழகத்தைத் தோற்றுவித்தது.

சேலம் நகர மாவட்டத் தமிழ் ஆசிரியர் கழகத் தலைவராகப் பல ஆண்டுகள்.
மாநிலப் பொருளாளர், மாநில துணைத் தலைவராக இருந்தது.
நகராட்சித் தலைமை ஆசிரியர்கள் கழகத் தலைவர்.
நகராட்சி அலுவலர் நாடக மன்றத் தலைவர்.
மாவட்ட மேனிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர் கழகத் தலைவர்
சேலம் நகராட்சி அனைத்தாசிரியர்கள் கழகத் தலைவர்.
பகுத்தறிவாளர் கழகத் தலைவர்.
மாநில பகுத்தறிவாளர் கழகக் கல்வியாளர் குழு உறுப்பினர்.
'ஜேக்டி' போராட்டத்தின் போது மாவட்டப் பொறுப்பு.
ஆகிய பொறுப்புகளிலிருந்து நினைவுகூறத் தக்க வகையில் பணியாற்றியுள்ளார்.

சாரண ஆசிரியராகப் பணியாற்றியதற்கு விருது அளிக்கப்பெற்றவர்.

'கல்லூரிகளில் தமிழ் வழிப் பாடம் பயிற்றுமுறை வந்தபோது கல்லூரிப் பேராசிரியர்கள் வெளியிட்ட 'தாவரவியல்' 'பேரியல் பொருளாதாரம்' ஆகிய நூற்களின் தமிழ் மொழி பெயர்ப்புக்கு உதவி அச்சிட்டு வெளிவரச் செய்தமை.

'நக்கீரர்' ஓர் ஆய்வு பதிப்பாளராக உதவியது.

'மநுதர்மம்' நூல் நல்ல தமிழில் வெளிவர உதவியமை.

தண்ணிழல்' நூல் அச்சாகி வெளிவர உதவியது.

நினைவுக் குரியவை:
1. புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்கள் மறைந்த பின் நினைவு இசை விழா நடத்தியது. அவ்விழாவை சேலம் தியாசாபிகல் சொசைட்டியில், தந்தை பெரியார் அவர்களை வைத்து நடத்தியது.

2. முதன் முதலில் அவர் படத்தை வண்ணத்தில் வெளியிட்டது.

3. அவரது பாடல் வரிகள் மாணவர்களிடம் பரவ மாணவர் பயிற்சி ஏடுகளில் அவைகளை அச்சிட்டுப் பரப்பியது.

4. பள்ளியில் அவர் பெயரால் புத்துணர்வுக் கலை மன்றம் திறந்தது.

5. தமிழாசிரியர்கள் தலைமை ஆசிரியர்களாகப் போரிட்டது.

6. தமிழாசிரியர்கள் ஆண்டாய்வுப் பணியில் இடம் பெறக் காரணமாயிருந்தது.

7. 1986-ல் நடந்த நகராட்சித் தேர்தலில் தேர்தல் பணிக்குச் சென்ற ஆசிரியர்களுக்கு அஞ்சல் வழி வாக்களிக்க சேலம் நகராட்சி ஆசிரியர்கள் மட்டுமே அனுமதிக்கப் பட்டனர். அந்த உரிமையை பெற்றுத் தந்தமை.

8. பள்ளியிடத்தின் ஒரு பகுதியில் மாவட்ட நூலகக் கிளைக் கட்டிடமும் கட்ட முயன்றதைத் தடுத்து நிறுத்தியது.

9. தனியார் சாரணர் குழு ஒன்றுக்கு அளிக்கப் பட்ட பள்ளி அறையை மீட்டுப் பள்ளி உடைமை ஆக்கியது.

மகிழ்வது : பள்ளியை அழிவினின்று மீட்டுச் சேலம் மாவட்டத்தில் தோன்றிய இம்முதற் பள்ளியை சேலம் மாவட்டத்தின் முதற் பள்ளியாகத் தோற்றம் பெறச் செய்ததற்கு,

கற்க கசடற கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக

என்றபடி முடிந்தவரை நடப்பதற்கும், தமிழால் வாழும் நாம் தமிழுக்காக வாழ்வோம் என்று கூறி வாய்ச் சொல்லுடன் நின்று விடாமல் முடிந்தவரை குடும்பத்தார் அனைவருக்கும் தமிழ்ப் பெயராக வைத்துள்ளதற்கும்.

என்மக்கட் பெயர்:
1. மகிழ்நன்
2. தேன்மொழி
3. இளவழகன்
4. மான்விழி
5. அருள்மொழி

அவர்தம் மக்கட் பெயர்:
1. யாழ், மறைமொழி

அவனவன் நாட்டில் அவனவன் வாழ்க - மற்
றயல் நாட்டைச் சுரண்டுதல் அடியோடுவீழ்க! — புரட்சிக் கவிஞர்

2. அறவாழி, அறிவாழி, அருளாழி
3. தமிழர் தலைவர்
4. நிறைமொழி, தண்ணிழல்
5. குயில் மொழி

வருந்துவது:

1. இப்பள்ளிக்குரிய விளையாட்டுத் திடலையும், அங்கு மத்திய அரசு உதவியில் கட்டிய புத்துணர்வுக் கலையரங்கத்தையும் பள்ளியிழந்தமைக்கு.

2. பள்ளிக்குரிய அவைகளை பள்ளிக்குரியவை அல்ல என்று நீதிமன்றமேறி பொய் சொல்லிப் பொய்த் துயிர்வாழும் அலுவலர்களின் செயல்களுக்கு.

3. வழிப்பறி கொள்ளை, கொலைகாரர்களிடமிருந்து மக்களைக் காக்க முடியாமல் போனது போல திடலையும், அரங்கையும் மீட்க முடியாமல் பதவியிலிருந்து ஓய்வு பெறுவதற்கு.

திரு. பெ. கிருஷ்ணராஜன்

எம்.ஏ.,எம்.எட்.,

முதுநிலைத் துணைத் தலைமையாசிரியர்



பெயர் : பெ. கிருஷ்ணராஜன்

ஊர்: சேலம் குகை

பிறப்பு: 3.6.1935 இல் கைத்தறி நெசவாளர் குடும்பத்தில்

பணி: முதுகலைத் தமிழாசிரியர்; முதுகலை உதவித் தலைமையாசிரியர்

படிப்பு: பள்ளியிறுதி வகுப்பு : 1954-சேலம் நகராட்சி கோட்டை உயர்நிலைப் பள்ளி

புலவர் : 1958 - திருவையாறு அரசர் கல்லூரி.

தமிழாசிரியர் பயிற்சி : 1961 - குமாரபாளையம் அரசினர் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி.-

பி.ஏ.: ஆங்கிலம் - 1976
சென்னைப் பல்கலைக் கழகம்.

பி.எட் : 1980, எம்.எட் : 1986 - அண்ணாமலைப் பல்கலைக் கழகம்

பணி: சேலம் நகராட்சி செவ்வாய்ப்பேட்டை உயர்நிலைப் பள்ளி (1958-64)

சேலம் நகராட்சி அருணாசல ஆசாரி உயர்நிலைப் பள்ளி (1964-78)

சேலம் நகராட்சி அம்மாபேட்டை மேல்நிலைப் பள்ளி (1978-79)

சேலம் நகராட்சி கோட்டை மேல்நிலைப் பள்ளி (1979-94)

எழுத்துப் பணி:
பாட நூல்கள் எழுதிச் சேலம் வேந்தன் பதிப்பகத்தின் மூலம் வெளியிட்டது.

தனியார் நிறுவனங்களின் வெள்ளிவிழா, பொன் விழா மலர்களைத் தயாரித்தது.

திருப்பதி திருமலை தேவஸ்தான 'சப்தகிரி' என்னும் தமிழ்த் திங்கள் வெளியீட்டில் கட்டுரைகள் எழுதிவருவது.

மாம்பழக் கவிச்சிங்க நாவலர் அவர்கள் செய்யுளாக இயற்றியிருக்கும் 'தேவாங்க புராணம்' என்னும் நூலை, உரைநடையில் வரலாற்றுக் குறிப்புகளுடன் 'ஸ்ரீ தேவாங்க' புராணமும் அம்மன் பெருவிழாவும்' என்னும் பெயரில் தேவாங்க குலப் பெருமக்களுக்கு நூல் எழுதித் தந்தது.

பெருமைப்படுவது: பள்ளியிறுதி வகுப்பில் 'படிப்பில் சிறந்த மாணவன்' என்பதற்காக அந்நாள் தலைமையாசிரியர் திரு.ப. மாணிக்கம் பிள்ளை,

துவளாத வாழ்க்கை உலகெலாம் சூழ்க!
தூக்கியகைகள் அறம் நோக்கித் தாழ்க. — புரட்சிக் கவிஞர்

B.A.,B.T., அவர்களிடம் கோதாவரி அம்மாள் ஸ்காலர்ஷிப் (1953-54) ரூ.30/-ஐப் பெற்றதற்காக.

தமிழ்க் கல்லூரியில் பயிலும் மாணவர்களும் மத்திய அரசின் படிப்புதவி நிதியைப் பெற முடியும் என 1955 முதல் 1958 வரை ஆண்டு தோறும் ரூ.330/- வீதம் தமிழ்நாட்டிலேயே முதன் முதலாகப் பெற்ற முதல் மாணவன் என்பதற்காக.

குகை இலக்கிய நண்பர் குழுவில் அவைப் புலவராக இருப்பதற்காக.

படித்த பள்ளியிலேயே ஆசிரியர் பணி செய்து ஓய்வு பெறுவதற்காக.

திரு. நா. குமரேசன் எம்.ஏ.,எட்.,

துணை தலைமை ஆசிரியர்

பெயர் : நா. குமரேசன்

ஊர்: சேலம், செவ்வாய்ப்பேட்டை

பிறப்பு: 02.04.1936

பணி: பட்டதாரி ஆசிரியர், பட்டதாரி
உதவித் தலைமையாசிரியர்

படிப்பு: எம்.ஏ. எம்.எட்.,

ஆசிரியப் பணி: 33 ஆண்டுகள்

சேலம் நகராட்சி கோட்டை மேல்நிலைப் பள்ளி, (1963 - 1994)

செஞ்சிலுவைச் சங்கம், சாரண ஆணையர் பயிற்சிகள் பெற்றவர்.

திரு. நா.சீ. வெங்கட்ராஜன்

இடைநிலைத் துணைத் தலைமை ஆசிரியர்

பெயர் : நா.சீ. வெங்கட்ராஜன்

ஊர்: நாமக்கல், சேலம்

பிறப்பு: 15.12.1935

பணி: இடைநிலை ஆசிரியர், இடைநிலை
உதவித் தலைமையாசிரியர்

படிப்பு: பள்ளி இறுதி வகுப்பு, அரசு ஆதாரப் பயிற்சிப் பள்ளி, மேட்டூர்.

ஆசிரியப் பணி: 35 ஆண்டுகள் 4 மாதங்கள்

பணிபுரிந்த பள்ளிகள்

1. அருணாசல ஆசாரி நகராட்சி உயர்நிலைப் பள்ளி, சேலம் - 1

2. சேலம் நகரவை மேல்நிலைப் பள்ளி, கோட்டை, சேலம் - 1.

பல ஆண்டுகள் எட்டாம் வகுப்பு ஆசிரியராக இருந்து ஆங்கிலம், கணக்கு, அறிவியல், வர

தமிழனுக்குலகம் நடுங்கியதுண்டு - அங்குத்
தன்னாட்சி நிறுவிட எண்ணிய துண்டா? — புரட்சிக் கவிஞர்

லாறு ஆகிய எல்லாப் பாடங்களையும் சிறப்பாகக் கற்பித்தது.

1991 ஆம் ஆண்டிலிருந்து துணைத் தலைமை ஆசிரியர்.

திரு. கா. இராமசாமி, எல்.இ.இ.

பொறியியல் ஆசிரியர்



பெயர் : கா. இராமசாமி
ஊர்: கிச்சிப்பாளையம், சேலம்

பிறப்பு: 15.06.1935

பணி: பொறியியல் ஆசிரியர்

படிப்பு: எல்.இ.இ.

1945 ஆம் ஆண்டு முதல் 1953 வரை சேலம் நகரவை மேல்நிலைப் பள்ளியில் பொறியியல் பிரிவில் பயின்றவர்.

பணி: சேலம் நகரவை மேல்நிலைப் பள்ளி. (1959 - 1994)

அவருடைய பணிக் காலத்தில் எந்த மாணவரும் அவர் பாடத்தில் தோல்வி அடையவில்லை.
ஆசிரியர் குழுச் செயலாளராகவும் பழைய மாண வர் சங்கச் செயலாளராகவும் பல்லாண்டுகள் பணிபுரிந்தார்.

திரு. ச. பாகன்

இடைநிலை ஆசிரியர்

பெயர் : ச. பாகன்

பெற்றோர்: சந்தனம் - செல்லம்மாள்

ஊர்: நவனி, நாமக்கல் வட்டம்

பிறப்பு: 2.6.1935

கல்வித் தகுதி: இடைநிலை ஆசிரியர் பயிற்சி

பணி: 22.8.1961ல் இளநிலை ஆசிரியர்
30.10.1967ல் இடைநிலை ஆசிரியர்

ஓய்வு: 30.6.1993

பணி நீட்டிப்பு: 31.5.1994

பணிக் காலம்: 32 ஆண்டு 9 மாதம் 10 நாள்

பணிக் குறிப்பு: முதல் வகுப்பு முதல் எட்டாம் வகுப்பு முடிய ஆசிரியராகப் பணியாற்றி உள் ளார்.

முதல் - இடை - கடை என மாணவர்களைத் தரப்படுத்தி அவைகளுக்கேற்ப பாடம் கற்பித்த வர். அதனால் இவர் வகுப்புகளில் அதிக மாணவர்கள் தேர்ச்சி பெற்று வந்தனர்.

பெருமை: இவர் வகுப்பு, ஆண்டுத் தேர்ச்சியில் முதலிடம் பெற்று வருவதற்குத் தலைமை ஆசிரி யர்களால் பாராட்டப்படும் போது மகிழ்ச்சி

பண்டைப் பெரும்புகழ் உடையோமா இல்லையா?
பாருக்கு வீரத்தைச் சொன்னோமா இல்லையா? — புரட்சிக் கவிஞர்

அடைவார். ஆசிரியர்ப் பணியைக் குறைவின்றி முழு மனதுடன் ஆற்றியுள்ளார்.

திரு. சி. சுப்ரமணியன்
இடைநிலை ஆசிரியர்

பெயர் : சி. சுப்பிரமணியன்

ஊர்: அஸ்தம்பட்டி, சேலம் - 7.

பிறப்பு: 10.4.1936

பணி: இடைநிலை ஆசிரியர்

படிப்பு: பள்ளி இறுதி வகுப்பு

ஆசிரியப் பணி: 36 ஆண்டுகள்

சேலம் நகராட்சி தொடக்கப் பள்ளிகளிலும் சேலம் நகராட்சி உயர்நிலை மேல்நிலைப் பள்ளிகளிலும் சிறப்பாகப் பணியாற்றினார்.

சோதிடக் கலையிலும் இவருக்கு பயிற்சி உண்டு.

திரு. அ. வீரப்பன், எம்.ஏ.பி.எட்.
பட்டதாரி ஆசிரியர்



பெயர் : அ. வீரப்பன்

பிறப்பு: 12.2.1938

பெற்றோர்: அங்கமுத்து செட்டியார்
- பொன்னம்மாள்

ஊர்: திருச்செங்கோடு

மறைவு: 17.2.1994

பணி: 28.6.58-இல் தட்டச்சு பயிற்றுவிக்கும் ஆசிரியராக இப்பள்ளியில் சேர்ந்தார். பின் பட்டதாரி ஆசிரியராக உயர்வு பெற்றார். 1.9.81 முதல் 86 வரை நடுநிலைப்பள்ளித் தலைமை ஆசிரியரானார். 86 முதல் செவ்வாய்பேட்டை நகராட்சி உயர்நிலைப் பள்ளியில் பணியாற்றினார். 91 முதல் சேலம் நகராட்சி கோட்டை மேல்நிலைப் பள்ளியில் பணியாற்றி 17.2.94-இல் எதிர்பாராத மறைவை அடைந்தார். அவர் மறைவுக்கு பள்ளியின் சார்பில் ஆழ்ந்த வருத்தத்தை அவரது பிரிவால் துயருறும் அனைவருக்கும் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

— ஆசிரியர்க் குழு

இன்று குழந்தைகள் நீங்கள் - எனினும்
இனி இந்த நாட்டின் ஆளப்பிறந்தீர்! — புரட்சிக் கவிஞர்

பள்ளியில் நடந்த முப்பெரும் விழா

பள்ளியின் நலனுக்காகப் பெற்றோர் ஆசிரியர் கழகம் கட்டிக் கொடுத்த சுற்றுச்சுவர், வாயில்கள் புதுப்பித்த மன்றங்கள் ஆகியவைகளைப் பள்ளிக்கு ஒப்படைக்கும் விழா பள்ளியில் 12.7.93 திங்கட் கிழமை காலை 9 மணி அளவில் முப்பெரும் விழாவாகக் கொண்டாடப்பட்டது. அவ்விழாவில் காமராசர் வாயில், திருவள்ளுவர் வாயில், மத்திய அரசு கட்டிக் கொடுத்த தந்தை பெரியார் ஈ.வெ.ரா. அறிவியல் ஆய்வகம், புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் நூற்றாண்டுப் புத்துணர்வுக் கலைமன்றம் ஆகியவைகள் திறந்து வைக்கப்பட்டன.

மாவட்ட ஆட்சித் தலைவர் உயர்திரு. பி.ஏ. இராமய்யா, இ.ஆ.ப. அவர்கள் தலைமையேற்றுப் பாரதிதாசன் கவிதைகளில் பலவற்றை மேற்கோள் காட்டித் தந்தை பெரியாரின் சிறப்புக்களை எடுத்துக்கூறி உரையாற்றினார்கள். விழாவிற்கு வருகை தந்த சட்டமன்ற உறுப்பினர், நகராட்சி ஆணையாளர் க. மாணிக்கவாசகம் மற்றும் முதன்மைக் கல்வி அலுவலர் செல்வி.க.ரா. சீதாலட்சுமி, திரு.எஸ்.ராமலிங்கம், பெற்றோர் ஆசிரியர் கழகத் தலைவர் ஓ.ச. சுப்பிரமணிய செட்டியார் ஆகியோர் விழாவில் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்கள். மத்திய அமைச்சர் மாண்புமிகு டாக்டர் பி.அரங்கராசன் குமாரமங்கலம் அவர்கள் காமராசர் வாயிலையும், திருவள்ளுவர் வாயிலையும் ஆய்வகத்தையும், கலை மன்றத்தையும் திறந்துவைத்து அரியதோர் சிறப்புரை ஆற்றினார்கள். தந்தை பெரியார் தந்த பகுத்தறிவு பற்றியும், இப்பள்ளியில் பயின்ற பல மாணவர்கள் மேலை நாடுகளில் விஞ்ஞானிகளாக இருப்பது பற்றியும் மத்திய அரசு வழங்கிய நிதியுதவியால் கட்டப்பட்ட கட்டிடத்தை நன்றி உணர்வோடு தலைமை ஆசிரியர் குறிப்பிட்டது பற்றியும், பெருமையுடன் குறிப்பிட்டுப் பாராட்டி, தலைமையாசிரியருக்கு நன்றியும் தெரிவித்துக் கொண்டார்கள். நிதி உதவி வழங்கிய பாண்டியன் பேப்பர் கம்பெனி திரு.கலையரசன் அவர்கட்கும் பெற்றோர் புரவலர் திரு. ஏ.ஜெ. ஸ்டர்லிங் அவர்களுக்கும் நல்லாடை அணிவித்தார்.

விழாவில் தலைமை ஆசிரியர் பள்ளியின் சார்பில் கொடுத்த அறிக்கையில் பின்வருமாறு வேண்டுகோள் வைத்தார்கள்.

பேரன்பிற்கும், பெரு வணக்கத்திற்கும், பாராட்டுதலுக்கும் உரிய மத்திய அறிவியல் மற்றும், தொழில் நுட்பத்துறை அமைச்சர் அவர்களே! மதிப்பிற்குரிய மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களே! பாராட்டிற்குரிய நகராட்சியின் ஆணையாளர் அவர்களே! பணிதற்குரிய முதன்மைக்கல்வி அலுவலர் அவர்களே! மாவட்டக் கல்வி அலுவலர் அவர்களே! பண்பிற்சிறந்த எங்கள் பெற்றோர் ஆசிரியர் கழகத் தலைவர் அவர்களே! பொருளர் அவர்களே! நலக்குழுவின் பெருமை மிகு உறுப்பினர்களே! சட்டமன்ற உறுப்பினர்களே! பெரியோர்களே! தாய்மார்களே! சான்றோர்களே! எனது அன்பிற்குரிய ஆசிரியர்களே! ஆசிரியைகளே! மற்றும் இவ்விழாவிற்கு அடிப்படைக் காரணமான மாணவச் செல்வங்களே! உங்கள் அனைவருக்கும் இந்த இனிய காலைப் பொழுதில் இதயங் கனிந்த வணக்கங்களையும், வாழ்த்துக்களையும், கூறி மகிழ்கின்றேன்.

உங்களுடைய வருகையால் உவகை அடையும் இப்பள்ளி 1856 - இல் சேலம் மாவட்டத்திலேயே முதன் முதலில் தோன்றிய பழமை மிக்க தொன்மை வாய்ந்த பள்ளியாகும். இப்பள்ளியில் பயின்ற மாணவர்கள் பலர் டாக்டர்களாகவும், இன்ஜினியர்களாகவும், பல்துறை வல்லுநர்களாகவும் ஆனதுடன், மத்திய அமைச்சர்களாகவும், மாநில அமைச்சர்களாகவும், நகரமன்றத் தலைவர்களாகவும், பெரு வணிகர்களாகவும்

வையகத்திற் சிறந்த பண்பாடு
வாய்ந்தநாடு செந்தமிழ் நாடு - பாரதிதாசன்

திகழ்ந்துள்ளார்கள். இப்பள்ளியின் வளர்ச்சியாக இந்தப் பள்ளிக் கட்டிடத்திலேயே தொடங்கி நடந்து வந்ததுதான் இன்றைய சேலம் அரசு கலைக்கல்லூரி. பழமை மிகு இப்பள்ளிக்கு உள்ள வசதிகளும், மிகப்பழமையானதாகவே உள்ளது. நகரின் நடு நாயகமான இடத்திலுள்ள இப்பள்ளி வசதி படைத்த தனியார் பள்ளிகள் பல வந்தபின்னும், தோன்றியது முதல் இன்று வரை ஏழை எளிய மக்களுடைய பள்ளியாகவே நடத்தப்பட்டு வருவதுடன், ஏழைப் பள்ளியாகவே இது இருந்தும் வருகிறது. தன் உடைமைகள் சிலவற்றை இப்பள்ளி இழந்துள்ள நிலையில், அழிவையும், இழிவையும் நோக்கிச் சென்று கொண்டிருந்த நிலையிலிருந்து தடுத்து நிறுத்திட எடுத்துக்கொண்ட முயற்சியின் ஒரு அங்கம் தான் இந்த விழா.

காலையில் பள்ளி தொடங்க, இங்கே தமிழ்த்தாய் வாழ்த்தும், தேசீயகீதமும், மாணவர்கள் பாடிக்கொண்டு இருப்பார்கள். அங்கே பள்ளியின் முன்புறச்சுற்றுச் சுவரின் மீது ஏறி அமர்ந்து கொண்டும், சிலர் படுத்துக்கொண்டும் சிலர் புகை பிடித்துக்கொண்டும், வேடிக்கை பார்ப்பதுடன், சிலரின் பொழுது போக்குக்கும் இடமாகவும், அதே நேரத்தில் மாணவர்கள் சிலர் பின்புறமுள்ள சுற்றுச்சுவர்களில் இருந்த பெரிய ஓட்டைகள் வழியாகப் பள்ளிக்கு வருவதும், போவதுமாகப் பள்ளி பயன்படும் நிலை 1990 வரை இருந்தது. அப்பொழுது நானும் இங்கு ஆசிரியராகத்தான் இருந்து மனம் புலம்பிக் கொண்டிருந்தேன். எங்கள் பெற்றோர் ஆசிரியர் கழகத் தலைவர் பெரியவர் ஓ.எஸ்.சுப்ரமணியம் செட்டியார் அவர்கள்தான், அப்போதும் பெற்றோர் ஆசிரியர் கழகத் தலைவராக இருந்தார்கள். 1990 ஏப்ரல் 20-ல் நான் இப்பள்ளியின் தலைமை ஆசிரியராகப் பதவி உயர்வு பெற்றேன். வரலாறுகள் நமக்குக் கற்பித்த பாடத்தை மறக்கக் கூடாது என்று கருதுபவன் நான். நமக்குப் பாடங்களைக் கற்றுத் தந்தவர் '*கல்வி வள்ளல் காமராசர்*' அவர்கள். அவர் செய்த கல்விப்பணி தமிழன் உள்ளளவும் நினைத்துப் போற்றத்தக்கது.

அவர் முதலமைச்சர் ஆனபோது நன்றாக நடந்து வந்த 6000 பள்ளிகள் மூடப்பட்டுக் கிடந்தன. மூடியபோதும் கல்வி அமைச்சர் மாண்புமிகு சி.சுப்ரமணியம்தான் கல்வி அமைச்சர். அவரால் மூடப்பட்ட பள்ளிகளை காமராசர் அவரைக் கொண்டே திறந்ததுடன் 6000 ஆக இருந்த பள்ளிகள், 60,000 ஆகப் பெருகச் செய்தார். இன்று மேலும், பெருகிப் பல வகைப்பள்ளிகளைப் பெற்றுள்ளோம். எங்களுடைய பெற்றோர் ஆசிரியர் கழகத்தின் தலைவர் அதே திரு.ஓ.எஸ்.சுப்ரமணியம் செட்டியார்தான், இன்றும் தலைவர். அவர்களிடத்தில், இப்பள்ளி நிலைமைகளை நாங்கள் விளக்கி இந்த அவலங்கள் போக வேண்டும் என்று நான் தலைமை ஆசிரியரானபின் கேட்டுக் கொண்டபோது, அவைகளை ஏற்று அவர் எங்களை வழி நடத்தியதால், அவர் தலைமையிலேயே இன்று பள்ளியை மாற்றியமைத்துச் சுற்றுச்சுவர் மீது வேல்களை நட்டு, கோட்டை வாயில்கள் போல இந்தக் கோட்டை நகரவைப் பள்ளிக்கு வாயிலும் அமைத்துத் தந்து உள்ளார்கள்.

குடிநீர்க் குழாய்கள் இந்தப் பள்ளிக்கு மூன்று இருந்தும், மாணவர்கள் தண்ணீர் தேடி நகராட்சி அலுவலகத்திற்குள் எப்போதும் சென்று தண்ணீர் குடிக்கும் நிலைதான் இருந்தது. அந்நிலை அகல சேலம் அம்பிகா அச்சக உரிமையாளர் திரு.எஸ்.ஏ.பெருமாள் அவர்களை நாடினோம். அவர் உதவியால் அங்கே உள்ள உயர்ந்த நீர்த்தொட்டி உருவானது. அதன் அருகிலுள்ள சிறிய தொட்டியும், அவரது மகன் திரு.அங்கண்ணன் அவர்கள் இந்தப் பள்ளியில் படிக்கும்போது அவரால் கட்டித் தரப்பட்டது. இந்தச் சுற்றுச்சுவர் வேலி அமைத்திட எங்களுக்குப் பெரு நிதி உதவியவர்கள் பாண்டியன் பேப்பர் கம்பெனி உரிமையாளர் திருமிகு. மு.அ.கலையரசன், பி.காம்., அவர்கள் ஆவார்கள்.

மற்றும் இங்கு பயிலும் மாணவர்கள் சார்பாக அவரது பெற்றோர்கள் விருப்பத்துடன் அளித்த நிதியுதவியினால் ஏற்பட்டவை

இன்று குழந்தைகள் நீங்கள் - எனினும்
இனி இந்த நாட்டின் ஆளப்பிறந்தீர்! — புரட்சிக் கவிஞர்

தான், புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் புத்துணர்வுக் கலைமன்றம். அது தோன்றவும், காரணமும் வழிகாட்டியுமானவர் கர்ம வீரர் காமராசர்தான். மத்திய அரசு ரூ.35,000.00 வழங்கிய நிதியுதவியுடனும், பொருட்காட்சி மூலம் கல்விப்பணிக்காக சேலம் நகராட்சி திரட்டிய நன்கொடையின் மூலமும், மாணவர்கள், ஆசிரியர்கள் உழைப்புதவியின் மூலமும் இப்பள்ளியின் விளையாட்டுத் திடலில் 1961-ல் மாணவர் புத்துணர்வுக்கலை மன்றம், என்ற ஒரு பெரிய உள் விளையாட்டு அரங்கத்தைக் கட்டி அன்றைய முதலமைச்சர் காமராசர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. அது இன்று பள்ளியின் விளையாட்டுத் திடலில் கட்டப்பட்ட கல்யாண மண்டபத்திற்கு உணவுக் கூடமாக (டைனிங் ஹால்) மாற்றப்பட்டுவிட்டது. எனவே, மாணவர்களுக்கு உதவியாக இங்கு இந்தப் புத்துணர்வுக் கலை மன்றம் மாணவர்களின் உதவி உழைப்பால் மீண்டும் உருவாக்கப்பட்டுள்ளது.

'கல்வியில்லாத பெண்கள் களர் நிலம், அந்நிலத்தில் புல் விளைந்திடலாம், நல்ல புதல்வர்கள் விளைவதில்லை' என்றும், பெண்ணுக்கும் மறுமணம் வேண்டும் என்றும் பெண் உரிமைக்குப் பாடுபட்ட, நூற்றாண்டு விழாக்கண்ட, 'புரட்சி' என்ற பட்டத்தை முதலில் பெற்ற புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் அவர்கள் பெயரால் இந்த மன்றம் மாண்புமிகு அமைச்சர் அவர்களால் இன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது.

நடுவணரசு கல்வி வளர்ச்சிக்காக அளிக்கும் தொகையினால் உருவாக்கப்படும் அமைப்புகள் திசை மாறிப்போய்விடுவது தொடர்கதையாகக் கூடாது என்ற காரணத்தினால், இன்று இங்கு எதிரேயுள்ள மூன்று வகுப்பறைகள் கொண்ட **தந்தை பெரியார் ஈ.வெ.ரா. அறிவியல் ஆய்வகம்** திறந்து வைக்கப்பட்டுள்ளது. இந்தக் கட்டிடம் நடுவண் அரசு தொழிற்கல்வி வளர்ச்சிக்காக அளித்த நிதியுதவியில் கட்டப்பட்டது. ஒவ்வொரு அறையும், ரூ.50,000 செலவில் மூன்று அறைகளுக்கும் ரூ.1.5 லட்சம் செலவிடப்பட்டுள்ளது. அஃதன்னியில், தொழிற்கல்வி பயில 75,000-00 ரூபாய் மதிப்புள்ள கருவிகளையும் மத்திய அரசு வழங்கியுள்ளது.

இப்படி வழங்கிய வரலாற்றை வெளியில் சொல்லாவிடில், இந்தக் கட்டிடமும் தன் வரலாற்றை மட்டுமின்றி, தன்னையும் இழந்துவிடக்கூடும் என்பதால் அதற்கு இன்று திறப்பு விழா.

மானமுள்ளவன்தான் மனிதன். தமிழினமும் மானமும், அறிவுமுள்ளதாக வாழ வேண்டும் என்று பாடுபட்ட, தமிழகத்தில் இன்று எவர் பெயர் எல்லோராலும் ஏற்றுப் போற்றப்பட்டு வருகிறதோ, எவர் மக்களைப் பார்த்துச் 'சிந்தித்துப்பார், ஆய்ந்துபார்', என்று தூண்டினாரோ - அவர் பெயரால் **தந்தைப் பெரியார் அறிவியல் ஆய்வகம்** - திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இந்த ஆய்வகத்திற்கும், மன்றத்திற்கும் மற்றுமுள்ள கூடங்களுக்கும் பாதுகாப்பு தரும், சுற்றுச்சுவர்களுக்கும் பெருமை தருவது - காப்பளிப்பது வாயில்களாகும். இப்பள்ளியின் வாயில்கள் இரண்டு. ஒன்று காமராசர் வாயில், மற்றொன்று திருவள்ளுவர் வாயில். ஏழை எளிய மக்களும், கல்வி கற்றிட வழி செய்தவர் காமராசர். அவர் வழியில் கல்வி கற்று நல்ல சிந்தனை வளத்துடன்

'எப்பொருள் யார் யார் வாய்கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்ப தறிவு'.

'எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப் பொருள் மெய்ப்பொருள் காண்ப தறிவு'.

என்று வள்ளுவர் சொன்னபடி அறிவு பெற்று, மாணவன் வெளியே செல்ல வேண்டும் என்ற எண்ணத்தில், காமராசர் பெயரிலும் வள்ளுவர் பெயரிலும் வாயில்கள் அமைக்கப்பட்டுள்ளன. இந்த வாயில்கள் பழைய மாணவர் சங்க நிதியுதவியுடன் அமைக்கப்பட்டுள்ளது.

சாந்தியால் உலகம் தழைப்பது நன்றா?
சமயபேதம் வளர்த்தே தளர்வது நன்றா?
மாந்தரிற் சாதி வகுப்பது சரியா?
மக்கள் ஒரேகுலமாய் வாழ்வது சரியா? — புரட்சிக் கவிஞர்

இஃதன்றி, சத்துணவுக் கூடம் ஒன்றும், பெற்றோர் ஆசிரியர் கழகத்தின் மூலம் கட்டித் தரப்பட்டுள்ளது.

இப்பணிகளைச் செய்வதற்கு எங்களுக்கு உறுதுணையாக இருந்த சேலம் நகராட்சியின் ஆணையாளர்களும், பொறிஞர்களும், மற்றுமுள்ள பணியாளர்களுமாவர். இப்பள்ளியை இப்படி மாற்றம் செய்திட அனுமதி அளித்தும், கேட்ட பொருட்களை எல்லாம் கொடுத்து உதவியவர்கள் நகராட்சி ஆணையாளர்கள்.

பெருமன்றத்தின் வாயில் இரண்டு கதவுகள் கொண்டதாக ஒரு வகுப்பறைக்குள் செல்லும் தோற்றத்தில் தான் இருந்தது. ஒன்றரை டன் எடையுள்ள 22 அடி நீளமுள்ள இரும்புக்கர்டரை நகராட்சி அளித்ததால் மன்றத்தின் அகலத்திற்கு வாயில் உருவாக உதவியாக இருந்தது. அவர்கள் அனைவருக்கும் நன்றி.

வேண்டுகோள்

எல்லாம் இருக்கும் எங்கள் பள்ளிக்கு இப்போது கால்கள் இரண்டும் இல்லாத குறை ஏற்பட்டுள்ளது. 2.13 ஏக்கர் விளையாட்டுத் திடல் இப்பள்ளிக்கு உண்டு.. அதில்தான் மத்திய அரசு கட்டித்தந்த மாணவர் புத்துணர்வுக் கலைமன்றமும் உள்ளது. அவையிரண்டும் இப்போது இப்பள்ளிக்குப் பயன்படாத படி தொங்கு தோட்டமாகவும், உணவுக் கூடமாகவும் ஆக்கப்பட்டுள்ளன.

மாண்புமிகு மத்திய அமைச்சர் அவர்கள் ரூ.35,000.00 மத்திய அரசு வழங்கிய நிதியினால் கட்டப்பட்ட மாணவர் புத்துணர்வுக் கலைமன்றத்தயும், விளையாட்டுத்திடலையும், இப்பள்ளிக்கு மீட்டுத் தந்து, மாணவர்கள் விளையாட்டுத் துறையில் முன்னேற உதவ வேண்டுமாய் மாணவர்கள் சார்பாகவும், ஆசிரியர்கள் சார்பாகவும் பணிந்து வேண்டிக் கேட்டுக் கொள்கிறோம்.

எந்நாளோ?

என்னருந் தமிழ்நாட் டின்கண்
எல்லோரும் கல்வி கற்றுப்
பன்னருங் கலைஞா னத்தால்,
பராக்கிர மத்தால், அன்பால்,
உன்னத இமயம லைபோல்
ஓங்கிடும் கீர்த்தி யெய்தி
இன்புற்றார் என்று மற்றோர்
இயம்பக்கேட் டிடல்எந் நாளோ?

கைத்திறச் சித்தி ரங்கள்,
கணிதங்கள் வான நூற்கள்,
மெய்த்திற நூற்கள், சிற்பம்,
விஞ்ஞானம், காவி யங்கள்
வைத்துள தமிழர் நூற்கள்
வையத்தின் புதுமை என்னப்
புத்தக சாலை எங்கும்
புதுக்குநாள் எந்த நாளோ?

தாயெழிற் றமிழை, என்றன்
தமிழரின் கவிதை தன்னை
ஆயிரம் மொழியிற் காண
இப்புவி அவாவிற் றென்ற
தோயுறும் மதுவின் ஆறு
தொடர்ந்தென்றன் செவியில் வந்து
பாயுநாள் எந்த நாளோ,
ஆரிதைப் பகர்வார் இங்கே?

பார்த்தொழில் அனைத்தும் கொண்ட
பயன்தரும் ஆலைக் கூட்டம்
ஆர்த்திடக் கேட்ப தென்றோ?
அணிபெறத் தமிழர் கூட்டம்
போர்த்தொழில் பயில்வ தெண்ணிப்
புவியெலாம் நடுங்கிற் றென்ற
வார்த்தையைக் கேட்டு நெஞ்சு
மகிழ்ந்துகூத் தாடல் என்றோ?

— புரட்சிக் கவிஞர்

சாதிமத பேதங்கள் மூடவழக்கங்கள்
தாங்கி நடைபெற்றுவரும் சண்டையுலகதினை
ஊதையினில் துரும்புபோல் அலைக் கழிப்போம்; பின்னர்
ஒழித்திடுவோம் புதியதோர் உலகம் செய்வோம்!

— பாரதிதாசன்

நூலைப்படி

புலவர் பி. அண்ணாமலை

படிப்பறிவு இல்லாமையால் அறியாமை இருளில் அழுந்திக்கிடக்கும் நம் அகண்ட பாரதத்தை அதிலிருந்து மீட்க அறிவொளி இயக்கம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

ஞானத்திலே பரமோனத்திலே, கவிதை யிலே, யாகத்திலே மிகு சாத்திரங்கள் கண்டு தருவதிலே பன்னரும் உபநிடத நூல்களை எந்நாடும் படைக்க முடியாத அளவுக்குப் படைத்ததிலே மாமுனிவோர்கள் பலர் அடிக் கடி தோன்றியதிலே பூரண ஞானம் (முழு அறிவு) பெற்றுப் பொலிந்ததிலே சிறந்த நாடு, என்று எண்பது ஆண்டுகளுக்கு முன்பே போற்றப்பட்ட பாரத புண்ணிய பூமியில் தான் இன்று அறிவொளித் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய நிலை.

முப்பத்து முக்கோடி தேவர்கள், நாற்பத் தெண்ணாயிரம் ரிஷிகள், அட்டதிக்கு பால கர்கள், கின்னரர், கிம்புருடர், அதற்கு மேலா கக் கல்வியா? செல்வமா? வீரமா? இம்மூன் றையும், பாலும், தெளிதேனும், பாகும், பருப்பும், உண்டியலும் பெற்றுக்கொண்டு இருக்குமிடம் தேடிவந்து உருக்கமுடன் நமக்கு அருளக்கூடிய மகாசக்தி பொருந்திய மும்மூர்த்தியர். அவர்களின் துணைவியர், அவர்களது குடும்பத்தார் ஆகிய எல்லோ ரும் சேர்ந்து இந்நாட்டைக் கல்வி அறிவு பெறாமல் பாதுகாத்து வந்ததால் இன்று அறிவொளி இயக்கம் தேவைப்பட்டுள்ளது.

கல்வியினால் அறியாமை நீங்கும்! அறி யாமை நீங்கினால் அறிவு கிடைக்கும். அறிவு நன்மையை - குற்றமற்ற நன்மையை, அனை வருக்கும் ஏற்ற நன்மையை அளிக்கும். அப்போதுதான் அறிவினால் ஒளி உண்டா கும் எனக் கல்வியின் பெருமையைத் திருக்கு றள், நாலடியார், திரிகடுகம், போன்ற பல பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் சிறப்பித்துப் புகழ்ந்திருப்பதும் இந்த நாட்டில்தான். அவை அறநூற்கள் ஆனபடியால் பிறநூல்கள் மக்கள் மனதில் புகுந்து இடம்பிடித்து அவர்களை ஆட்டிப் படைத்து ஆதிக்கம் செலுத்திய அளவில் நூறில் ஒருகூறு கூட அவைகளால் மக்கள் மனதில் இடம்பெற முடியவில்லை.

அவனன்றி ஓரணுவும் அசையாது, எல் லாம் அவன் செயல், நம்மால் என்ன ஆகும். நானிருக்கப் பயமேன், அன்று எழுதியதை அழித்தெழுதவோ முடியும்? எல்லாம் விதிப் படிதான் நடக்கும். விதி வெல்ல முடியாதது என்ற உருட்டல், புரட்டல்கள், கல்வி அறிவு பெறுவதில் மக்களைத் திசை மாற்றிவிட்டன. ''பொய்ச் சாத்திரப் பேய்கள் சொல்லும் வார்த்தையை நம்பியே'' இந்த நாடு கல் வியை இழந்தது.

புகழ் பெற்ற மக்களுக்குத்தான் உலகில் வரலாறுகள் எழுதப்படும். ஆனால், பிறந்த ஒவ்வொருவருக்கும் வரலாறு எழுதப்படு வது நமது நாட்டில்தான். அதுவும், அவன் வாழ்வு தொடங்கும் முன்பே, அவன் கரு வாய் தாய் வயிற்றில் உருவானது முதல் அவனது ஆயுள் பாகம் முடியும் வரை. குழந்தை பிறந்ததும் பெற்றவர் சந்திக்கும் முதல் ஆள் அந்த வரலாற்றுச் சிற்பி சோதி டன்தான். குழந்தை பிறந்த நேரத்தை வைத்தே குழந்தையின் வருங்கால வாழ்க்கை யைப் படம் பிடித்துக் காட்டி விடுவார், அந்தச் சோதிடர். குழந்தையின் வாழ்வு அவர் அன்று போடும் ''டைம்டேபிள்''படி

குன்றினைப் போல் உடல் வண்மை வேண்டும்
கொடுமை தீர்க்கப் போராடுதல் வேண்டும். — புரட்சிக் கவிஞர்

நடந்து மணி அடித்து முடிவுறும். அவரே, அக்குழந்தைக்குப் படிப்பு வருமா, வராதா என்பதையும் முடிவு செய்து விடுவார். அக் குழந்தைக்கு நல்ல ஆசிரியர் எந்தப் பள்ளி யில் இருப்பவர் என்பதைவிட எந்த வீட்டில் இருக்கிறார். அந்த வீட்டின் எண் என்ன என்பதையே முக்கியமாக வைத்துச் சோதிடர் ''சுட்டுப் போட்டாலும் இவனுக்குப் படிப்பு வராது'', அல்லது ''வாத்தியாரே இல்லாமல் இவன் பெரிய மேதையாகிவிடுவான்'' என்று பெற்றோருக்கு அறிவித்து விடுவார். பிரமன் கருவிலேயே இவன் தலையைக் கண்டு பிடித்து அதில் தன் விருப்பத்தின்படி எழுதி விட்டான். அந்த உயிலை யாராலும் மாற்ற முடியாது என்றும், பெற்றோருக்கு உறுதிய ளிக்க

ஜென்ம ராமர் வனத்திலே
  சீதையைச் சிறை வைத்ததும்
தீதிலாதொரு மூன்றிலே
  துரியோதனன் படை மாண்டதும்
இன்மை யெட்டினில் வாலி பட்டம்
  இழந்து போம்படி யானதும்
ஈசனார் ஒரு பத்திலே தலை
  ஓட்டிலே இரந்துண்டதும்
தர்மபுத்திரர் நாலிலே வன
  வாசம் அப்படி போனதும்
சத்திய மாமுனி ஆறிலே
  இருகாலிலே தளை பூண்டதும்
வன்மையுற்றிட இராவணன் முடி
  பன்னிரண்டினில் வீழ்ந்ததும்
மன்னுமா குரு சாரி மாமனை
  வாழ்விலா துறும் என்பவே
(குடும்ப சோதிடம் பக்கம்-130)

என்று ஒரு பாடலைப் பக்குவமாகக் கூறி கைகேயினால் காட்டுக்கு அனுப்பப் பட்ட இராமன் ஆட்சிக்கு வந்த பின்னும் சீதையை மீண்டும் காட்டுக்கே அனுப்பினான் என்பதில் தொடங்கி ''துரியோதனன் அழிந் தது, வாலி அரசிழந்தது, சிவபெருமான் மண்டை ஓட்டில் பிச்சை எடுத்தது, பாண்டு மக்கள் காடு சென்றது, முனிவன் கால் தளையப்பட்டது, இராவணன் அழிந்தது, எல்லாம் யாரால்? குரு இருந்த வீட்டால்! - அந்த வீடு பெற்ற வரிசை எண்ணினால்'' என்று சர்வசக்தி பெற்றவர்களாக உருவகித்து மனிதனால் பிறப்பிக்கப்பட்ட கடவுள்களின் வாழ்க்கையே குரு நின்ற வீட்டால்தான் சிக்கலுக்கு ஆளானது என்று சித்தரித்துக் காட்ட அதைக் கேட்டே பயந்து நிற்கும் பெற்றவர்களைப் பார்த்து ''அவர்கள் வாழ்க் கையே அப்படி என்றால் நீ எம்மாத்திரம்?'' என்று விளக்கமளித்து விரட்டி விடுவார். அதைக்கேட்டு மேலும் சஞ்சலப்பட்டால் ''கீழ்க்குலத்தவர்கட்கு உரிய விதிப்படிதானே எல்லாம் நடக்கும். மக்கள் நூல் (மநுதர்மம்) வகுத்தபடிதானே நாம் வாழ முடியும். ''விதி யை'' மாற்ற யாரால் முடியும்?'' என்று ஆறுதல் மொழி கூறி பெற்றோர் நம்பிக்கை யூட்டப்படுவர்.

அத்தகைய அறிவுரைகளால் திருத்தப் பட்ட மக்கள் வாழ்ந்து வரும் இந்தியப் பெருநாட்டில், இமயம் முதல் குமரி வரை, இராமன், சிவன், இராவணன், பிரமன் மற் றும் அவர்களது சுற்றத்தார்களின் வாழ்க்கை வரலாறுகளும், பிரம்மலீலைகளும், மாயா விநோதங்களும் அங்கிங்கெனாதபடி எங்கும் எப்போதும் எதன் மூலமும் இடைவிடாமல் மக்களிடம் தொடர்ந்து பரப்பப்பட்டு மக்க ளின் வாழ்வில் இரண்டறக் கலந்து ஆதிக்கம் பெற்று வருகின்றன. மேலும், அவை பரப்பப் படும் வேகத்தில், அளவில் ஆயிரத்தில் ஒரு கூறு கூட கல்வியினால் அறிவுபெற்று, அல்ல லின்றி மக்கள் நன்மையுடன் வாழலாம் என்ற கருத்துக்கள் மக்களிடத்தில் பரப்பப்படவோ, இடம்பிடிக்கவோ இல்லை. இடம் பிடிக்கவும் அவர்கள் அனுமதிக்கவில்லை.

மனிதன் செய்யும் காரியங்கள் எல்லாம் ஜாதகப்படியும், ஜாதகப் பலன்களெல்லாம்

நல்லறிவை நாளும் உயர்த்தி உயர்த்தியே
புல்லறிவைப் போக்கிப் புது நிலை தேடவேண்டும் — புரட்சிக் கவிஞர்

அவனுக்கு விதிக்கப்பட்ட விதிப்படியும், விதியெல்லாம் முன் ஜென்மகர்மத்தின் பலா பலன் படியும்தான் நடக்கும் என்றால் பாவ புண்ணிய பாகுபாடு, மோட்சம், நரகம் என்பவைகள் அவைகளினின்று தப்பித்துக் கொள்ள பரிகாரங்கள் எப்படி வந்தன? என்று கேள்வி கேட்டு சிந்தித்தவர்கள் எழு திய நூற்களை மதியாமல் நாட்டை ஆண்ட மன்னர்களும், மநுதர்ம நூல்களுக்குத்தான் அடிமைப்பட்டு, ஆட்சி புரிந்தார்களே தவிர அறநூல்கள் கூறியபடி மக்கள் கல்வி பயின்று அறிவு பெற வேண்டும் என்று ஒருபோதும் ஆட்சி செய்ததில்லை. வெள்ளைக்காரர்கள் தான் இந்த நாட்டில் கல்வி பரவ வேண்டும் என்று பள்ளிகளைத் திறந்தார்கள். அது கூட ஒருவகை ஆதிக்கத்திற்காக என்றுகூட கூறப் பட்டது. தன் ஆட்சியை நடத்த உதவுவதற்கு ஆ ஙளை உருவாக்கவும், மக்களிடம் தங் கள் மதத்தைப் பரப்பவும், உதவியாக இருக் குமென்று கருதியே பள்ளிக்கூடங்கள் திறக் கப்பட்டது என்று ஆங்கிலேயர்கள் பள்ளிக் கூடம் திறப்பதை விரும்பாதவர்கள் கூறினார் கள். அப்படி இருந்தும் அதைப் பொருட்ப டுத்தாமல் பள்ளிகள் திறக்கப்பட்டன, ஆங்கி லேயர்களால். அப்படித் திறக்கப்பட்ட பள்ளி களில் சேலம் மாவட்டத்திலேயே, **சேலம் கோட்டை நகராட்சி மேல்நிலைப் பள்ளி** தான், மாவட்டத்தில் முதற்பள்ளியாகத் திறக் கப்பட்டது. 1856ல் சென்னையிலும், பம்பா யிலும், கல்கத்தாவிலும் பல்கலைக் கழகங் கள் தோன்றிய காலத்தில் சேலத்தில் 'வர்ன குலர்ஸ்கூல்' என்ற தொடக்கப்பள்ளிதான் தோன்ற முடிந்தது. இந்நிலை வளர்ந்து நாடெங்கும் பள்ளிகள் தோன்றி மக்கள் கல்வி அறிவு பெற முயன்று வந்தபோது அதற்கும் முட்டுக்கட்டை தோன்றியது. அதி லும், சேலத்துக்குத் தான் முதலிடம். இந்திய மக்கள் அந்நியர்களிடம் அடிமைப்பட்டுக் கிடந்த காலத்தில் சுதந்திர உணர்வை ஊட்டி யவர்கள் நாட்டை ஆளுபவர்களாக வரவும் வெள்ளையர் ஆதிக்கத்தில் உரிமை வழங்கப் பட்டிருந்தது.

சேலத்திற்குக் குடிநீர் வழங்கிய பெரு மைக்குரிய திரு. **சி. இராசகோபாலாச் சாரியார்** அவர்கள் 1937-ல் தமிழகத்து முதலமைச்சராகப் பொறுப்பை ஏற்றுச் செய்த பணிகளில், பள்ளிக்கூடங்களை மூடுவதை யும், முக்கியப் பணியாகச் செய்தார். நாட்டை ஆள வருமானம் பற்றவில்லை என்று காரணம் காட்டி நீதிக்கட்சிக் காலத்தில் திறக்கப்பட்ட தொடக்கப் பள்ளிகளை எல் லாம் மூடினார்.

இன்று, அறிவொளி இயக்கம் தொடங்க வேண்டிய நிலைக்கு நாடு போனதற்குக் காரணமானவர்களில் முதலிடம் அவருக்கே உண்டு. அவர் தான் ஆட்சிக்கு வந்தபோ தெல்லாம் பள்ளிகளை மூடுவதையே தனது பிறவியின் பயனாகக் கருதினார். விடுதலை பெற்ற இந்தியாவின் முதல் கவர்னர் ஜெனர லாகவும், ஆங்கில ஆட்சியின் இறுதி கவர் னர் ஜெனரலாகவும் குடியரசுத் தலைவர் பதவியைவிட மேலான பதவியில் இருந்து சேலத்துக்கு வரலாற்றுப் பெருமையைத் தேடித்தந்த அவர் மீண்டும் 1952இல் தமிழ் நாட்டை ஆளும் முதலமைச்சராகப் பதவி யேற்றபோதும் மீண்டும் ஆறாயிரம் பள்ளிக் கூடங்களை மூடினார். அதிலும், கிராமப் புறங்களில் இருந்த பள்ளிக்கூடங்களையே மூடினார். ஏன் என்று கேட்டவர்க்குக் கூறிய காரணம் ''எல்லோரும் படித்தால் வேலை எங்கே கிடைக்கும். அவனவன் குலத்தொ ழிலை யார் செய்வது'' என்பதுதான். இன்று எந்த ஏழை எளிய மக்களைத் தேடி ஓடி, படி, படி என்று கூறி அறிவொளி இயக்கம் தொடங்கப்பட்டுள்ளதோ அந்த ஏழை எளிய மக்கள் படித்து வந்த தொடக்கப் பள்ளிக் கூடங்கள் இப்படி 1952ல் மூடப்பட்டன.

மூடாமல் மீதியிருந்த பள்ளிக் கூடங்களி லும் பாதிநேரம் படிப்பு, மீதி நேரம் குலக் கல்வி என்று பள்ளிகளே முழுதாகச் செயல்ப

குன்றாப் பெருமை உடைய நிறைமொழி
ஒன்றே என்றால் அது என் தமிழ்மொழி — புரட்சிக் கவிஞர்

டாமல் தடுத்தார். இவரைத் தவிர திறந்த பள்ளிகளை எந்த மாநிலத்திலும் இந்தியா வில் வேறு யாரும் மூடியதாகத் தெரிய வில்லை.

எழுத்தறிவு வேண்டும், பகுத்தறிய வேண்டும். அதனால், அறிவொளி பெற வேண்டும் என்று மக்களிடம் பாடுபட்டுப் பகுத்தறிவுப் பிரச்சாரம் செய்து வந்த திரு. இராசகோபாலாச்சாரியாரின் இனிய, நெருங்கிய நண்பரான **தந்தை பெரியார் பள்ளிகள்** மூடியதைப்பார்த்து பதைபதைத்துப் பொங்கி எழுந்தார். 1937ல் ஆட்சிக்கு வந்தபோது அவர் பள்ளிகளை மூடியதை, எதிர்த்துப் போராடியதையும், சுட்டிக்காட்டி மீண்டும் 1952-ல் பதவிக்கு வந்தவுடன் பள்ளிகளை மூடுவதையும் எடுத்துக்காட்டி நாடெங்கும் பிரச்சாரம் செய்து, ஆச்சாரியார் அவர்களை ஆட்சிப் பொறுப்பிலிருந்தே அகலும்படிச் செய்தார். அந்த வகையில் **அறிவொளி இயக்கத்துக்கு மூல காரணமாக** விளங்கியதில் முதல் பங்கு சேலத்திலேயே பிறந்த **பெரியாரைத்தான்** சேரும்.

ஆச்சாரியாரை அடுத்துத் தமிழகத்தை ஆளும் பொறுப்பை விருதுநகர் தந்த பெருந்தலைவர் திரு.கு. **காமராசர்** அவர்கள் ஏற்றார். ஆட்சிப் பொறுப்பை ஏற்றதும் முதலில் அவர் மூடிக்கிடந்த 6 ஆயிரம் பள்ளிகளையும் முதல் வேலையாகத் திறந்தார். கல்வியின் தேவையை உணர்ந்து, மேலும் புதியதாக 30 ஆயிரம் பள்ளிகளைத் திறக்கவும் ஆணையிட்டார். அது 60 ஆயிரமாக வளர்ந்தது. அவ்வளவு தேவை உள்ளபோது இருந்த பள்ளிகளிலும் 6 ஆயிரம் பள்ளிகள் மூடப்பட்டதை எண்ணிப்பார்த்த மக்கள் காமராசர் அவர்களைப் பச்சைத் தமிழர் என்றும், கல்விக்கண் தந்த வள்ளலென்றும் போற்றினர். படிக்க வசதியற்ற ஏழை எளிய மாணவர்களுக்குப் பகலுணவும், போடச் செய்தார். அப்படியும் பள்ளிக்குப் படிக்கக் குழந்தைகளை அனுப்பாத பெற்றோர்களைப் பார்த்து, ஏன் பிள்ளை களைப் பள்ளிக்கு அனுப்பத் தயங்குகிறீர்கள் என்று கேட்டார். ''இவன் தலையில் இவனுக்குப் படிப்பு வராதென்று பிரமன் எழுதிவிட்டாராம். அதனால் பள்ளிக்கு அனுப்புவதால் பயனில்லை'' என்று அவர்கள் பதில் தந்ததைக் கேட்ட காமராசர் ''இனி எங்கள் மக்கள் தலையில் படிப்பு வரும்படியாகப் பிரம்மாவை நான் எழுதச் சொல்கிறேன். அதற்கு அவர் ஏதாவது கேட்டாலும் (லஞ்சம்) கொடுத்து படிப்பு வருமென்று மாற்றி எழுதச் சொல்கிறேன். பள்ளிக்கு அனுப்புங்கள்'' என்று கூறி, மக்கள் கல்வி பெற தன் ஆட்சிப் பணிக்காலம் முழுவதும் பாடுபட்டார். அந்த வகையில் **அறிவொளி இயக்கத்தின் தந்தை** என்று போற்றப்பட வேண்டியவர் **காமராசர்** ஆவார்.

அவரது பணியால் குரு இருந்த இடத்துப் பலன் வக்கிரமடைந்தது. ஆனால், அதைப் பாராட்டிப் போற்றி வந்த பழமை லோகவாதிகள் பாடிய பாடல்கள் ஒன்றும் ஆதிக்கம் குறைந்து போய்விடவில்லை. அறிவையே தெய்வமாகக் கொள்ளுங்கள் என்று ஆயிரந்தெய்வங்களை பெரியாருக்கு முன்பே திட்டித் தீர்த்த **பாரதியார்**

காலை எழுந்தவுடன் படிப்பு - பின்பு
கனிவு கொடுக்கும் நல்ல பாட்டு;
மாலை முழுதும் விளையாட்டு - என்று
வழக்கப்படுத்திக் கொள்ளு பாப்பா.

என்று காலை எழுந்தவுடன் படி என்றும், அறிவுரை கூறியிருந்தார். ஆனால், பாரதியின் இப்பாட்டை மக்கள் படித்துக் கேட்டுப் பின்பற்றியதைவிட பாரதியார் பாடிய

''**தீராத விளையாட்டுப் பிள்ளை - கண்ணன்**
தெருவிலே பெண்களுக்கு ஓயாத தொல்லை''

வீரம் உடையது செந்தமிழ் நாடு
மேன்மை உடையது தமிழர் பண்பாடு — புரட்சிக் கவிஞர்

என்ற பாடலை இசையோடுபாடியும், ஆடியும், காட்டுவதில் காட்டிய ஆர்வமும், அதை ரசித்ததிலே மக்கள் கொடுத்த ஊக்கமும் காலை எழுந்தவுடன் படித்த பாப்பாவுக்குத் தெருவிலே நடந்தால் நடக்கும் தீராத தொல்லைகள் தான் கிடைக்கும் என்ற அச்சத்தைத் தோற்றுவித்தது. குழந்தைப் பாடநூற்களில் வேறு கண்ணன் இடம் பிடித்துக் கொண்டான். தொல்லைக்குக் கேட்கவா வேண்டும்! கண்ணனைப் பற்றிய பாப்பா பாடல் இளஞ்சிறார்களுக்கு எதிர்விளைவைத் தந்துவிடும். அதனால், பள்ளிக்குச் செல்ல பெண் குழந்தைகள் அஞ்சுவர் என்ற உணர்வு, பாரதியுடன் நெருங்கிப் பழகிய அவரைப் பின்பற்றிப் புதிய சிந்தனைகளை, மக்களுக்கு வழங்கிய பாரதியின் தாசனான புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்களுக்கு ஏற்பட்டது. பாரதியாரின் தீராத விளையாட்டுப் பிள்ளையாகச் சிறுவர்கள் இருப்பார்கள் என்று பாப்பா அஞ்சக் கூடாது என்பதை வலியுறுத்தித் தீராத விளையாட்டுப் பிள்ளை என்ற பாட்டின் கருத்தை மாற்றி அப்பாடலின் அமைப்பையேபின்பற்றி பாப்பாவுக்கு ஒரு பாடலை அவர் பாடினார். தெருவிலே வரும் தொல்லையை நினைத்துப் பிள்ளை அழுவதாகக் கொண்டு;

தலைவாரிப் பூச்சூடி உன்னைப் பாட
சாலைக்குப் போ என்று சொன்னாள் உன்
அன்னை
சிலைபோல ஏனங்கு நின்றாய்? - நீ
சிந்தாத கண்ணீரை ஏன்சிந்து கின்றாய்?
விலைபோட்டு வாங்கவா முடியும்? - கல்வி
வேளை தோறும் கற்று வருவதால் படியும்!
மலைவாழை அல்லவோ கல்வி? - நீ
வாயார உண்ணுவாய் போ என் புதல்வி!
படியாத பெண்ணா யிருந்தால் - கேலி
பண்ணுவார் என்னை இவ்வூரார் தெரிந்தால்
கடிகாரம் ஓடுமுன் ஓடு என்
கண்ணல்ல? அண்டைவீட்டுப் பெண்களோடு
கடிதாய் இருக்குமிப் போது! - கல்வி
கற்றிடக் கற்றிடத் தெரியுமப் போது!
கடல்சூழ்ந்த இத்தமிழ் நாடு - பெண்
கல்வி பெண்கல்வி என்கின்றதன் போடு.

என்று பாடினார். இப்பாடலும், ஓரளவுக்கு எல்லோராலும் பாடப்பட்டு வந்தது. அடுப்பூதும் பெண்களுக்குப் படிப்பெதற்கு என்ற அடுக்குமொழி வசனம் ஆர்ப்பரித்து மக்களில் சரிபாதியான பெண்ணினத்தைப் படிக்கக் கூடாதென்று ஒதுக்குவதிலே முன்னணியில் இருந்ததை ஒழிக்கவும் இப்பாடல் வழி செய்ததோடு, பெண்கள் கல்வி கற்றால்தான் நாடு முன்னேற்றம் காணும் என்றும், ஒரு ஆண் கல்வி கற்றால் அது அவனுக்கு மட்டுமே பயன்படும். ஒரு பெண் கல்வி கற்றால் அவள் பெறும் குழந்தைகளுக்கும் அக்கல்வி போய்ச்சேர்ந்து குடும்பத்துக்கே பயன் அளிக்கும் என்றும், கல்வியின் நிலை மக்களிடம் பரப்பப்பட்டது.

''கல்லாமையினால் பெண் அடிமைப் படுகிறாள். அடிமைகளில் எல்லாம் கொடுமையானது பெண் அடிமை. பெண்ணை அடிமைப்படுத்தும் நாடும் பிற நாட்டுக்கு அடிமைப்படும்'' என்று தமிழ்த் தென்றல் திரு.வி.க. அவர்களும் பெண்ணின் பெருமைகளை மக்களிடம் வலியுறுத்தினார். அந்த வகையில் ஆணுக்கும் பெண்ணுக்கும் சமமாகவே கல்வி வேண்டும். அதனால், நாடு முன்னேறும் என்று கட்டியங் கூறி அறிவொளி பரவ கல்வி பெறவேண்டும் என்ற கருத்து மக்களிடையே பரப்பும் புரட்சிக் கவிகளைப் பாடியதில் அறிவொளி பரப்பும் இயக்கமாகத் திகழ்ந்தவர் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்களாவார்.

எவ்வளவுதான் கல்விக்கு முதலிடம் தந்து பெரியாரும் பாரதிதாசனும், திரு.வி.க.வும், காமராசரும், அவர்களைப் பின்பற்றுவோரும் பாடுபட்டும் இன்னமும் நாடு எழுத்தறிவு பெறுவதில் தன்னிறைவு கொள்ளவில்லை என்றால் அதற்குக் காரணம், கல்வி

மாந்தர் பற்பல மொழிகள் பற்பல மதிக்கும் அறிவிருந்தும்
ஏந்தும் சாதி சமயம் மதத்தின் இழிவால் கெட்டனரே! — புரட்சிக் கவிஞர்

தரும் இடம் பள்ளி ஒன்றாகவும், கல்வியின் பெருமையை விளக்கிப் பேசுவதற்கும், அதைத் தவிர பிறிதில்லாமலும், பள்ளிக்கு வெளியில் பள்ளி வாயிலிலிருந்து, வீட்டு வாயில் வரை எழும் ஒலிகள், நிகழும் நிகழ்வுகள், பார்க்குமிடமெங்கும் ஒரு நீக்க மற நின்றுதரும் காட்சிகள், கேள்விகள் யாவும், கல்விக்குப் புறம்பான ஒழுக்கத்தைச் சிதைக்கும் நிகழ்வுகளாகவே நிகழ்வதும், ஆதிக்கவாசிகள் மதமூட நம்பிக்கைகளின் வாயிலிலிருந்து மக்கள் அறிவு பெறாமல் இருக்க இன்னமும் கல்வியைச் சிலர்தான் படிக்க வேண்டும் என்றும், பெண்கள் படிக்கக் கூடாது என்றும் பிதற்றித் திரிவதும்தான் காரணமாகும். பெண்களுக்கு எந்த இடத்தை யும் கொடுக்காத மத அமைப்புகள் பெண் அடிமையை நிலைநாட்டுவதிலேயே கண் ணும் கருத்துமாகச் செயல்பட்டு வருகின்றன. மக்கள் அறியாமையை மூலதனமாகக் கொண்ட இவ்வமைப்புகளின் பிடியிலிருந்து அவர்களை மீளச் செய்வது கல்வி ஒன்றே என்பதை அறிவொளி இயக்கம் உணர்ந்ததை விட எதிர்ப்பான அமைப்புகள் நன்கு உணர்ந்தே எதிராகச் செயல்படுகின்றன.

கல்லாமையை இல்லாமையாக்கிக் கல்வியைக் கடல்போல் பெருக்கினால், கல்லாமையால் எந்தத் துறைகளில் மக்கள் அழிவுறுகிறார்களோ அந்தத் துறைகளிலெல்லாம் அவர்களுக்கு விடுதலை கிடைக்கும். கல்வி அறிவு அதற்கேற்ற புதிய சிந்தனைகளைத் தர வேண்டும். பெற்ற கல்வியால் தவறான கருத்துக்களை எதிர்க்க முடியாவிட்டாலும், ஏற்காமலும், தானும் அதைப் பரப்ப முயலாமலுமாவது இருக்கலாம். பூமி உருண்டையானது, இரவு பகல் ஏற்படுவது, முழு நிலா, அமாவாசை ஏற்படுவது, கிரணங்கள் பிடிப்பது எப்படி என்பவைகளைக் கல்வியினால் அறிந்து கொண்டாலும் அவைகளை நம்பாமல், பூமி தட்டை என்ற கதைகளையும், பாம்பு ஒன்று தன் தலையில் பூமியைச் சுமப்பதாக விட்ட கதைகளையும், வேறு இரண்டு பாம்புகள் நிலவையும், சூரியனையும் விழுங்குவதால் கிரணங்கள் ஏற்படுவதாகப் புளுகும் கதைகளையும், குரங்கொன்று பெரிய மலையைத் தூக்கியதாகக் கற்பித்ததையும், சூரியனையும், நிலவையும் பாம்புகளிடமிருந்து காப்பாற்ற நடத்தும் விழாக்களையும், இவை தொடர்பாக எழுதப்பட்டுள்ள அளவற்ற பொய்க்கதைக ையும், படிக்காத மக்களைவிட அதிகமாக நம்புபவர்களாகவும், அவர்களைவிட அதிவேகத்தில் அறிவியல் சாதனங்களைப் பயன்படுத்தியும், அவைகளைப் பரப்புபவ ளாகவும், படித்துப் பட்டம் பெற்றவர்கள் இருக்கிறார்கள். இன்றுள்ள பட்டம் பெற்ற கல்வியறிவு பெற்ற படித்தவர்கள் இப்படியானதற்குக் காரணம் என்ன?

கற்க வேண ்டியவைகளைக் கல்லாமையும், கசடுறக் கற்றதும் அதன்படி நின்றதும் தான் காரணம் அதனால்தான் 100க்கு 5 பேர் கூட படிக்காத பாரதியார் காலத்திலேயே படித்த ஐந்து பேரும் கூட நல்லவர்களாக இல்லாமலிருந்ததுடன் பாவிகளாக வேறு இருந்துள்ளனர். அதைப்பொறுக்க முடியாமல் தான் ''படித்தவன் பாவம் பண்ணினால் ஐயோன்னு போவான், ஐயோன்னு போவான்'' என்று பாரதியார் வயிற்றில் அடித்துக்கொண்டு பாடினார்.

படித்தவனெல்லாம் பிழைக்கத் தெரிந்தவனே தவிர அவனையெல்லாம் அறிவாளி என்று அழைக்க முடியாது. மற்றவர்களும் தன்னைப் போல வாழவேண்டும் என்று சிந்திப்பவனே அறிவுடையவனாவான் என்று படித்தவர்களை எச்சரித்தார் பெரியார்.

படிப்பு வளர்ந்து 100க்கு 3 பேர் 4 பேராக இருந்த நிலை மாறி படித்தவர் 30, 40 பேராக உயர்ந்த போதும் கல்வி அறிவைத் தராததால் அவர்களிடம் ஒழுக்கம் வளரவில்லை. அதைக்கண்டு,

இம்மை என்பது பகையற்ற வாழ்வே - இங்கு
மறுமை என்பது மாயாப் பெரும்புகழே! — புரட்சிக் கவிஞர்

''அறிவு வளர தருமம் அரோகரா!
ஒழுக்கம் அரோகரா'' என்று புரட்சிக் கவிஞர் வருந்திப் பாடினார். அக்கல்விதான் இன்று கற்பிப்பவரிடத்தும், கற்பவரிடத்தும் கல்வி நிலையங்களிடத்தும் ஆட்சி அலுவலகங்களிடத்தும், எங்கும் பாவங்களும் அறிவின்மையும், அறச்செயல் அழிப்பும், ஒழுக்கக் கேடுகளும் பெருக வழி செய்துள்ளது.

''விலை போட்டு வாங்கவா முடியும்? கல்வி
வேளை தோறும் கற்று வருவதால் படியும்!''

என்று கூறியதைப் பொய்யாக்கிக் கல்வி கற்கப்படாமலேயே விலை கொடுத்து வாங்கப்படுகிறது. பட்டங்கள் விற்பதற்கென்றே பள்ளிகளும், கல்லூரிகளும், பல்கலைக் கழகங்களும் பயிற்சிப் பள்ளிகளும் திறக்கப்பட்டுள்ளன. வேள்ளதோறும் கற்பவன் வீதியில் திரிகிறான். விலை போட்டு வாங்கியவன் நாட்டையே விளையாடிக் களிக்கிறான்.

கல்வி, மக்கள் மக்களாய் வாழ உதவ வேண்டும். உயிரினங்களாக, விலங்காக வாழ கல்வி தேவையில்லை. விலங்கினத்தில் மிக உயரிய விலங்கு - விலங்குகளிலெல்லாம் கொடிய விலங்கு மனித விலங்கு. விலங்குகளிடத்திலிருந்து தப்பித்துக் கொள்ளலாம். அதுவும், படித்த இப்புதிய மனித விலங்குகளிடமிருந்து யாரும் தப்பவே முடியாது. விலங்குகளிலிருந்து மனிதனை வேறு பிரித்துக் காட்டுவது கல்வி. மனிதன் மனிதனாக வாழ, புண்ணாகக் கண்ணில்லாமலிருக்க உதவுவது கல்வி. பண்பாடு, ஒழுக்கம், நாகரிகம் ஆகியவைகளைப் பெற்று வாழ உதவுவது கல்வி. அதனால்தான் ''அறம், பொருள், இன்பம் வீடடைதல் (புகழ்) நூற்பயனே'' என்று நன்னூல் கூறியது. மனிதனை ஒழுக்கமுள்ளவனாக ஆக்கி அதன் வழி பொருளீட்ட வைத்து மகிழ்வை அளிப்பதே கல்வி என்ற இலக்கண வரம்புகளெல்லாம் மறுக்கப்பட்டு, மாற்றப்பட்டு,

பொருளீட்டக்கல்வி,
புதுவாழ்வு பெறக்கல்வி,
இன்ப வாழ்வுக்குக் கல்வி,
ஏமாறாமலிருக்கக் கல்வி,
வாழ்க்கைக்குக் கல்வி,
தொழிற்கல்வி,

என்று பிழைப்புக்கு ஒரு கருவியாகக் கல்வி விளம்பரப்படுத்தப் பட்டதன் விளைவையே நாம் இன்று சந்தித்து வருகிறோம்.

அறத்தை ஒழித்த கல்வி பாவிகளையும், அறிவற்றவர்களையும் ஒழுக்கமற்றவர்களையும்தான் உருவாக்கும் - உருவாக்கியது என்பதைப் பாரதியாரும் பெரியாரும், பாரதிதாசனும் தெளிவு படுத்தியுள்ள பின்னரும், நாட்டில் அறமற்ற கல்வியே, அறிவு ஒளி தராத கல்வியே முன்னைவிட வெகுவிமரிசையாகப் பரப்பப்பட்டு வருகிறது. பல ஆயிரக் கணக்கான கோடிகளைக் கொட்டி வளர்க்கப் பட்டுவரும் பொதுக் கல்வியின் பயனே இப்படி இருக்கும் இக்காலகட்டத்தில்தான், அறிவொளி இயக்கம் சில கோடிச் செலவில் அறிவொளி பரப்பவென்றே கொண்டுவரப் பட்டுள்ளது. அவ்வியக்க அதிபர்களின் செயற்பாடுகளாவது அறவழியில் கல்வியை உருவாக்க உதவும் முறையில் அமைய வேண்டும். அறிவொளி பெற புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் கூறியுள்ள சில முறையினை அறிந்து கொள்வது அதற்கும் பெருந்துணையாக அமையும்.

முறையாகக் கற்கும் கல்வியே முறையான வாழ்வுக்கு அடிப்படை. அறிவும், ஒழுக்கமும், தராதகல்வியால் நாடு கெட்டால் அந்த நாட்டைத் திருத்த யாராலும் முடியாது. அந்த நிலையை நோக்கி விரைந்து சென்று கொண்டிருக்கும் நமது நாடு அதிலிருந்து மீள இனியாவது முறையான கல்வி பெற வேண்டும். படித்ததாக நடிக்காமல் உண்மையில் படிக்க வேண்டும். புரட்சிக் கவிஞர் காட்டும் வழியில் படிக்க வேண்டும். ஏனென்றால்

தமிழ்மொழி வாழ்ந்தால் தமிழர் வாழ்வார்
தமிழ்மொழி வீழ்ந்தால் தமிழர் வீழ்வார். — புரட்சிக் கவிஞர்

இது புரட்சிக் காலம்.

நூலைப்படி

நூலைப்படி! - சங்கத்தமிழ்
நூலைப்படி - முறைப்படி
நூலைப்படி

காலையிற்படி கடும்பகல் படி
மாலை, இரவு பொருள்படும்படி
நூலைப்படி!

கற்பவைகற்கும் படி
வள்ளுவர் சொன்னபடி
கற்கத்தான் வேண்டும் அப்படிக்
கல்லாதவர் வாழ்வ தெப்படி?
நூலைப்படி!

அறம்படி பொருளைப்படி
அப்படியே இன்பம் படி
இறந்த தமிழ் நான்மறை
பிறந்த தென்று சொல்லும்படி
நூலைப்படி!

அகப்பொருள்படி அதன்படி
புறப்பொருள்படி நல்லபடி
புகப் புகப் படிப்படியாய்ப்
புலமை வரும் என் சொற்படி
நூலைப்படி!

சாதி என்னும் தாழ்ந்தபடி
நமக்கெல்லாம் தள்ளுபடி!
சேதி அப்படி! தெரிந்துபடி
தீமை வந்திடுமே மறுபடி
நூலைப்படி!

பொய்யிலே முக்காற்படி
புரட்டிலே காற்படி
வையகம் ஏமாறும்படி
வைத்துள்ள நூற்களை ஒப்புவதெப்படி
நூலைப்படி!

தொடங்கையில் வருந்தும்படி
இருப்பினும் ஊன்றிப்படி
அடங்கா இன்பம் மறுபடி
ஆகும் என்ற ஆன்றோர் சொற்படி
நூலைப்படி!

(இசை: யாதுகுலகாம்போதி
தாளம்: ஆதி)

கற்க வேண்டிய சங்கத் தமிழ் நூற்களை முறைப்படி, காலையிலும், மாலையிலும், இரவிலும் பொருள்புரிந்து படிக்க வேண்டும். அப்படிப் படித்தால் தான் நல்ல அறிவு உண்டாகும். அதுதான் நாட்டுக்குக் கல்வி தரும் நலமாகும்.

கல்வி நலம்

அறியாத சின்னஞ்சிறு கிளிக்குப் - படிப்
பல்லவே நல்லறிவு விளக்கு - யாதும்
அறியாத
குறியாகப் பள்ளி செல்ல வேண்டும் - நீ
குறையாத செல்வம்பெற வேண்டும் - யாதும்
அறியாத
கற்றவர் விழிகளே விழிகள் - கல்வி
கல்லாதவர் விழிகள் குழிகள்
பெற்றிடுவார் நல்ல வழிகள் - கல்லாப்
பேதைகளுக்குண்டாகும் பழிகள் - யாதும்
அறியாத
மாணிக்க உதடுகள் திறக்கும் - மலர்
வாயில் தமிழ் முத்துக்கள் பிறக்கும்
கோணல் வழக்கமெல்லாம் பறக்கும் - கற்றுக்
கொண்டாலன்றோ வாழ்வு சிறக்கும்
யாதும் அறியாத
நல்லதென்றும் கெட்டதென்றும் தெரியும் -
கற்றால்
நம்குறள் உண்மைப் பொருள் புரியும்
இல்லற விளக்கு நன்றாய் எரியும் - கல்வி
இருந்தால்தான் புகழ் உலகில் விரியும்
- யாதும் அறியாத

இருட்டில் இருப்பதிந்த உலகம் - கால்
இட்ட இடத்திலெல்லாம் கலகம்
கருத்தாய் இருந்தால் தீமை விலகும் -
நல்ல
கல்வியினால் வாழ்க்கை இலகும் - யாதும்
அறியாத சின்னஞ் சிறு கிளிகளான குழந்தைகள் அப்படிக் கல்வி நலத்தைப்பெறப் படிக்கும்போது

படிக்கையிலே தொல்லை இருக்கும் படித்து

வறுமை உலகமென்று நீமயக்க முறவேண்டா
சிறுமை மதம் சாதி - இழிசீழ் பிடித்த எண்ணம். — புரட்சிக் கவிஞர்

முடிக்கையிலே முற்றும் மகிழ்ச்சி முடித்தபின்
தொட்டதெல்லாம் வெற்றி துயரின்றி
வாழலாம்
கட்டாயம் கல்வி பயில்.

என்றும் கூறி படிக்கத்தான் வேண்டியுள்ளார். தொல்லையிருந்தாலும் வள்ளுவர் சொன்ன படி கசடறக் கற்றால், எப்பொருள் யார் யார் வாய்க் கேட்டாலும், எப்பொருள் எத்தன்மை யது ஆனாலும் அதன் உண்மையான பொருளை உணர்வார்கள். அப்போது **அறிவு ஒளி உண்டாகும்.**

கற்க வரும் மாணவர்களை, சுற்றுப்புறச் சூழ்நிலைகள் சில நேரங்களில் படிப்பை விட்டுத் திசைமாறச் செய்தலும் உண்டு என் பது அவர் காலத்திலும் நடந்துள்ளது. அதை யும் சுட்டிக்காட்டி திருத்தியுள்ளார் புரட்சிக்க விஞர்.

பள்ளிக்குக் கட்டடிப்போம், வேறிடத் தில் கண்ணடிப்போம் என்ற கயமைப் பாடல் களைக் கேட்டு அதற்கடிமைப்பட்டு அதன் படி நடக்கத் தொடங்கும் மாணவர்களுக்கு இது ஓர் நல்ல அறிவுரையாகும். அத்தகைய ஒரு மாணவனை மற்றொரு நல்ல மாணவன் திருத்தியதாகவும் ஓர் காட்சியைக் கற்பனை செய்து காட்டியுள்ளார் கவிஞர்.

திருவிழா ஒன்றுக்குப் போன மாணவன் ஒருவன் தன்னைத் திரும்பிப் பார்த்த ஒரு மாணவியுடன் உரையாடினான். அவன் பெயர் மன்னாதன்.

மன்னாதன் பின்னொருநாள் தன் நண் பன் கண்ணப்பனைப் பார்த்துப் பேசுகிறான்

மன்னாதன்:

திருநாளில் என்னைத் திரும்பிப் பார்த்தாள். பின்
ஒரு நாள் உரையாடத்தானும் - உரையாடி
நான் நகைக்க தானும் நகைத்தாள்.
அதனாலே,
வான நிலவும் மனமொத்துப் போனாள் என்
னின்பத்தை வாழ்வில் இணை என்றேன்!
அன்னவள்
துன்பத்தை என் வாழ்வில் தூர்த்துவிட்டாள்
இன்னும்
படித்துப் படிப்படியாய் முன்னேற்றத் திட்டம்
முடித்து நான் வாழுமுறைக்கு - முடிவொன்று
பண்ணுவதென்றும் பகர்ந்திட்டாள், இன்றதனை
எண்ணுவதென்ப திழுக்கென்றாள் -கண்ணிலே
சற்றும் தொடர்பின்றித் தன் கருத்திற்கும் ஒரு
முற்றுப் புள்ளிக் குறியும் முன் வைத்தாள்
உற்றுக்கேள்.

கண்ணப்பா, நானவளைக் கட்டாவிட்டால்
வாழ்வு மண்ணப்பா''

என்றுரைத்தான் மன்னாதன்.

கண்ணப்பன்:

மன்னாதா பார்த்தாள், பகர்ந்திட்டாள்,
பற்காட்டினாள் என்று கூத்தாடு கின்றாய்
குரங்காகக் - கோத்த பவழம் சிரிக்கும்!
பறிக்க முயன்றால்
அவிழ விடுமா அதற்குள் தவழ்சரடு?

பள்ளிக்குச் செல்லுமொரு செந்தமிழ்ப்
பாக்கியத்தை
அள்ளிப் பெண், முற்போக்கில் ஆறாத - கொள்ளி
வைக்க
எண்ணாதே!

எல்லாரும்

அண்ணன்மார் என்றெண்ணும்
பெண்ணாதலாலும் இரும்பு மனம் - பண்பாடு
பெற்றுள்ளதாலும் அவள் பேசினாள்
உன்னிடத்தில்
முற்றிய கல்வி முயற்சியே நற்றவம்
என்று நினைக்கும் இளைய பெருமாட்டி!
கன்றாத் தமிழ்வாழைக் கன்றின்கீழ்க்
கன்றதனை
அன்னை என்று போற்றப்பா என்றேன்
அம்மன்னாதன்
பின் ஓடினான் அறிவு பெற்று -

என்று மாணவர்கள் கற்பதுதான் கடமை என்று கூறி அறிவு பெறச் செய்த நிகழ்வைக் காட்டியுள் ளார். இன்றைய சூழ்நிலையில் எண்ணற்ற கண்

பெருத்த உடல் வீழ்ந்தபின் பெரியநிலை தேடல்
பெருந்தவறே என்பது தான் எம்நாகரிகமே! — புரட்சிக் கவிஞர்

ணப்பன்கள் தேவை! அந்நிலைகளிலிருந்து மாண வச் செல்வங்கள் விலகி குறியாகப் பள்ளி செல்ல வேண்டும்.

பள்ளிக்கூட முதல் மணி! - கேள்
பறந்துபோ என் கண்மணி
துள்ளி ஓடு சுவடிப்பையைத்
தூக்கி ஓடு மகிழ்ச்சியோடு - பள்ளி

அறிவைக் கொடுக்கும் கல்வி - நல்
அழகைக் கொடுக்கும் கல்வி
பொறுமை கொடுக்கும் கல்வி - நீ
போபோ என் அருமைச் செல்வி! (பள்ளி)

பெருமை சேர்க்கும் கல்வி - பெரும்
பொருளைச் சேர்க்கும் கல்வி
தருமம் சேர்க்கும் கல்வி - கற்கத்
தாவிடுவாய் என் புதல்வி! (பள்ளி)

பாடவைக்கும் கல்வி கொண்ட
பசியைப் போக்கும் கல்வி
நாடு காக்கும் கல்வி - நீ
நடநடநட என் புதல்வி! (பள்ளிக்)

நாள்தோறும் போய்ப் போய் - நீ
படிக்க வேண்டும் நன்றாய் - ஒரு
நாள் நின்றாலும் மறப்பாய் - நீ
நடநடமிக விரைவாய்! (பள்ளிக்)

தமிழைக் காக்க வேண்டும் - நீ
தமிழை மீட்க வேண்டும்
தமிழகந்தான் உன் தாய் - அவள்
தளை அறுக்க வேண்டும்! செல்வாய்
(பள்ளிக்)

என்று விலைபோட்டுக் கல்வியை வாங்க நினை யாமல் வேளைதோறும் சென்று முறைப்படி நூலைப்படிக்கும் பழக்கத்தை இனியாவது வளர்க்க வேண்டும். வாழ்க புரட்சிக்கவிஞர் புகழ்!

வள்ளுவம் ஒரு தெள்ளமுது

ஆயிரமாயிரம் காவியங்கள் அன்னைதமிழுக்கு
அணியாகும்
ஆயினும்; குறளினைப்போல அவனியில்
உண்டோவேறே!
எத்திக்கும் புகழ்பரப்பி ஏற்றம் கண்ட தமிழ்த்
தாய்க்கு
தித்திக்கும் சொல்லெடுத்துக் குறளீந்தார்
அமிழ்தாய்!

நலமான வாழ்க்கைக்கு நன்னெறி காட்டும்
சீலமெனும் சிறந்த பண்புதனை ஊட்டும்
உலகப் பொதுமறையாம் உத்தமர்தம்
வாய்மொழியாம்
காலத்தால் அழியாக்குறளை கண்ணெனக்
காப்போமே!

நல்லறமாம் இல்லறமும் நானிலம் போற்றும்
பல்லறமும் நமக்கெனச் சாற்றும்; செல்வமாகியும்
சிந்தனைக்குப் பெருவிருந்தினைச் சிறப்பாகப்
படைத்து
தந்நலமின்றி தரணியில் அருளை
அடைந்திடெனும்

முப்பாலை முழுதுணர்ந்தால் மூதறிஞன்
என்பாராம்
அப்பாலையும் அகிலத்திற்கு அளித்து ஒப்பிலாக்
குறளால்
அறியாமையிருளோட்டிய அண்ணலாம் அறிவுத்
திருவிளக்கு
பெருமைகளைவான் முட்டத் தமிழுக்கு
வழங்கிவிட்ட வள்ளல்.

ஆனந்த வாழ்விற்கு அன்பு ஊன்றுகோல்
கானமாய் ஈரடியில் இயம்பிய இறைவனார்
வானமாய் வள்ளுவம் விளங்கும் புவிக்குத்
தேனமுதாய் இன்பத்தை ஈந்திடட்டும் செவிக்கு!

தமிழ் வாழும் வரை குறள் வாழ்கவே!
தமிழிறைவன் வள்ளுவர் பெயர் வாழ்கவே!!

இரா. சுப்ரமணியன்
12 முதல் தொகுதி

பயணம் போகும்போது

சீப்புக்கண்ணாடி ஆடை சிறுகத்திகூந்தல் எண்ணெய்
சோப்புப் பாட்டரிவிளக்குத் தூக்குக் கூஜா தாள்பென்சில்
தீப்பெட்டி கவிகைச் சால்வை செருப்புக் கோவணம் படுக்கை
காப்பிட்டபெட்டி கைக்கொள்க யாத்திரைக்கே!

— புரட்சிக் கவிஞர்

நற் பள்ளி வாழியவே!

சுற்றியிருக்குமிந் நான்கு சுவர்கட்குள்
சங்கத் தமிழ் படித்தேன்! - அன்பைச்
சொல்லில் விளைத்த முதியவர்பால் இன்பச்
செந்தமிழ்த் தேன் குடித்தேன்!
வற்றியிருக்குங் களர்நிலம்போல், வெறும்
வான வெளியினைப் போல் நின்ற
வன்நெஞ்சை நன்நெஞ்சா யாக்கி அறிவெனும்
வளந்தனை இங்கு பெற்றேன்!
பற்றி யிருக்குங் கல்லாமை யெனுமொரு
பாழிருள் நீங்கப் பெற்றேன்! - மனப்
பான்மையும் மேன்மையும் நல்லுளத் திண்மையும்
பாங்குற விங்கு கற்றேன்!
முற்றி யிருக்குங் கதிரினைப்போல் - மழை
மூண்ட முகிலினைப் போல் - உளம்
மொய்க்கும் பயன் நிறைவாகிப் பொழிந்திட
முந்துறப் பாடுகின் றேன்!

சிட்டுக் குருவியைப் போல உரிமையும்
சிற்றெறும்பின் ஒழுங்கும் - ஒரு
சேரக்கற்றேன்! பெரும் இன்பம் பெற்றேன் இந்தச்
சுற்றுச் சுவர்களுக் குள்!
பட்டுப் புழுதரு நற்பயன்போல், உளப்
பாங்குறும் நூற்பயனும் - இந்தப்
பார்தனி லுள்ளவர் யாவரும் ஒன்றெனும்
பண்பதும் இங்கு கற்றேன்!
எட்டுணை மேலவர் ஆயினும் கற்கிலார்
என்றும் இழிந்த வரே! - நிலை
எத்துணைத் தாழ்ந்தவர் ஆயினும் கற்றவர்
யாண்டும் உயர்ந்த வரே!
நட்டுவைத்த விதை நற்பயன் காண்டலை
நல்லதொரு விளைவை - இந்த
நானிலம் வாழ்த்தும்! அறம்வளர்க்கும் என்றன்
நற் பள்ளி வாழியவே!

— துரைமாணிக்கம்
(பாவலரேறு பெருஞ்சித்திரனார் 1969 மலரில்)

ருஷியாவில் கல்வி

க.அ. பழனிசாமி, V.D. (வழக்கறிஞர் க.அ. பழனிசாமி பி.ஏ.பி.எல்.)

ஜார் மன்னர் ருஷியாவை ஆண்ட போது ருஷியாவில் கல்வி எப்படியிருந்தது? இப்போது அங்குக் கல்வியின் நிலை என்ன? அங்கு எல்லோரும் கல்வி கற்க முடிகிறதா? என்பவைகளையெல்லாம் ரஷியாவைச் சார்ந்த, 'கர்பின்ஸ்கி' என்னும் அறிஞர், அவர் எழுதியுள்ள "The Social And State Structure of the U.S.S.R." என்னும் நூலில் குறிப்பிட்டுள்ளார். அதன் வாசகங்களிற் சில தான் கீழே தரப்பட்டுள்ளன:

'அனன்யிவா என்னும் ஒரு குடியானப் பெண் ஒரு முறை ஜாரின் போலீசாரால் கைது செய்யப்பட்டாள். ஏனெனின் புரட்சி இயக்கத்தைச் சேர்ந்தவளாம்! அவள் தன்னுடைய சாட்சியத்தில் ''நான் என்னுடைய மகன் உயர்நிலைப்பள்ளி (High School) போவதைக் காண்பது போல் கனவு கண்டேன்'' என்று எழுதினாள். மூன்றாவது ஜார் அலெக்சாண்டர் அச்சாட்சியங்களைப் படிக்கும்போது ''இது உண்மையில் ஒரு பயங்கரமாயிருக்கிறது உயர்நிலைப்பள்ளியை அடைய (பள்ளியில் அப்பையனைச் சேர்க்க) இது ஒரு சதி முயற்சி'' என்று குறிப்பிட்டார்.'

மேலே கூறியுள்ளதைப் படித்தால் வியப்பு உண்டாகிறது. ஒரு குடியானப் பையன் படிப்பதாகக் கனவு கண்டமாத்திரத்தில் போலீசார் அவளைச் ''சதிகாரி-புரட்சி இயக்கத்தவள்'' என்று கூறிக் கைது செய்தனர்! ஆனால், அதே ஆசிரியர் இன்று ருஷியாவில் கல்வியின் நிலை பற்றி புள்ளி விவரம் கொடுத்துள்ளார், படியுங்கள்.

''1939ம் ஆண்டு ஜனவரித் திங்கள் 17ம் நாள் எடுக்கப்பட்ட மக்கள் தொகை கணக்கின்படி எங்கள் நாட்டு மக்களில் மொத்தத்தில் இன்னும் கல்வி கற்காதவர்கள் 18.8 சதவீதம் பேர்களிருந்தனர். ஆனால், இன்று அந்த நிலை அநேகமாகக் குறைந்துள்ளது!''

''ஜார் ருஷியாவில் மொத்த மக்கள் தொகையில் ஒவ்வொரு பதினேழு பேருக்கும் ஒருவர் வீதம் பள்ளிக்குச் சென்று வந்தார்கள், ஆனால், இன்று சோவியத் ருஷியாவில் 1938-39 பள்ளி ஆண்டுகளின் படி பள்ளிக்குச் சென்று வந்த வாலிபர், முதியோர் ஆகியோரின் மொத்த எண்ணிக்கை 4,80,00,000 பேர்!''

''ஜாரின் ருஷியாவில் உயர்தரக் கல்வி கற்பிக்கக்கூடிய கல்விச் சாலைகள் 91 உம் அதில் படித்தவர்களின் தொகை 1,12,000 பேராகவும் இருந்தது. ஆனால், 1946-47 பள்ளி ஆண்டின்படி உயர்தரக்கல்வி கற்பிக்கக் கூடிய கல்விச் சாலைகள் 800ம் அதில் கல்வி கற்று வந்தவர்களின் தொகை 6,70,000 பேர்களுமாயிருந்தது! இம்மாணவர் தொகையில் மேற்கு ஐரோப்பாவிலிருந்து வந்து படித்தவர்களும் சேர்க்கப்பட்டுள்ளனர்!''

படித்தீர்களா, புள்ளி விவரத்தை? ருஷியா ஜார் ஆட்சியில் இருந்தபோது அங்கிருந்த கல்வி நிலையையும் இப்போதுள்ள கல்வி நிலையையும் எண்ணிப் பார்க்கும்போது மலைக்கும் மடுவுக்கும் உள்ள வேற்றுமை போலத்தானிருக்கிறது! நம் நாடு விடுதலையடைந்தும் நாம் இன்னும் கல்வியில் அதிகமாக முன்னேறவில்லை. ருஷியாவைப் போல் கல்வித் துறையில் நம் நாடு முன்னேறுவது எப்போது?

(1951 மலரில்)

அறம் பொருள் இன்பம் எய்துதல் வாழ்க்கை
அடிமை மதம் சாதி ஏற்பதுன் தாழ்க்கை. — புரட்சிக் கவிஞர்

ஆசிரிய ரத்தினங்கள்

திரு.பி.மாணிக்கம் பிள்ளை (தலைமை ஆசிரியர்: நகராண்மை உயர்நிலைப் பள்ளி, சேலம்)

இக்கட்டுரை 28.7.1957 இல் ஆனந்த விகடனில் வெளிவந்தது.

''1950ல் கல்வி சம்பந்தமான பல விஷயங்களை நேரிடையாகக் கற்று வர, நான் இங்கிலாந்துக்குச் சென்றிருந்தேன். அப்பொழுது ஸ்விட்சர்லாந்துக்கும் செல்லும் வாய்ப்புக் கிடைத்தது. அங்கு பள்ளிக்கூட ஆசிரியர்களின் வருவாய், 'ரெவின்யூ' இலாகாவில் பணியாற்றுபவர்களின் ஊதியத்தைவிட அதிகம் என்பதை அறிந்து பெரிதும் வியப்படைந்தேன். ஆனால் நம் நாட்டிலோ! ஆலைத் தொழிலாளிக்குக் கிடைக்கும் ஊதியத்தைவிடக் குறைவாகவே சம்பாதிக்கிறார் பள்ளி ஆசிரியர்.

''வருவாயிலிருந்து தான் ஒருவரின் தரத்தைக் கணக்கிடுவதா என்று கேட்கலாம்! ஆனால், தேவைக்குப் பிறகுதான், தரத்தைப் பற்றிய சிந்தனையே மனிதனுக்கு எழும். நம் நாட்டில் பள்ளிக்கூட ஆசிரியர்கள் 'டியூஷன்' சொல்லிக்கொடுத்து, அதனால் ஓரளவு நேர்மையையும் இழக்கிறார்கள் என்றால், அதற்கு முக்கிய காரணம், அவர்களது குறைந்த வருவாய்தான். எனவே, நாட்டை உருவாக்கும் ஆசிரியர்களின் நலனை முதலில் கவனித்தால்தான் நாடு நலம் பெற முடியும். நம் நாட்டிலே அது இன்னும் கவனிக்கப்படவில்லை. நான் மாத்திரம் இப்படிச் சொல்லவில்லை. நமது கல்வியிலாகா அதிகாரி திருவாளர் சுந்தரவடிவேலு அவர்களே ஒருமுறை சொன்னார்.

''நான் உதவி டைரக்டராக இருந்தபோது மேல்நாடு சென்றிருந்தேன். அங்கு எனக்குச் சரியான வரவேற்பு இல்லை. ஆனால், நானே ஒரு சாதாரண ஆசிரியனாக இருந்து அந்த முறையில் அங்கு சென்றிருந்தால் நிறைய மதிப்பை அடைந்திருப்பேன்'' என்றார் அவர். இதிலிருந்து பிற நாடுகளில் ஆசிரியர்களுக்கு அளிக்கப்படும் கௌரவத்தை நாம் ஒருவாறு ஊகிக்கலாம். இதை உணர்ந்து என்று நாம் அதன்படி செயலாற்றுகிறோமோ அன்றுதான் நம் நாடு உயரும்'' என்று சொல்லிக்கொண்டே போனார், சேலம் நகராண்மைக் கழக உயர்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர் திரு.பி.மாணிக்கம் பிள்ளை அவர்கள்.

மேற்படி உயர்நிலைப் பள்ளியை ஒரு லட்சிய ஸ்தாபனம் என்றே சொல்லலாம். ஏனென்றால், வறுமையில் வாடுபவர்களும், கல்வியறிவில் கூடச் சற்றுத் திறமைக் குறைவானவர்களும் தான் அங்கு நிறைய வாசிக்கிறார்கள்.

''எங்கள் பள்ளியில் 1200 மாணவர்கள் படிக்கிறார்கள். அவர்களில் சற்றேறத்தாழ எழுபது சதவிகிதத்தினர் உபகாரச் சம்பளம் பெற்றுப் படிக்கிறார்கள் என்றால், நீங்களே எங்கள் மாணவர்களின் செல்வ நிலையை உணர்ந்து கொள்ளலாமே'' என்றார் திரு. மாணிக்கம் பிள்ளை.

இந்திய விடுதலைப் போர் நடந்த ஆண்டில்தான், இந்தப் பள்ளிக்கூடமும் ஆரம்பிக்கப்பட்டது. இன்று சுதந்திர நூற்றாண்டு விழாவுடன் அப்பள்ளியும் தனது நூற்றாண்டு விழாவைக் கொண்டாடுகிறது. முதலில் இது ஒரு ஜில்லா பள்ளிக்கூடமாக ஆரம்பிக்கப்பட்டது. சேலம் ஜில்லாவிலேயே மிகப் பழமையானதும் முதல் முதலில் ஆரம்பிக்கப்பட்டதுமான பள்ளிக்கூடம் இதுதான்.

கைக்க நெஞ்சு செய் பா வத்திற்குக்
கழுவாய் உண்டெனல் கயமை — புரட்சிக் கவிஞர்

இதே சேலம் ஜில்லாவிலேயே பிறந்தவர் தான் திரு.மாணிக்கம் பிள்ளை. பட்டம் பெற்ற தினத்திலிருந்து இதே பள்ளிக்கூடத் திற்குத் தான், தன் முழு உழைப்பையும் அளித்து வருகிறார். சென்ற பத்து வருஷங் களாக அதன் தலைமை ஆசிரியராகவும் சேவை செய்து வருகிறார்.

''உங்கள் வாழ்க்கையில் நடைபெற்ற ஒரு மறக்க முடியாத நிகழ்ச்சியைச் சொல் லுங்களேன்'' என்று கேட்டேன், மிக ரசமான சம்பவம் ஒன்றைச் சொன்னார் அவர்.

'1936-ல் கன்னியாகுமரிக்கு ஒரு மாண வர் குழாத்தை அழைத்துச் சென்றிருந்தேன். அதில் ஒரு மாணவன் கொஞ்சம் துடுக்குத் தனமாக இருந்தான். என் பொறுமையை அது சோதித்தது. அவன் கன்னத்தில் ஓங்கி ஒரு அறை வைத்து விட்டேன். அதன் பிறகு அவன் ஒழுக்கத்துடன் நடந்து கொண்டான். ஆனால், அதே மாணவன், பின்னால் எங்கள் பள்ளிக்கூடத்தை நடத்தும் முனிஸிபாலிடிக் குச் சேர்மனாக வந்தார். இந்தச் சம்பவம்தான் இன்றும் என் மனத்தில் இருந்து கொண்டிருக் கிறது'' என்றார்.

''கூட்டுக் கல்வி முறையே நம் நாட்டுக் குப் பொருந்தாது'' என்கிறார் இவர்.

''நான் தலைமை ஆசிரியர் ஆனவுடன் எங்கள் பள்ளியிலிருந்த 100 மாணவிகளுக் கும் பெண்களுக்கென்று பிரத்யேகமாக உள்ள பள்ளிக்கூடத்தில் இடம் வாங்கிக் கொடுத்தேன். பிறகு எங்கள் பள்ளிக்கூடத் தில் பெண்களைச் சேர்க்கும் வழக்கத்தையும் எடுத்தேன். பள்ளிகளில் ஒழுக்கம் குறைவ தற்கு முக்கிய காரணம் கூட்டுக்கல்வி முறை தான் என்பது எனது திடமான அபிப்பிரா யம்' என்கிறார் அவர்.

பள்ளிக்கூடங்களில் மத்தியான உணவு அளிக்கும் திட்டத்தை (Midday Meals Scheme) இவர் வரவேற்கிறார். அதோடு அதை ஒரு கட்டாய விஷயமாகவும் ஆக்க வேண் டும் என்கிறார். காரணம், கேட்டபோது அவர் சொன்னார் 'நம் நாட்டிலே உள்ள ஜாதி வேற்றுமையைப் போக்க அது மிகவும் உதவி செய்யும். எல்லா மாணவர்களும் ஒன்றாக அமர்ந்து சாப்பிடுவதனால், உயர்வு தாழ்வு என்ற மனப்பான்மை அகலும். இங்கிலாந்தில் இது கட்டாய அமுலில் இருக்கிறது. அங்கு ஜாதி வேற்றுமை இல்லாவிட்டாலும், ஏழை பணக்காரன் என்ற வித்தியாசத்தைப் போக் கவே அவர்கள் இந்த முறையைக் கட்டாய மாக அமுலில் வைத்திருக்கிறார்கள். எலிச பெத் ராணியின் குமாரனும், வருங்கால மன்னனுமான சார்லஸ் கூட, இன்னும் எல் லோருடனும் ஒன்றாக அமர்ந்துதான் உணவ ருந்துகிறார்' என்றால், அதன் உயர்வை நீங்களே ஊகித்துக் கொள்ளலாமே?' என் றார் அவர்.

(1961 மலரில்)

தமிழ் வளர்ச்சி

எளியநடை யில்தமிழில்நூல் எழுதிடவும் வேண்டும்
இலக்கணநூல் புதிதாக இயற்றுதலும் வேண்டும்
வெளியுலகில், சிந்தனையில் புதிது புதிதாக
விளைந்துள்ள எவற்றினுக்கும் பெயர்களெலாங் கண்டு
தெளிவுறுத்தும் படங்களொடு சுவடியெலாம் செய்து
செந்தமிழைச் செழுந்தமிழாய்ச் செய்வதுவும் வேண்டும்
எளிமையினால் ஒருதமிழன் படிப்பில்லை யென்றால்
இங்குள்ள எல்லோரும் நாணிடவும் வேண்டும்.

உலகியலின் அடங்கலுக்கும் துறைதோறும் நூற்கள்
ஒருத்தர்தயை இல்லாமல் ஊரறியும் தமிழில்
சலசலென எவ்விடத்தும் பாய்ச்சிட வேண்டும்
தமிழொளியை மதங்களிலே சாய்க்காமை வேண்டும்
இலவ்நூற் கழகங்கள் எவ்விடத்தும் வேண்டும்
எங்கள்தமிழ் உயர்வென்று நாம்சொல்லிச் சொல்லித்
தலைமுறைகள் பலகழித்தோம்; குறைகளைந்தோமில்லை
தகத்தகாயத் தமிழந்த தாபிப்போம் வாரீர்!

— புரட்சிக் கவிஞர்

இன்றுதான் உனைப்பெற்ற பயன் பெற்றேன்
நன்று கற்றவன் உன்மகள் - எனக்கேட்ட இன்றுதான் — புரட்சிக் கவிஞர்

பண்புடைக் கல்வியே புகழாம்!

துரைமாணிக்கம்

எண்ணறக் கற்பார்;
எழுத்தறப் படிப்பார்
இழிசெயல் பற்பல செய்வார்!

விண்ணியல் அறிவார்;
விரிகலை உணர்வார்!
வீணுரை பற்பல உரைப்பார்!

மண்ணியல் ஆய்வார்!
மருத்துவம் தெளிவார்
மக்களுக் கிடர்பல இழைப்பார்!

உண்ணுவர்! உடுப்பார்!
உறங்குவர்! இவரால்
ஒருபயன் இலையெனக் காண்பீர்!

கற்பவை கற்றல்
கல்வியென் றறிக!
கற்றவை வழிபட முயல்க!

அற்பநூல் உரைகள்
ஆயிரம் கற்றும்
ஆவதொன் றிலையென உணர்க!

பொற்பெனப் படுவது,
பிழைபடா ஒழுங்கே!
புகழ்தரு வதுமஃ தென்க!

நிற்பவை எல்லாம்
நிலையில! புகழே
நிலைபெறும் ஒன்றெனத் தெளிக!

ஒழுங்கிலான் கல்வி,
உப்பிலாப் பண்டம்!
ஒப்பிலா தாயினும் குப்பை!

ஒழுங்கிலான் நல்லுடல்
உயிரிலாப் பிண்டம்!
உறுபயன் தருவது மில்லை!

ஒழுங்கிலான் கல்வி
உரமிலாக் கழனி!
ஊர்பெறும் விளைவதில் தோன்றா!

ஒழுங்கிலான் கல்வி,
ஒழுகு கள் வாயான்
உளறலைப் போல் பயன் உணர்த்தா!

நெஞ்சினில் நேர்மை;
நிகழ்ச்சியில் நேர்மை
நெடிதுயிர் வாழ்க்கையில் நேர்மை;

அஞ்சுவ தஞ்சல்;
அடங்குவ தடங்கல்;
அடுத்தவர் கெடுதலைத் தடுத்தல்;

நஞ்செனத் தீமையை
நடுங்குதல்! எனவாம்
நல்வழி, ஒழுங்கென அறிக!

விஞ்சிடும் புகழால்
வாழ்பவ ரெல்லாம்
வேண்டாத் தீமை, கொன் றோரே!

விற்பன வெல்லாம்
நூல்களென் றாகா;
விளைவினில் பதரில தாமோ?

கற்பன வெல்லாம்
கல்வியென் றாகா;
காண்பவை புரையில தாமோ?

நிற்பன வெல்லாம்
புகழென் றாகா;
நிறத்தால் எட்டி, இன் கனியோ?

பற்பல புதுமை
பாரிலுண் டெனினும்
பண்புடைக் கல்வியே புகழாம்!

(கல்வி ஒழுங்கு என்ற தலைப்பில் பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்கள் 1959 மலரில் படைத்தது)

விடியலை நோக்கிப் பாரதம்

உலகமே விண்ணிலும், பல கோள்களிலும் வீடமைத்தும், அறிவியல் கண்டுபிடிப்புகளால் ஆயிரம் ஆயிரம் நன்மைகள் அனுபவித்தும் வரும் இந்நேரத்தில் மது அருந்திவிட்டு மண்ணிலே விழுந்து புரளும் மக்களின் நிலை பரிதாபத்திற்குரியதாகும். சுதந்திரமடைந்து 47 ஆண்டுகள் அடைந்தும் நாடு முன்னேற்றமடையாமல் உள்ளது. கல்வியில்லாத வீடு இருண்ட வீடு, கல்வி கண் போன்றது போன்ற மொழிகள் நடைமுறையில் இருந்தும் பெரும்பான்மையான மக்கள் அதனை மதியாத நிலை உள்ளது. கல்விக்காகப் பல சான்றோர்கள் அரும்பாடுபட்டுள்ளனர். இருந்த போதிலும் கல்லாமையை முற்றிலுமாக ஒழிக்க முடியவில்லை.

உலக மக்களிடையே அமைதி, சகோதரத்துவம், சுமூகமான உறவு ஏற்பட வேண்டுமானால் அது நிச்சயமாக கல்வி ஒன்றினால் தான் முடியும். ஆனால், அதற்கு மாறாக, கல்வி அறிவு, சிந்தனைகள் இல்லாமையால் மனித நேயம் மறந்து சாதிகள், மதங்கள் பெயரால் மிருகத்தையும் விடக் கீழாகச் சண்டை போட்டுக் கொள்வது மனிதத் தன்மைக்கும், நாகரீகத்திற்கும் ஏற்பட்ட மிகப் பெரிய இழிவாகும். பாரதத்தில் இன்றும் கூட கல்விநிலை மோசமாகவே உள்ளது.

''கடவுளுக்குச் செலுத்தும் காணிக்கையை குழந்தையின் கல்விக்குச் செலுத்துங்கள்'' எனும் டாக்டர் அம்பேத்கரின் பொன்மொழியைப் பின்பற்றி, ஏழைகளின் கல்விக்கு உதவி புரிந்து அதன் மூலம் நாட்டின் முன்னேற்றத்திற்கு வழி வகுக்க வேண்டும். கல்வி கற்று விஞ்ஞானம், மருத்துவம், போன்ற துறைகளிலும் முன்னேற்றமடைந்து பாரதிகண்ட கனவினை நினைவாக்குவதோடு நம் வாழ்க்கையின் தரத்தையும் உயர்த்திக் கொள்ள வேண்டும்.

கிராமப்புறங்களில் இன்றும் கல்வியறிவின்மையால், மக்களின் வாழ்க்கைத் தரம் உயராமலும், ஏற்றத் தாழ்வுகள் கொண்டு ஒருவரை ஒருவர் தாக்கிக் கொண்டும் வாழ்கின்றனர். அடிமை வாழ்க்கை இன்னும் நிலவி வருகிறது.

அறியாமை நிறைந்து காணப்படுவதாலும், மூடப்பழக்க வழக்கங்களாலும் குழந்தைகள், பெண்கள் நரபலிக் கொடுமைகள் நிலவி நாட்டின் நிலைமை மாறாமலும் உள்ளது.

கிராமங்களில் பள்ளிகள் அமைத்தும், அவைகள் பயனில்லாமல் சாணம் தட்டுவதற்கும், மாட்டுக் கொட்டகைகளாகவும் மட்டுமே பயன்பட்டு வருகின்றன. பெண்களுக்குச் சமூகத்தில் சம உரிமை மறுக்கப்படுவதோடு, ''அடுப்பூதும் பெண்களுக்குப் படிப்பெதற்கு'' என்ற நிலை கொண்டு அவர்களுக்கு கல்வி மறுக்கப்படுகின்றது. வறுமை நிலை, செல்வந்தர்களிடம் உழைப்பின்மை, இளமைத் திருமணங்கள், கல்வியறிவின்மை, மூடப் பழக்க வழக்கங்கள் போன்றவை பாரதத்தின் முன்னேற்றத்திற்கு உள்ள முட்டுக்கட்டைகளாகும்.

கல்வி கற்பது வேலை தேடுவதற்கும், பொருளை ஈட்டுவதற்கும் மட்டுமன்று, சிந்தனையைப் பெருக்கி, அறிவை வளர்த்து நம் வாழ்க்கையை உயர்த்துவதுமாகும்.

படிக்காதவர்களிடம் மட்டுமல்லாமல் படித்தவர்களிடமும் உள்ள போதைப் பழக்க வழக்கங்கள் போன்ற தாழ்ந்த பழக்க வழக்கங்களாலும், ஒழுக்கமற்ற செயல்களினாலும், சட்டவிரோதமான செயல்களினாலும் பாரதத்தின் முன்னேற்றம் தடைபடுகிறது.

சில பொறுப்பற்ற பெற்றோர்களாலும்,

தமிழ்மொழியைத் தாய் என்னும் தமிழர்வாழ்கவே
தமிழ் மொழிக்குத் தாழ்வுரைக்கும் தக்கை வீழ்கவே! — புரட்சிக் கவிஞர்

வறுமை நிலையில் உள்ள பெற்றோர்களா லும், சில பணத்தாசை பிடித்த முதலாளிகளி டம் குழந்தைகள் பள்ளிக்கு அனுப்பப்படா மல் வேலைக்கு அமர்த்தப்படுகின்றனர். இத னால், அவர்களின் எதிர்கால வாழ்க்கை சீர் குலைவதோடு அல்லாமல் நாட்டின் முன் னேற்றமும் சீர்குலைகிறது. பள்ளிக்குச் செல்ல விருப்பமில்லாமல் இருக்கும் சில குழந்தைகளைப் பெற்றோர்கள் பள்ளிக்குச் செல்ல விருப்பமூட்டி ஊக்குவிக்க வேண்டும்.

கல்விநிலை இல்லாததால் சமுதாயத்தின் அடிமட்டத்தில் வாழ்பவர் அடிமட்டத்திலே வாழ்ந்து பொருளாதாரத்தில் முன்னேற்ற மடையாமல் இருக்கிறார்கள். பொழுது போக் குச் சாதனங்களை குறைத்தும், நாட்டில் பலப்பல புதிய தொழிற்சாலைகளை அமைத் தும் ஆயிரக்கணக்கான மக்களுக்கு வேலை அளித்து மக்களின் நிலையை உயர்த்துவ தோடு நாட்டின் நிலையையும் உயர்த்தி முன்னேற்றமடையச் செய்யலாம்.

சில தரம் கெட்ட திரைப்படங்களினா லும், சாதிகள் பெயர் கொண்டு எடுக்கப்ப டும் திரைப்படங்களாலும் மக்களிடையே கலவரம் ஏற்பட்டு ஒற்றுமை சீர்குலைகிறது.

இருட்டிலேயே உள்ள இந்த இனிய பாரதம் வெளிச்சம் தேடி விடியலை நோக்கிப் பயணம் செய்யும் இந்நேரத்தில் ''கட்டாயக் கல்வி''க்கு நியாயமான, கடுமையான சட் டங்கள் இயற்றினால் விரைவில் முன்னேற் றம் அடைந்துவிடும். விடியலை நோக்கிப் பயணம் செய்வோம். விரைந்தே இன்னும் பல சாதனை புரிவோம்.

இரா. சஞ்சய் காந்தி
பன்னிரண்டாம் வகுப்பு முதல் தொகுதி

இலக்கிய மாட்சி

(அ. பழநிச்சாமி, பி.ஏ.,பி.டி.)

(முன்னாள் மாணவர், முன்னாள் ஆசிரியர்)

1. ஓர் நாட்டின் நாகரிகம் இன்னதென்று
உலகத்தோர்க் கறிவிப்ப திலக்கியம்தான்
சீர்கெட்டு ஓர்மனிதன் திகைக்கும்காலை
செவ்வையாய் அதையகற்றி இன்பம் நல்கும்

ஆன்றோர்கள் ஒருவரோ டளவளாவி
அகமகிழ்ச்சி கொள்ளுதற் குதவி செய்யும்
ஊன்றுகோல் என்பதற்கோர் ஐயமில்லை
உண்மையிது சங்கநூல் இதற்குச்சான்றாம்.

2. இலக்கியமே ஓர்நாட்டின் கண்களாகும்
இஃதில்லா நாடின்பம் பெறுவதில்லை
சிலநாளாய் இலக்கியத்தைப்
புறக்கணித்தோம்
செப்பவொண்ணாத் துயரத்திற்
காளானோம்நாம்

பழந்தமிழும் தமிழ்நாடும் பெற்றமேன்மை
பாதிக்கு மேல்தற்போ தில்லை உண்மை
இளந்தமிழா இன்னுமா உறங்குகின்றாய்!
இப்பொழுதே விழிப்பெய்தி
உயர்வைத்தேடு.

3. மாசிலாத் தமிழ்க்கவிகள் நூல்கள் நல்கி
மற்றையோர் வாழ்வதற்கே வாழ்ந்திருந்த
தேசிக விநாயகமும் திரு.வி.க.வும்
தெய்வீக மெய்தியதால் தமிழணங்கு

தவப்புதல்வர் பிரிவுக்கு வருந்துகின்றாள்,
தமிழ்நாட்டு மக்களெல்லாம் கதறுகின்றார்.
எவர்இனிமேல் அவர்கள்பணி ஏற்கவல்லார்!
என்றென்றும் அவர்கள் புகழ்
அழியாதாமால்!

(1954-55 மலரில்)

வீறுடைய செம்மொழி தமிழ்மொழி - உலகம்
வேரூன்றிய நாள்முதல் உயிர்மொழி — புரட்சிக் கவிஞர்

எனது பள்ளி நினைவுகள்

ஆர். இராமசாமி, எம்.ஏ.பி.டி.,
(பழைய மாணவர் & ஆசிரியர்)

''கண்ணுடைய ரென்பவர் கற்றோர் முகத்திரண்டு புண்ணுடையர் கல்லா தவர்'' - என்ற வள்ளுவர் வாக்குக்கேற்றவாறு மக்களுக்கு கல்வி மிக மிக இன்றியமையா தது என்ற நோக்கில் பிரிட்டிஷ் ஆட்சி நடைபெற்ற பொழுது கல்வி அறிவை நம் இந்திய மக்களுக்குப் புகட்ட கடமை உணர்வு கொண்டு சுமார் 150 ஆண்டுகளுக்கு முன் தோற்றுவிக்கப்பட்டது. இப்பள்ளி மிகப் பழமையான பள்ளி சேலம் கோட்டை நகரவை மேல்நிலைப் பள்ளியாகும். இப்பள்ளி தோன்றியதற்குப் பிறகுதான் சேலத்தில் மற்ற - அனைத்து பள்ளிகளும் தோன்றின.

பல அறிஞர்களை உருவாக்கிய பழமையான இப்பள்ளியில் குட்டி துரையவர்கள் தலைமை ஆசிரியராகப் பணியாற்றினார். இவருடைய புகைப்படம் பள்ளியில் காட்சியளிக்கிறது. சேலம் நகரவை உயர்நிலைப் பள்ளி முன்னேற்றமடைந்து கல்லூரியாகத் திகழ்ந்தது. இந்தியாவிலேயே நகரவை கல்லூரி நடத்திய பெருமை சேலம் நகரவையைச் சாரும்.

சேலம் நகரவை கல்லூரியின் முதல்வர் திரு. இராமசாமி கவுண்டர்; நல்ல நிர்வாகியாக, கல்லூரிக்குப் பெருமையை உண்டாக்கியவர். இப்பள்ளியில் பணியாற்றிய பெரும்பான்மையான ஆசிரியர்கள் நகரவைக் கல்லூரியில் சிறப்பான பணியாற்றினார்கள். இவர்களில் தமிழ் ஆராய்ச்சித் தலைவர் புலவர் பாவாணர் குறிப்பிடத்தக்கவர். பொருளாதார நெருக்கடியால் இக்கல்லூரியை சேலம் நகரவை தமிழக அரசுக்கு ஒப்படைத்தது.

கல்வி முன்னேற்றத்திற்காகப் பாடுபட்ட நகரவை தலைவர்களில் திரு.என். ஜெகந்நாதன், திரு.ஆர். அர்ஜுனன் குறிப்பிடத்தக்கவர்கள்; பல நடுநிலைப் பள்ளிகளை உருவாக்கினார்கள். அவைகள் உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளாக விளங்குகின்றன.

இப்பழமையான மேல்நிலைப் பள்ளியில் இரண்டாம் உலகப் போர் கடுமையாக நடந்துகொண்டிருக்கும்பொழுதுதான் நான் 1939 முதல் 1945 வரை முதலாம் படிவம் முதல் ஆறாம் படிவம் வரைப் பயின்று தேர்ச்சி பெற்றேன். என்னுடன் பயின்ற மாணவர்கள் சேலத்தைச் சுற்றியுள்ள ஏறக்குறைய 15 கிலோ மீட்டர் தொலைவிலிருந்து வந்து படித்தார்கள். டாக்டர் கே.என்.ராவ், F.R.C.S. மற்றும் வழக்கறிஞர்கள், டாக்டர்கள், தொழில் அதிபர்கள் இப்பள்ளியில் பயின்றார்கள். இரண்டாம் போர் நடந்தபொழுது பர்மா, சிங்கப்பூர் அந்தமான் பகுதிகளிலிருந்து வந்த தமிழக அகதிகள் என்னுடன் கல்வி பயின்றார்கள்.

1942-ல் நடந்த ஆகஸ்ட் போராட்டமான ''வெள்ளையனே வெளியேறு'' (Quit India) போராட்டத்தில் இப்பள்ளி மாணவர் கலந்து கொண்டது மறக்க முடியாத ஒன்று. அப்போது நடைபெற்ற ஊர்வலத்தில் வெள்ளைக்காரப் போலீஸார் தடியடி நடத்தியதால் ஊர்வலம் சின்னாபின்னமானது. மாணவர்கள் மிகவும் தேசிய உணர்வு கொண்டவர்களாக இருந்தார்கள்.

ஆசிரியப்பணி சிறந்த பணி என்று ஆசிரியர் பயிற்சி பெற்று இப்பள்ளியில் ஆசிரியராகப் பணியாற்றினேன். திரு. மாணிக்கம் பிள்ளை, திரு.நாராயணசாமிப் பிள்ளை, திரு.தீனதயாளன், திரு.தேவராசன் ஆகிய தலைமை ஆசிரியர்களிடம் பணியாற்றினேன்; இவர்கள் மாணவர்களுக்குக் கல்வியில் ஊக்கம் ஊட்ட பள்ளி நல்ல தேர்ச்சி காட்டியது; சிறந்த பள்ளி என்ற பெருமிதம் கொண்டது.

தமிழுக்கும் அமுதென்று பேர்! - அந்தத்
தமிழ் இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர்! — புரட்சிக் கவிஞர்

ஏ.சி.சி. மாணவர்படை அதிகாரியாகப் பணியாற்றியபொழுது சேலம் நகரவை உயர் நிலைப் பள்ளியில் ஆடிட்டோரியம் கட்ட ஏ.சி.சி., என்.சி.சி. மாணவர் படை ரூ.20,000 உழைப்பைக் கொடுத்தது. அது இப்பொழுது நகரவையின் தொங்கும் தோட்டமாக காட்சி அளிக்கிறது.

இப்பள்ளியில் படித்து 20 ஆண்டுகளாக இப்பள்ளியிலேயே பணியாற்றி நடுநிலைப் பள்ளிகளுக்குத் தலைமை ஆசிரியராகப் பணியாற்றி ஓய்வு பெற்றுள்ளேன். எனது வாழ்நாளில் பெரும்பகுதி இப்பள்ளிச் சூழ்நிலையில் வாழ்ந்து பல ஆயிரக்கணக்கான மாணவர்களுக்குக் கல்வியறிவு கொடுத்தேன் என்று பெருமையுடன் கூறிக்கொள்கிறேன். இப்பள்ளியின் முன்னேற்றத்தில் இன்றும் அக்கறை கொண்டவன்.

தற்பொழுது கோட்டை நகரவை ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் தலைமை ஆசிரியராகப் பணியாற்றும் புலவர் திரு.அண்ணாமலை அவர்களுடன் நானும் பணியாற்றினேன் என்று பெருமையுடன் கூற ஆசைப்படுகிறேன்.

புலவர் திரு.அண்ணாமலை தலைமை ஆசிரியராகப் பொறுப்பேற்ற பிறகு பள்ளியில் பல்வேறு ஒழுக்கக் கட்டுப்பாட்டை நிலை நிறுத்தியவர். மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் நல்ல ஊக்கமும் ஆக்கமும் கொடுத்து, கண்ணும் கருத்துமாக இருந்து பள்ளிக்கு நல்ல முன்னேற்றம் தேடித் தந்துள்ளார்.

இவருடைய நிர்வாகத்தில் இப்பள்ளிக்கு வேண்டிய அனைத்து முன்னேற்றங்களையும் செய்து தந்துள்ளார்; சிந்தித்து செயல்பட்டுள்ளார்; விஞ்ஞான ஆய்வுக் கூடங்கள், கட்டடங்கள், நூல் நிலையங்கள், தொழில் கருவிகள் போன்றவைகளை - பள்ளிச்சீரமைப்பில் பல ஆயிரக்கணக்கான ரூபாய்கள் மதிப்புள்ள பள்ளிக்குத் தேவையான பொருள்களைப் பெற்று பள்ளியின் முன்னேற்றத்திற்காக அரும்பாடு பட்டவர். இவரது அரும்பணி, மற்ற தலைமை ஆசிரியர்களைவிட மிகவும் பாராட்டுதற்குரியவர் என்பது தெள்ளத் தெளிவாகக் காட்சியளிக்கிறது.

ஏழை எளிய மாணவர்களுக்கு அறிவுரைகளும் ஆறுதலும் ஊக்கமும் கொடுத்து மாணவர்கள் முன்னேற்றத்திற்கு அரிய தொண்டாற்றியவர். பள்ளியை நல்ல நிர்வாகத்துடன் நடத்தியவர் ஓய்வு பெறுகிறார் என்றால், பள்ளிக்குப் பெருத்த இழப்பாகும்.

தலைமை ஆசிரியர் புலவர் திரு.அண்ணாமலை, அவர்கள் சமுதாய உணர்வு கொண்டவர். மக்கள் நல்வாழ்வுக்காகவும், சுயமரியாதைக் கொள்கைக்காகவும் அரும்பாடுபட்டவர். பகுத்தறிவுவாதி. பெருமையையும் புகழையும் நாடாதவர். தந்தை பெரியாரின் சீடர். பகுத்தறிவு, சுயமரியாதைக் கொள்கையை நன்முறையில் கடைபிடிப்பவர்; காட்சிக்கு எளிமையானவர்.

''எப்பொருள் யார்யார் வாய்க் கேட்பினும்
அப்பொருள் மெய்ப்பொருள் காண்ப தறிவு''

என்ற குறளை தந்தை பெரியார் அடிக்கடி வலியுறுத்துவதைத் புலவர் திரு.அண்ணாமலை அவர்கள் அடிக்கடி நினைவுறுத்துவார்.

மாணவர்களிடமும் தன்னை நெருங்கிய நண்பர்களிடமும் பகுத்தறிவுப் பண்பாட்டை வளர்க்கக் கூடிய எனதருமை நண்பரும் தலைமை ஆசிரியருமான புலவர் திரு.அண்ணாமலை அவர்களின் செயலாற்றலைப் பெருமையுடன் கூறப் பழைய மாணவனாகிய நான் மிகவும் கடமைப்பட்டவன் என்று கூறி எனக்கு இந்த நினைவுக் கட்டுரை எழுத வாய்ப்பளித்தமைக்கு நன்றியையும், வணக்கத்தையும் கூறி விடைபெறுகிறேன்.

நன்றி, வணக்கம்.

தமிழ் எங்கள் இளமைக்குப்பால், இன்பத்
தமிழ்நல்ல புகழ்மிக்க புலவர்க்கு வேல்! — புரட்சிக் கவிஞர்

புதுக்குறள்

அதிகாரம்: விளையாட்டு

1. விளையாட்டுள் விளையாட்டு கிரிக்கெட்; அவ்விளையாட்டு
விளையாட்டு ளெல்லாந் தலை.

2. அடித்தலும் அடித்தவுடன் ஓடுதலும் இவ்விரண்டும்
கண்ணென்ப அடிப்ப வர்க்கு.

3. அடிக்கத்தக் கதல்லவை அடிக்கக் கெடும்; அடிக்கத்தக்க
அடிக்காமை யானும் கெடும்.

4. செல்பந்தைத் துரத்தி வருபந்தைப் பார்த்திருப்பான்
நல்விருந்து பார்ப்பவர்க்குத் தான்.

5. ஆடுதலால் ஆகுவதுண்டோ வரும்பந்தை ஆட்டஎல்லைக்
கப்பால் ஓட்டாக் கடை.

6. தன்னைத்தான் காக்கின் முக்கோல்கா; காவாக்கால்
தன்னையே வெளியேற்றும் பந்து.

7. முறையறிந் தாடாரை ஒறுத்தல் அவர்நாண
அதிலிருந்து நீக்கி விடல்.

8. அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை
அடிப்பாரைத் தாங்கும் பந்து.

9. தொலைக்காட்சி காண்பதனா லாயபயன் என்கொல்
கிரிக்கெட்டைக் காணாக் கடை.

10. கேட்பினும் கேளாத் தகையவே வர்ணனையால்
தோட்கப் படாத செவி.

S. ஞானசேகரன்
9-ஆம் வகுப்பு 'உ' பிரிவு

வாழவதிலும் நலம்சூழ்வதிலும் புவி மக்களெல்லாம் ஒப்புடையார்
ஏழ்மையில் மக்களைத் தள்ளுவதோ?
இதை இன்பமெனச் சிலர் கொள்ளுவதோ?

— பாரதிதாசன்

உழைப்பும் ஓய்வும்

பணியிடை மறைந்த முன்னாள் தலைமை ஆசிரியர் சோ.தீனதயாளன், B.A.,B.T.,

ஒரு சனிக்கிழமை காலை 9.30 மணி இருக்கும். நானும் எனது நண்பர்கள் சிலரும் பள்ளிக்கூடத்தில் சந்திப்பதாக இருந்தோம். இராஜாராமும், சோமுவும் வந்திருந்தனர். நான் மற்றவர்களின் வருகைக்காக எதிர் நோக்கிக் கொண்டிருந்தேன். நாங்கள் இது போல சந்திப்பது இந்த ஒரு நாளில்தான்.

இராஜாராம்: அவர்கள் எங்கே வரப்போகி றார்கள். பழனிசாமி எப்பொழுதும் சினிமா சினிமா என்றிருப்பான். கூத்தரசனோ படிப்பு படிப்பு என்று ஏதாவது ஒரு கதைப் புத்தகத் தைக் கையில் வைத்துக் கொண்டு அழுது கொண்டிருப்பான்.

சோமு: உனக்கு ஏன் கஷ்டமா இருக்கிறது?! படிப்பில் அவனுக்கு அவ்வளவு ஆர்வம். மாணவர்களுக்கு அதைத்தவிர வேறு என்ன வேலை? படிக்காவிட்டால் எப்படித் தேர்வது?

இராஜா: வெறும் படிப்பு மட்டும் இருந்தால் போதுமா? அதிலேயே மகிழ்ச்சியை அடைய முடியுமா? ஓய்வு நேரத்தைக் கழிக்க நல்ல வகைகள் தெரிய வேண்டாமா? ஓய்வு கிடைத்தவுடன் ஏதாவது ஒரு புத்தகத்தை எடுத்து வைத்துக்கொண்டு காலத்தைப் போக்க வேண்டியதுதானா?

சோமு: வேறு என்ன செய்வது? உங்களைப் போல் வெற்றுப் பேச்சில் காலத்தைக் கழிக் கவா சொல்கிறாய்? இந்த வெற்றுப் பேச்சு எப்படித்தானோ சிலருக்கு மகிழ்ச்சியைக் கொடுக்கிறது. அதுவும் பிறர் யாரையாவது இகழ்ந்து பேசுவது என்றால் வெல்லம் சாப்பி டுவது போல அவர்களுக்கு இருக்கிறது.

இராஜா: நான் ஒன்றும் அப்படிச் செய்யச் சொல்லவில்லை. பொழுதுபோக்கிற்கென அமைந்த சில வழிகளைக் கையாளக்கூடாதா என்று கேட்கிறேன். என் மனதில் உள்ளதை நன்றாக விளக்க முடியவில்லை. ஆங்கிலத் தில் சொன்னால் 'hobbies' என்பனவற்றுள் ஒன்றை மேற்கொள்ளலாமே, தபால் தலைக ளைச் சேர்த்தல், நிழல்படம் எடுத்தல், நாண யங்களைச் சேர்த்தல் முதலியவற்றுள் ஒன்றை மேற்கொள்ளலாமே.

நண்பர்கள் இருவரும் நல்லதொரு செய் தியைப் பேசத் தொடங்கியுள்ளதைக் கண்டு எனக்கு மிகுந்த மகிழ்ச்சி ஏற்பட்டது.

நான்: ஒருவருடைய ஓய்வு நேரத்தை உப யோகிக்க இவைதான் உனக்குக் கிடைத்த னவா? இவ்வளவு குறுகிய அளவுக்குள் அடங்கிவிட்டாயே! ஓய்வு நேரத்தை நல்ல வகையில் கழிப்பதில் உள்ள கஷ்டத்தை நீங்கள் நன்றாக உணரவில்லை என்று தெரிகி றது. சிலர் தங்களுக்கு எந்த விதத்திலும் பயன்படாத வேலைகளில் வெகு தீவிரமாக ஈடுபடுவதைப் பார்க்கிறோம். இவர்களுக்குக் கிடைக்கும் ஓய்வு நேரம் என்ன ஆகின்றது? எப்படிச் செலவழிப்பது என்று அறியாதவர்க ளாகவே இருக்கிறார்கள். இது ஒரு வகையில் ஆச்சர்யமாகவே இருக்கிறது. எனது அடுத்த வீட்டுக்காரர் ஒரு 'கார் மெக்கேனிக்'. தம் வேலையில் அவருக்கு மிகுந்த புகழ் உண்டு. சிறிதும் தயங்காது, முழு முயற்சியுடன் வேலை செய்வார். ஆனால், ஓய்வு நாட்கள் வந்துவிட்டாலோ என்ன செய்வது என்று அவருக்குத் தெரிவதில்லை. உண்ட நேரம் நீங்க மீதி நேரத்தில் தூங்கிக் கொண்டே இருப்பார். இல்லாவிட்டால் அன்று எத்தனை படக்காட்சிகளைப் பார்க்க முடியுமோ அவ் வளவையும் பார்த்துவிடுவார். ஓய்வைக்

இனிமைத் தமிழ்மொழி எமது - எமக்
கின்பந்தரும்படி வாய்த்தநல் அமுது — புரட்சிக் கவிஞர்

கழிக்க அவருக்கு வேறு வழிகள் தெரிய வில்லை. வேறு சிலரும் இருக்கின்றனர். மன உழைப்புக்கே இடமில்லாத வேலைகளில் அவர்கள் இன்பம் காண்கின்றனர். பிறருக் குப் பைத்தியம் பிடிக்கச் செய்யவல்ல, மன உழைப்புக்குச் சிறிதும் இடமே இல்லாத வேளையில் அவர்கள் மனத் திருப்தியுடன் இருப்பதைக் காண்கிறோம். துணிக்கடைக ளில், வாங்கப்பட்ட துணிகளைப் பையி லிட்டு கட்டிக் கொடுக்கிறார்களே அவர்கள் செய்யும் வேலையில் நீங்களும் நானும் எத்தனை நாளைக்கு இருக்க முடியும். ஆனால் அத்தொழிலில் ஈடுபட்டுள்ளவர்கள் பலபேர் உண்டல்லவா?

இராஜா: ஆம், அய்யா. தற்கால உற்பத்தி நிலையங்களிலுள்ள தொழிலாளிகளின் நிலைமை இப்படித்தானே இருக்கிறது. அவர் கள் நிலை எப்படி வேறுவிதமாக அமைய முடியும்? ஒரு நூற்றாண்டிற்கு முன்பெல்லாம் கையாலோ அல்லது வெகு சாதாரண ஆயு தங்களாலோ எல்லாப் பொருள்களும் செய் யப்பட்டன. ஆகையால் அக்காலத்தில் ஒரு பொருள் செய்யப்படும்பொழுது அதை முழு வதும் செய்து முடிப்பது தொழிலாளியின் வேலையாக இருந்திருக்கிறது. ஆனால், இன்றோ இயந்திர வசதியுடன் இயங்கும் ஒரு தொழிற்சாலையில் அங்கு நடைபெறும் வேலைகள் பல கூறுகளாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு சிறுபகுதியும் ஒருவனையே பார்க்கவிடுகிறார்கள். இதனால், பொருள்கள் அதிக அளவில் எளிதில் விரைவில் செய்யப் படுகின்றன. இந்தச்சாதனை நல்லதுதானே! முற்போக்கையும் குறிக்கிறது அல்லவா?

நான்: உற்பத்தியாளனைப் பொருத்தமட்டில் சரி. குறைந்த விலையில் விற்க முடிகிறது. வியாபாரப் போட்டிக்கும் பயன்படுகிறது. ஆனால், அவற்றைச் செய்து முடிக்கும் ஆட்க ளைக் கவனித்தாயா?

சோமு: நீங்கள் கூறுவது வேடிக்கையாக இருக்கிறது. தொழிலாளிக்கும் நன்மை தானே? ஒரு குறிப்பிட்ட வேலையைத் திரும் பத்திரும்ப செய்வதால் அதில் நல்ல பழக்கம் ஏற்படுகிறது. இதன் பிறகு சிறிது கூட நினைத்துப்பாராமல் விரைவாகத் தன் வேலையைச் செய்ய முடிகிறது. இதை விட்டு எல்லாவற்றையும் தானே செய்யவேண்டு மானால், எவ்வளவு தொல்லை பாருங்கள்.

நான்: நீ கூறுவது ஒன்றும் விளங்கவில்லை. விளக்கிக் கூறவும்.

சோமு: கைத்தறி நெசவாளியையும், மில் நெசவாளியையும் எடுத்துக் கொள்ளுங்கள். நூல் ஆடையாகுமளவும் கைத்தறி நெசவாளி கவலையுடனிருக்க வேண்டியுள்ளது. ஒவ் வொரு சிறு பகுதியையும் அவனே கவலையு டன் செய்ய வேண்டியிருக்கிறது. ஆனால், மில் நெசவாளிக்கு அக்கவலையில்லை. எப் பொழுதும் ஒரே மாதிரியான வேலை செய்து வருவதால் அவன் தன் வேலையில் எப்பொ ழுதும் முழு கவனத்துடன் இருக்க வேண்டிய தில்லை. தன் வேலையில் ஏற்படும் பழுதைச் சீர்படுத்துவதையும் கூட நினைப்பே தேவை இல்லாது இயல்பாகச் செய்து முடிக்கிறான் - வேட்டி நழுவினால் கை அதைத் திருத்த நம் நினைப்பு தேவை இல்லை என்பதைப் போல, 'சைக்கிள்' ஓட்ட மிகப்பழகிய ஒருவ னது செயல்களுக்கு தம் நினைப்பு தேவை யில்லை என்பதைப்போல - இதனால் இயந் திரத்தறி நெசவாளியின் வேலை மிக எளி தாக இருக்கிறது. கவலையற்றுச் செய்யக்கூடி யதாகவும் இருக்கிறது.

இராஜா: ஆம் அய்யா, சோமு சொல்வதிலும் உண்மையிருக்கிறது.

நான்: நீங்கள் இருவரும் ஒன்றைக் கவனிக்கா மல் விட்டுவிட்டீர்கள். கைத்தறி நெசவாளி தன் வேலையில் பெருமை கொள்கிறான். அதில் அவன் திறமை இருக்கிறது, தான் உண்டாக்கிய அழகிய ஆடையில் அவன்

என்னருந் தமிழ்நாட்டின்கண் எல்லோரும் கல்விகற்றுப்
பன்னருங் கலைஞானத்தால் பராக்கிரமத்தால் அன்பால்

பெருமையடைகிறான். இதைப்போலவே ஒவ்வொரு தச்சனும் தான் உண்டாக்கும் பொருள்களின் அழகில் செம்மையில் மகிழ்ச்சி கொள்கிறான். இவை போன்ற வேலைகளில் ஈடுபட்டுள்ளவர்கள் தான் தம் வேலையில் அக்கறையும், எந்தவித மகிழ்ச்சியையும் கொள்ள முடியும். இப்படிப்பட்டவர்களுக்கு பிழைப்புக்காகச் செய்யும் தொழிலே ஓய்வு நேர மகிழ்ச்சித் தொழிலாக 'hobby' ஆக இருக்கிறது. இக்காலத்தில் இயந்திர சாதனங்களைக் கொண்டு ஆகும் தொழில்களில் பெரும்பாலானவை இப்படி அமைவதில்லை. ஒவ்வொரு தொழிலாளிக்கும் ஒரு சிறு குறிப்பிட்ட வேலை, மரைகள் முடுக்குபவன் அதே வேலையைத்தான் செய்ய வேண்டும் - காற்றடிப்பவன் காற்றடிப்பதைத் தவிர வேறு வேலை செய்யக்கூடாது. இதுபோல ஒரே வேலையை நாள் முழுவதும் எல்லா நாட்களிலும் செய்ய வேண்டும் - நமது பஞ்சாலைகளில் சிமெண்ட் தொழிற்சாலைகளில் மோட்டார் உற்பத்தித் தொழிற்சாலைகளில் இப்படித்தான் நடக்கின்றன — எப்படித்தான் இத்தொழில்களில் ஈடுபடும் மக்கள் மகிழ்ச்சியுடன் கூடிய அக்கரைகொள்ள முடியும்.

இராஜா: நீங்கள் கூறியது உண்மையே என்றாலும், இதுபோல திரும்பத்திரும்ப ஒரே வேலையைச் செய்வதில் சிலர் சலிப்படைவதில்லையே! வெறுப்பும் கொள்வதில்லையே! இது ஏன்?

நான்: அவர்களது மன நிலை அப்படிப்பட்டது. அப்படிப்பட்டவர்கள் தங்கள் மூளைக்கு வேலை கொடுக்க மாட்டார்கள். மன உழைப்பு இல்லாத வேலையையே விரும்புவார்கள் - யோசிக்கவே மறுப்பவர்கள், பயப்படுவார்கள், பிறர் கூறுவனவற்றை, செய்துள்ளனவற்றை ஆராயாது ஏற்றுக்கொள்பவர்களாகவும் இவர்கள் இருப்பதை நீ அறியலாம்.

சோமு: மன உழைப்பு இல்லாமலிருப்பதில் இவர்களுக்குப் பயன் என்ன? ஓய்வு நேர மகிழ்ச்சிக்கென ஏதேனும் வேறு வழியை வைத்திருக்கிறார்களா? 'chess' போன்ற விளையாட்டுகள் இவர்களுக்குப் பிடிக்காதா?

நான்: எப்படிப்பிடிக்கும், மூளைக்கு வேலை வந்துவிடுமே! தங்களுக்கென சில பகற்கனாக்கள் வைத்திருப்பார்கள், அவற்றில் தாங்களே வீரர்களாக இருப்பார்கள் - அக்காதல் கனாக்களில் தாங்களே காதல் தலைவர்கள், தலைவிகள், தங்களின் அன்றாட உண்மை நிலைக்கு முற்றிலும் மாறுபட்ட கனாக்களாகவே அவை இருக்கும்.

இராஜா: இத்தகையவர்களைத்தான் படக்காட்சிக் கொட்டகைகளில் திரளாகப் பார்க்கிறோம். குத்துச் சண்டைப் பந்தய மைதானத்திலும் பார்க்கிறோம். இதற்குக் காரணம் நீர் கூறியதுதானோ?

நான்: ஆம். அவர்களின் பகற்கனாக்களுக்கு அடிப்படை அவைதானா? தம்புத்தியை அதிகமாகச் செலுத்த வேண்டியதில்லை. முன்னராகவே பிறரால் ஆக்கிவைக்கப்பட்டுள்ள கேளிக்கையல்லவா படக்காட்சி? எவ்வித மன உழைப்புமில்லாமல் அதில் இன்பம் காண்கின்றனர். தம்தொழிலில் மன உழைப்பைச் செலுத்த விரும்பாத இவர்கள், தாங்கள் தேடிச் செல்லும் ஓய்வு நேர மகிழ்ச்சியிலும் கூட மனதிற்கு உழைப்புத்தர விரும்புவதில்லை. எங்கும் மனச்சோம்பேறித் தனத்தைத்தான் விரும்புகின்றனர்.

சோமு: ஒருவனது தொழிலும் ஓய்வுநேர வேலையும் வேறு எப்படி இருக்க வேண்டும்?

நான்: உனது கேள்விக்கு நேர்முக விடை கொடுக்க விரும்பவில்லை. நீயே யூகித்துக் கொள். ஒன்று மட்டும் முடிவாகக் கூறுகிறேன். எவனொருவன் தன் அன்றாடத்

உன்னத இமயமலைபோல் ஓங்கிடும் கீர்த்தியெய்தி
இன்புற்றார் என்று மற்றோர் இயம்பக் கேட்டிடல் எந்நாளோ? — புரட்சிக் கவிஞர்

தொழிலில் மகிழ்ச்சி கொள்கிறானோ. அதைத் தன் வாழ்வில் ஒரு பாகமாகக் கொள்கிறானோ அவனால்தான் தன்ஓய்வு நேரத்திற்கென்று மகிழ்ச்சிதரும் வேலைகளை உண்டாக்கிக் கொள்ள முடியும். அதுபோன்ற தொழிலில் ஈடுபட வாய்ப்பைப் பெற முடியாத ஒருவன் முயன்று ஓய்வு நேரத்திலாவது தனக்கு மகிழ்ச்சி தரவல்ல நல்ல வேலை ஒன்றை அமைத்துக்கொள்வது நல்லது.

சோமு: ஆம், எதை எதையோ பேசுகிறோமே. இவற்றிற்கும் பழனிசாமி சினிமாவுக்குச் செல்வதற்கும், கூத்தரசன் புத்தகப்புழுவாக இருப்பதற்கும் என்ன தொடர்பு இருக்கிறது?

நான்: ஏன் தொடர்பு இல்லை? பள்ளிக்கூடத்தில் ஒரு மாணவனின் நிலைமையும் ஒரு தொழிற்சாலையிலுள்ள ஒரு உழைப்பாளியின் நிலைமையும் ஒப்பிட்டுப் பார்க்கக் கூடியவைகளே. ஏன் செய்கிறோம். என்ன நடக்கின்றது என்பதில் கவனம் இல்லாது கடனுக்கென காரியங்கள் செய்யும் மாணவர்களும் உண்டு. தான் செய்யும் காரியங்களில் ஆழ்ந்த உற்சாகமும், மகிழ்ச்சியுடன் கூடிய அக்கரையும் கொள்ளும் மாணவர்களும் உண்டு. இப்படிப்பட்ட இருவகை மாணவர்கள் தங்கள் ஓய்வு நேரத்தை எப்படிக் கழிக்கிறார்கள் என்பதைக் கவனித்தால் நான் கூறும் தொடர்பு நன்றாகத் தெரியும்.

இராஜா: அய்யா, சிறிது விளக்கமாகவே கூறவும்.

நான்: சில சமயங்களில் பல பெற்றோர்கள் தம் பிள்ளைகள் சினிமா செல்வதைக் கண்டிப்பதைக் கேட்டிருக்கிறோமல்லவா?

இராஜா: ஏனய்யா, வேறு சில பெற்றோர்கள், 'என்னடா எப்பொழுதும் புத்தகம்? சிறிது வெளியே சென்று வருவதுதானே? உடம்பு என்னவாகும்? என்று கூறுவதையும் கேட்டிருக்கிறோமே!

நான்: பொறு, யார் இல்லையென்றது.

சோமு: பெற்றோர்களுக்கு என்ன தெரியுமய்யா? எதையாவது சொல்லிக்கொண்டே இருப்பார்கள். இதைச் செய்தால், அதையேன் செய்யவில்லை என்பார்கள். அதைச் செய்தால் இதையேன் செய்யவில்லை என்பார்கள்.

நான்: அவ்வாறு கூறக்கூடாது. பெற்றோர்கள் எப்பொழுதும் சிடு சிடு என்று இருக்கிறார்கள் என்று குறை கூறுபவர்கள் அல்லவா நீங்கள். அவர்கள் மனோதத்துவ அறிவு பெறாதவர்கள். ஆகையால் அவர்கள் குறை கூறும் முறை கடுமையாக இருக்கலாம். பக்குவமான முறையில் கூறக் கற்றறிந்தவர்களாக இல்லாமல் இருக்கலாம் ஆனால், அவர்கள் கூறுவதில் உண்மை இல்லாமல் இல்லை.

சோமு: அது எப்படி அய்யா?

நான்: கவனித்துப்பாருங்கள். பழனிசாமி தனக்கு வாய்ப்பு கிடைத்த பொழுதெல்லாம் சினிமா செல்கிறான். அதாவது முன்னதாகவே தயாரித்து வைத்திருக்கும் கேளிக்கைகளில் ஈடுபடுகிறான். இது தீமை விளைவிக்கும். முழுதும் இத்தகைய மகிழ்ச்சியூட்டும் கேளிக்கைகளில் இளமையிலேயே ஈடுபடுவது முடிவில் பெரிய தீங்கில் கொண்டு விடும். ஏதோ மாதத்தில் ஓரிருமுறை, படக் காட்சிக்குச் செல்வது கண்டிக்கக் கூடியதென்று நான்கூற வரவில்லை. கிடைத்த ஓய்வையெல்லாம் இத்துறையிலேயே செலவு செய்வது கூடாது. ஏன்?

உலகத்தில் உயிரினங்கள் படிப்படியாக வளர்ச்சியுற்றதைப் பற்றி நீங்கள் படித்திருக்கிறீர்கள். சிறு உயிர் அமைப்பாக இருந்த அமீபா (amoeba) எவ்வளவு மாறுபாடும் வளர்ச்சியும் அடைந்து உயர்ந்த உயிரின அமைப்பாக - மனிதனாக - ஆகியுள்ளது.

விண்ணிடை இரதமூர்ந்து மேதினிகலக்குதற்கும்
பண்ணிடைத் தமிழைச் சேர்த்துப் பாரினை மயக்குதற்கும்

இந்த அமைப்பைப் பெற அது விரிவான வாழ்க்கையைப் பெறத் தொடர்ந்து முயன்றதால் தானே முடிந்தது.

இக்கொள்கை எவ்வளவு உண்மையோ அவ்வளவு உண்மை, மாறுதலையும் எந்த உயிரினமும் தனது ஒரு அவயவத்தையோ, அங்கத்தையோ தொடர்ந்து பயன்படுத்தாமல் விட்டுவிட்டால், காலப்போக்கில் அந்த அங்கம் வாடிப்போய் சுருங்கி மறைந்தே போகும். நாம் நமது கால்களை எங்கும் எப்பொழுதும் பயன்படுத்தாமல் விட்டுவிட்டால், காலப்போக்கில் மனித இனம் தன்கால்களின் பயனையே இழக்க நேரிடும். பின்னர் அவை இல்லாமலேயே போய்விடும். காரணம், அவற்றிற்கான வேலை இல்லாமல் போய்விட்டதுதான்.

சோமு: நீங்கள் கூறியது தற்கால இயந்திரத் தொழிலாளிக்கோ, மாணவர்களுக்கோ எப்படிப் பொருந்தும்?

இராஜா: ஏன் பொருந்தாது? அவன் தன் தொழிலிலும், ஓய்வு நேரப்பொழுது போக்கிலும் தனது மூளைக்கு வேலை தராமல் விட்டுவிட்டால், அதற்கான வேலை குறைகிறது, அதனால் அதுவும் குறைந்து முடிவில் முழுதும் அற்றே மறைந்து போகத்தானே செய்யும்?

நான்: நீ கூறியதுபோல முற்றிலுமே மறைந்து போகாது. ஆனால், அவர்களது அறிவு மழுங்கிப்போய்விடும் - தீட்டப்படாத - பழக்கப்படாத கத்தி கூர் மழுங்குவதுபோல இதைத்தான் இளைஞர்களும் குறிப்பாக மாணவர்களும் அறிய வேண்டும். இளமையிலேயே அவர்கள் நாடும் மகிழ்ச்சிப் பொழுது போக்குகள், உடல், மன உழைப்புகள் வேண்டாதவற்றுள் சென்று அமைந்தால் - அதனால் உண்டாகும் பழக்கங்கள் நான் முன்னர் கூறிவந்த தீமையில்தான் கொண்டுவிடும் - முடியும். சதா சினிமா சென்றுவரும் மாணவனின் நிலை என்ன? சௌகரியமான இடத்தில் உட்கார்ந்துள்ள. அவனுக்கு வினோதமான இன்ப எண்ணங்களும், உணர்ச்சிகளும் படக்காட்சி மூலம் தூண்டப்படுகின்றன. அவற்றைப் படங்கள் வாரி வழங்குகின்றன. தன் முயற்சியாலேயே அவ்வெண்ணங்களை அவன் கற்பனை செய்துகூட பார்க்க வேண்டியதில்லை. கரண்டி மூலம் உணவைக் குழந்தைக்கு ஊட்டுவதுபோல. அவன் முயற்சியின்றியே எண்ணங்கள் அவன் மனதில் தோற்றுவிக்கப்படுகின்றன. தானே நினைத்துப் பார்க்கத் தேவையில்லாது போகவே, யோசிக்க வேண்டும், ஆராயவேண்டும் என்ற எண்ணத்தை விட்டுவிடுகிறான். இதன் விளைவு அவன் கற்பனை உலகில் வாழும் நிலையை அடைகிறான். உண்மையான சுற்றுப்புற வாழ்க்கைக்கு ஒத்துப்போகும் சக்தியை இழந்து முடிவில் அன்றாட வாழ்வில் ஏற்படும் உண்மையான சிக்கல்களிலிருந்து மீளும் வழி தெரியாது கலங்குகிறான் - படக்காட்சிக் கதைகளும் சம்பவங்களும் இயற்கைக்கு மாறான கற்பனைகளாகத்தானே இருக்கின்றன. இது மட்டுமல்ல, தானே தனக்காக எண்ணிப்பார்க்கவும், தன் கருத்துக்கள் இவைதான் எனக்கூறவும் சக்தியற்றவனாய் விடுகிறான்.

சோமு: நீங்கள் கூறுவதைப் பார்த்தால், ஓய்வு நேரங்களில் புத்தகங்களைப் படித்துக் கொண்டிருப்பதே மேல் என்று புலனாகிறதல்லவா?

நான்: எப்படி ஆகும். சதா புத்தகம் என்றாலும் தீமையில்தான் முடியும். புத்தகங்களில் உள்ள கருத்துக்களைக் கொண்டு மனதை உற்சாகப்படுத்திக் கொள்ளலாம். ஆனால், எவ்வளவுதான் படித்தாலும், அன்றாட வாழ்க்கையைப் பற்றியும், மக்களைப்பற்றியும் சிறிதே அறிந்துகொள்ள முடியும். அன்றாட வாழ்க்கைப் பிரச்னைகளைப் புரிந்து கொள்ளவும் சமாளிக்கவும் அவை அதிகம் பயன்படும் என்பதில் எனக்கு மிகுந்த சந்தேகம் உண்டு.

சோமு: எனினும், புத்தி விசாலப்படாதா?

மண்ணிடை வாளையேந்திப் பகைப்புலம் மாய்ப்பதற்கும்
எண்ணிலாத் தமிழர் உள்ளார் எனும்நிலை காண்பதென்றோ? — புரட்சிக் கவிஞர்

பழங்காலத்தை நன்றாகப் புரிந்துகொள்ள லாமே! எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப் பட்ட பெரியார்களின் கருத்துரைகளைக் கொண்டு மனதை வளப்படுத்த முடியாதா?

நான்: முடியாமலென்ன? ஆனால், ஒன்று நீ புத்தகத்தைத் தேர்ந்தெடுக்கும்பொழுது எச்சரிக்கையுடனும், புத்திசாலித்தனத்துட னும் இரு. ஆனால்...

சோமு: இதற்குக்கூடவா ஒரு 'ஆனால்'?

நான்: பொறு. புத்தியை மனதை வளப்படுத்து கிறேன் என்ற முயற்சியில் உடலை மறந்துவி டாதே. உடல் முழு வளர்ச்சியடைய உடற்ப யிற்சி தேவை. அப்பொழுதுதான் சுகத்துடன் இருக்க முடியும். இத்துடன் செயல்முறை அறிவும், உலக நடைமுறை அறிவும் வேண் டும். அதற்கான பயிற்சியும் தேவை. இதை நீ ஒப்புக்கொண்டுதான் ஆகவேண்டும்.

இராஜா: நீங்கள் கூறுவதைப்பார்த்தால், இரண்டும் வேண்டுமென்றே ஆகிறது. வாழ் வது என்பது ஒரு தொழில் போலவும், அதில் ஒவ்வொருவகைப் பயிற்சிக்கும் தகுந்த இடம் கொடுக்க வேண்டும் என்கிறீர் அல்லவா?

நான்: ஆம். வேலையும் உண்டு, விளையாட் டும் உண்டு. அமைதியான, ஆனால், மூளை உழைப்புள்ள ஓய்வும் உண்டு, மன ஓய்வு உடைய ஆனால், உடலுழைப்புள்ள ஓய்வும் உண்டு. மனதிற்குப் பயிற்சிக்கும், உடலுக் குப் பயிற்சிக்கும், வாழ்க்கையில் பிற மனிதர் கள் பற்றிய அறிவு பெரும்பயிற்சிக்கும் அதில் இடமுண்டு. தனி மனிதன் எல்லாவ கையிலும் வளர்ச்சியுறத் தேவையான பழக் கங்களை உண்டாக்க இளமையே தக்க தரு ணம். குறிப்பாகப் பள்ளிக்கூட நாட்களைத் தவிர வேறு சிறந்த காலம் எதுவும் இல்லை. பள்ளிக்கூடத்தில்தான் இப்பயிற்சிகளுக்கான வாய்ப்புகள் இருக்கின்றன. அவற்றைப் பயன்படுத்துவது உங்கள் கையில் உள்ளது — விரும்பினால் முழு மனிதர்கள் ஆகலாம்.

சோமு : என்ன இருக்கிறது? இருந்தால் விடுவோமா?

நான்: இராஜா, நீ இதற்குப் பதில் கூற முடியுமா?

இராஜா: ஓ முடியும். மாலையில் விளையாட லாம் உடற்பயிற்சிக்காக, பள்ளிக்கூடத்தில் 'hobbies' என்ற தலைப்பில் எவ்வளவோ சொல்லிக் கொடுக்கிறார்கள். 'Chess' போன்ற விளையாட்டுகளில் மூளை உழைப்புத் தேவைப்படுகிறது. இதைப்போன்று எத்த னையோ கூறிக்கொண்டே செல்லலாம்.

நான்: முக்கியமான சிலவற்றை மறந்துவிட் டாயா? பள்ளிக்கூடச் சங்கங்களைக் குறிக்க வில்லையே. அவற்றின் வேலைகளிலும் ஈடு படுங்கள். நடைமுறை வாழ்க்கையைப் பற்றி யும் பலவும் அறியவும் முடியும். மனித னுக்கே சிறப்பான சில அமைப்புகளில் தேர்ச் சியும் அடைவீர்கள். பொழுது போவதே தெரியாது. எல்லா உழைப்பும் மகிழ்ச்சி தரும் உழைப்பாகவே ஆகிவிடும்.

இராஜா: நீர் கூறியவை முற்றும் உண்மையே. நாங்கள் உயர்நிலைப் பள்ளியிலிருந்தபொ ழுது ஒரு கையேட்டுப் பிரதியைத் தயாரித் தோம். அதில் எங்கள் உழைப்பு மகிழ்ச்சி யைக் கொடுத்தது. நாங்களே யோசித்து எழுதிய கட்டுரைகளைப் பார்த்த பொழுது பெருமையடைந்தோம். மகிழ்ந்தோம்.

நான்: அதுவே நான் வலியுறுத்த நினைத்தது. நாம் பேசியவற்றிலுள்ள உண்மையை அறிந்து நடந்தால் வாழ்க்கை வரண்டிராது. நீங்களிருவரும் என்ன கூறுகிறீர்கள்.

சோமு: சரிதானய்யா, ஆனால், இதன்படி நமது நண்பர்கள் திருந்துவார்களா?

இராஜா: திருந்தினால் அவர்களுக்கு நல்லது. சங்கும் ஊதுகிறது. போகலாமே.

நாங்கள் இனிது கலைந்தோம்.

(1955 மலரில்)

இன்பத்தமிழ்க்கல்வி யாவரும் கற்றவர் என்றுரைக்கும்
நிலை யெய்திவிட்டால் துன்பங்கள் நீங்கும் சுகம்வரும்
நெஞ்சினில் தூய்மை உண்டாகும் - வீரம் வரும் — புரட்சிக் கவிஞர்

திருமணம் (அ) வாழ்க்கைத்துணை ஒப்பந்த நிலை பற்றி தந்தை பெரியார், புரட்சிக்கவிஞர் பாரதிதாசனார்

பேராசிரியர் ந. இராமநாதன்
முதல்வர், பெரியார் சிந்தனை அஞ்சல்வழிக் கல்லூரி

உயிரினங்களின் உலக வாழ்க்கை என்பது குறிப்பிட்ட கால எல்லையை உடையதாக இருக்கின்றது. தங்களுக்குப் பின்னர்த் தங்கள் இனங்களைத் தோற்றுவித்து விட்டுத் தாங்கள் மறைவது அல்லது இறப்பது என்பது உயிரினங்களின் முழு மனநிறைவான வாழ்க்கையாக அமைகின்றது. இந்த இயல்புக்குப் பொருந்த உயிரினங்கள் ஆணாக - பெண்ணாகப் பிறக்கின்றன, வளர்கின்றன, வாழ்கின்றன. பின்னர் மேற்கூறிய தம்மினத்தை உருவாக்கல் பணியைச் செய்துவிட்டுக் கண்களை மூடுகின்றன.

உயிரினங்களின் இந்தப் பொது இயல்புகளில் மனித இனமும் ஒத்து விளங்குகின்றமையை நாம் காணலாம். என்றாலும், உயிரினங்களில் மனித உயிரினம் உணவு - உடை - இருப்பிடம் - போக்குவரத்து - மருத்துவம் போன்ற வாழ்வுத்துறைகளில் மற்ற உயிரினங்களைவிட மிகப்பெரிய அளவில் முன்னேறி உலகைத் தம்வசம் வைத்துக் கொள்ளும் பேராற்றலுக்கு உரிமை உடைத்தாக விளங்குகின்றமையைக் காணலாம்.

இத்தகைய மனித உயிரினம் மற்ற உயிரினங்கட்கு அறவே இல்லாத கடவுள் - மதம் - இவைகளை ஒட்டி மோட்சம் - நரகம், மறுபிறப்பு, அடுத்த உலகம் போன்ற பொய்யான, நடைமுறை வாழ்க்கைக்குச் சிறிதும் தேவைப்படாத கற்பனைகளைப் பல உருவங்களில் உருவாக்கிக் கொண்டு, இவைகளால் விளைந்த சாதி உயர்வு தாழ்வுகள், செல்வம் இருப்பவன் - இல்லாதவன், உழைப்பவன், உழைப்பே இல்லாதவன், ஆண்டான் அடிமை, அறிஞன், மடையன், படித்தவன், படிப்பே இல்லாதவன் போன்ற மனித இனத்துக்கு அறவே வேண்டாத வேறுபாட்டு நிலைகட்கு அதாவது பேத நிலைகட்கு ஆட்பட்டு அல்லற்பட்டு அவதிக்குள்ளாகித் தம்மையொத்த மற்ற உயிரினங்கள் போலல்லாமல் மனச்சங்கடங்கட்கு ஆளாகித் தவிக்கும் உயிரினமாக மனித உயிரினம் விளங்குகின்றது. கடவுள் மதங்களை ஒட்டி எழுந்த இந்த உலக வாழ்வுக்கு அறவே வேண்டாத பொய்யும், புளுகும் நிறைந்த மேற்கூறப்பட்ட அவ்வளவு கற்பனைகளும் அவைகளை ஒட்டிய நடைமுறைகளும் அடியோடு அழிய வேண்டும் என்பது தந்தை பெரியார், புரட்சிக்கவிஞர் பாரதிதாசனார் போன்றோர் கொள்கைகளாகும். தந்தை பெரியார் இந்தப் பெரிய உண்மைப் பொருளைப் (தத்துவத்தை) பல முகமாக விளக்கிப் பேசி இருக்கிறார்கள். அவைகளைப் புரட்சிக் கவிஞர் பாரதிதாசனார் அருமையான பாடல்களாக உருவாக்கியிருக்கின்றார்கள்.

ஆண் பெண் இணைவதைக் கடவுள் மதச் சிந்தனையாளர்கள் பல பிறவிகளில்

கெஞ்சாமை பகைவரைக் கிட்டாமை பகைவர்சொல்
கேளாமை காட்டிக் கொடாமை பின்னிடாமை
எனும் அஞ்சாமை வேண்டும் - பாரதிதாசன்

தொடர்ந்து வருவது என்பார்கள். அதனால், அதற்கு மனித வாழ்வில் பெரிய இன்றியமை யாமையைக் கொடுத்து மனித வாழ்வைப் பல சங்கடங்களுக்கு உள்ளாக்கி விட்டனர். ஆண், பெண் இணைவது என்பது உயிரினங் களின் பொது இயல்பான தன்னினத்தின் தொடர்ந்த வாழ்வை உருவாக்குவது என்ப தைத்தவிர வேறு ஒன்றும் இல்லை. வாழ்வில் நிகழும் மூச்சுவிடுதல் - பசிக்கு உணவருந்து தல், கண் சிமிட்டுதல், உறங்கல் போன்ற தவிர்க்க முடியாத நிகழ்ச்சிகளில் இதுவும் ஒன்றுதான். இதற்கென எந்தச் சிறப்பும் தனித்தன்மையும் இல்லையென்பது தந்தை பெரியார் கருத்தாகும். தந்தை பெரியார் ஆணும் பெண்ணும் இணைதலைப் பின்வரு மாறு விளக்குவார்.

உணவுக்கடைக்குப் போகின்ற நாம் உண்ணுதற்கெனப் பல பண்டங்களை உண வுக்கடைக்காரன் உருவாக்கி வைத்திருந்தா லும் நமக்குத் தேவையான ஒன்றை அல்லது இரண்டைத் தேர்ந்து உண்டுவிட்டு மற்றவற் றைப் பற்றிக் கவலைப்படாமல் உணவுக் கடையை விட்டு வெளியேறுவது போன்றது என்பார். துணிக்கடைக்குப் போய் துணி வாங்கி வருவதையும் குறிப்பிடுவார். ஆணும் பெண்ணும் பலராக உள்ள மனித இனத்தில் தங்கட்குப் பொருத்தமான ஒரு பெண்ணை ஒரு ஆடவனும் அதனைப் போன்றே பொருத்தமான ஒரு ஆடவனை ஒரு பெண்ணும் தேர்ந்து வாழ்க்கையைத் தொடங்க வேண்டியதுதான். ஒரு ஆணின் வளர்ச்சி பெண்ணிலும், பெண்ணின் வளர்ச்சி ஆணிலும் சென்று நிறைவடைகின்றது. இரு வரும் இணைந்த பின்னர் உடம்பின் வளர்ச் சிக் கூறுகள் குறையத் தொடங்கி விடுகின் றன. இதற்குத் திருமணம் அல்லது வாழ்க் கைத்துணைநல ஒப்பந்தம் என்ற நிகழ்ச்சி தேவையா? தேவை இல்லையென்றே சொல் லிவிடலாம். என்றாலும், தேவைப்படுகின் றது. இதற்கான காரணத்தை தந்தை பெரியார் பின்வருமாறு விளக்குவார்.

எல்லா உயிரினங்களையும் போல ஆதி மனிதர்கள் உணவுக்காகக் காடுகளில் அலைந்து திரிந்து காய் - கனி - கிழங்கு போன்றவற்றைத் தேடி உண்டனர். நெருப் பைக்கண்டு உருவாக்கத் தெரிந்த பிறகு சமைத்து உண்டனர். காய்கறிகளோடு கனிக ளோடு புலாலையும் பதப்படுத்தி உண்டனர். பயிரிடக் கற்றுக் கொண்ட காலம் மனிதன் அலையாமல் நிலையாகத் தங்கி வாழ்ந்த காலமாகும். பயிரிடுதலை, ஒட்டிப் பயிரிடுத லுக்கு வேண்டிய நிலமும், கலப்பையும், மாடும், பிற கருவிகளும் அவனுக்கு உடை மைகளாக அமைந்தன. அந்த உடைமைக ளைத் தனக்குப் பிறகு தனக்குப் பிறந்த பிள்ளைக்குக் கொடுத்துவிட்டு இறப்பதில் மனிதன் மன நிறைவு கொண்டான். அப்படி எண்ணியபோது தனக்கே பிறந்த பிள்ளை யாக இருக்க வேண்டும் என்கின்ற வரையரை யும் தேவைப்பட்டது. அப்போதுதான் தனக் கென ஒரு பெண்ணை எல்லோரும் அறிய அறிவிப்புச் செய்து ஒரு ஆடவனும், அத னைப் போன்றே ஒரு ஆடவனை எல்லோ ரும் அறிய ஒரு பெண்ணும் அறிவிப்புச் செய்து இணைய வேண்டிய கட்டாயம் வந் தது. இதுதான் திருமணம் அல்லது வாழ்க் கைத் துணைநல ஒப்பந்தம் தோன்றிய கால மாகும்.

உழைப்பு எல்லோருக்கும் கட்டாயமாகி, உடைமைகள் எல்லோருக்கும் உரிமையாகி வாழும் பொதுவுடைமைக் காலம் மனித இனத்துக்கு நிறைவாக அமையும்போது தமக் குப் பின்னே தம்முடைய உடைமையாக எதுவும் இல்லாமல் போய்விடும். அந்தக்

விழியில்லா வாழ்வும் வெற்றி பெறுதல் கூடும்
வழி இல்லாத ஊர்க்கும் வரப்பைக் கடந்து சேர்வோம்

காலத்தில் திருமணம் வாழ்க்கைத்துணைநல ஒப்பந்தம் ஆகியவை அறவே இல்லாமல் போகும். இது *தந்தை பெரியார் கருத்தாகும்.* புரட்சிக்கவிஞர் பாரதிதாசனார் தனியுடைமைக் காலத்துக்கு ஏற்ப ஆணும் பெண்ணும் மணம் செய்து கொண்டு இணைந்துவாழும் வாழ்வைக் ''குடும்ப விளக்கு'' என்ற பெயரால் *மிகச் சிறப்பாகப் பாடிக்காட்டினார்.* அவரே தந்தை பெரியாரின் மேற்குறித்த கருத்தை நன்கெண்ணிப்பார்த்துத் ''திருமணம்'' அல்லது ''வாழ்க்கைத் துணைநல ஒப்பந்தம்'' இல்லாமல் போகும் காலத்தையும் நன்கு எண்ணிப் பின்வருமாறு பாடியுள்ளார்.

ஒருத்திக்கும் ஒருவனுக்கும்
  வாழ்க்கையின் உடன்பாடென்னும்
திருமணம் ஒழிதல் வேண்டும்
  தெரிந்தவர் கூடி யன்பு
புரிவதால் தோன்றும் மக்கள்
  பொதுமக்கள் ஆதல் வேண்டும்
அருந்துதல் உறைதல் எல்லாம்
  பொதுவென அடைதல் வேண்டும்.

கட்டாயக் கல்வி வேண்டும்
  கட்டாய வேலை வேண்டும்
மட்டான அறிவு கொண்ட
  வையகம் நான்குறித்த
தெட்டில்லா அமைதி நோக்கிச்
  செல்வதே சென்ற பின்னர்த்
தட்டில்லை எவ்வேலைக்கும்
  தடையொன்றும் இருக்காதென்றான்.

என்று பாடியுள்ளார்.

மரநிழல்

அழகாபுரம் என்ற ஓர் அழகான ஊரில் கஞ்சத்தனமும் பேராசைக் குணமும் உடையவன் சுந்திரம். இவன் அந்த ஊரிலேயே மிகவும் செல்வந்தன். அவன் வீட்டிற்கு எதிர்ப்புறம் ஒரு பெரிய ஆலமரம் உள்ளது. அங்கு யாராவது அமர்ந்தால் அடித்து விரட்டுவான் சுந்தரம். ஒரு நாள் ஒரு கிழவர் வெயிலில் நடந்து களைப்பாறுவதற்காக அந்த மரத்தடியில் அமர்ந்தார். சிறிது மயக்கமாக இருக்கவும், படுத்து உறங்கினார். சுந்திரம் வெளியில் வந்து பார்த்துவிட்டு பக்கெட்டில் தண்ணீர் கொண்டு வந்து மேலே ஊற்றிவிட்டான். இதனால், அவருக்கு மிகவும் துன்பமாக இருந்தது. அந்த ஊரில் ஒரே ஒரு மரம்தான் இருந்தது.

அந்த ஊருக்குப் புதிதாக ஒருவர் வந்தார். அவர் பெயர் இராமலிங்கம். அவர் அறிவும் ஆற்றலும் மிக்கவர் எனத் தெரிந்து கொண்டு மக்கள் மரப்பிரச்சனையைக் கூறினார்கள் அவர் ஒருநாள் சுந்திரம் வீட்டுக்குச் சென்று மரநிழல் எனக்கு வேண்டும். அதற்கு உனக்கு ஐநூறு ரூபாய் தருகிறேன் என்றார் இராமலிங்கம். அதைக் கேட்டவுடன், 'எந்த முட்டாளாவது மரநிழலை விலைக்குக் கேட்பானா? என்று மனத்தில் சொல்லிக் கொண்டு நூறு ரூபாய் வாங்கிக் கொண்டு பத்திரம் எழுதித் தந்தான். ஊர்ப்பொதுமக்கள் சார்பாக அதை இராமலிங்கம் வாங்கிக் கொண்டார்.

இராமலிங்கமும் மற்றவர்களும் நாள்தோறும் மாலையில் மரத்தடியில் வந்து அமர்ந்து பேசிக் கொண்டு இருப்பார்கள். இப்படியே நாட்களும் சென்றன. ஒருநாள் மரநிழல் சுந்திரத்தின் வீட்டின் மொட்டை மாடியில் விழுந்துகொண்டிருந்தது. அதைக் கண்டறிந்த இராமலிங்கம், ஊர் மக்களை அழைத்துக் கொண்டு மொட்டை மாடிக்குச் சென்றார்.

மாடியில் விழுந்த மர நிழலில் எல்லோரும் அமர்ந்து பேசிக் கொண்டிருந்தனர். இதைப் பார்த்ததும் சுந்திரத்துக்குக் கோபம் வந்தது. 'எல்லோரும் வெளியே செல்லுங்கள்' என்று சத்தம் போட்டான். 'நாங்கள் எங்கள் மரநிழலில்தான் அமர்ந்து இருக்கிறோம்' என்று கூறி வெளியேற மறுத்தார்கள். இதனால் அவனுக்கு *மன நிம்மதி* போய்விட்டது. 'இனியாவது நீ மக்களை விரட்டாதே' என்று அவர்கள் கூறினார்கள்.

சுந்திரம் அவர்களிடம் 'என்னை மன்னித்துவிடுங்கள்' என்று கூறித் தலைகுனிந்தான்.

— ***ச.ப.விசயகுமார்,*** எட்டாம் வகுப்பு 'இ'

எழில் இல்லாத பெண்ணும் எவர்க்கோ மனையாய்க்கூடும்
மொழி இல்லாத வாழ்வை நினைக்க முடியாதன்றோ?

— புரட்சிக்கவிஞர்

உள்ளத்தனையதுயர்வு!

(துரைமாணிக்கம்)

பரிதி நடந்து செல்லும் பாதையிலும் தண்ணின்
அரிதாம் நிலவொளியின் ஆட்சியிலும், நன்கமைந்து
காலப்பிரிவாலும், காற்றாலுஞ் சீர்பெற்ற
கோலத் தமிழகத்தைக் கோளநூல் வல்லார்கள்
பாராட்டிப் பேசுகின்றார் என்னும் பெருமையொடு,
சேரனென்னும் வீரன், செழுந்தமிழர் பாட்டனென்றும்,
சோழனென்னும் வேந்தனுக்குச் சொந்தம்யா
மென்றுரைத்தும்
வாழும் பழமதுரை வாழ்ந்திருந்த பாண்டியராம்
வித்தில் விளைந்திருக்கும் வீரஞ்சேர்க் கூட்டமென்றும்,
கத்திப் பழங்கதைகள் கூறி வருவதல்லால்,
நம்மில் வளர்ந்துவரும் நச்சடிமைக் கீழ்க்குணத்தை
இம்மியளவேனும் எண்ணிநாம் பார்த்ததில்லை;
வீரத் துயர்ந்திருந்த வேந்தரென்று பேசுகின்ற
சேரரொடு பாண்டியரும், சோழத் தமிழரசும்
தம்முள் குலைவுற்றுத் தாழ்வெய்தி மாண்டதனை
நம்முள் ளறிந்திருந்தும் நல்லுரவு கொண்டதில்லை;
பண்டைப் பெருந்தமிழன் பான்மையினைக் கூறிடுங்கால்
அண்டை யிருப்பவனை அன்பொழுகப் பார்த்ததில்லை;
பாரியென்றும், ஓரியென்றும் பைந்தமிழின் வள்ளலரைக்
கூறிடுவ தல்லாற் குறுணையள வீந்ததில்லை;
காப்பியங்கள் ஐந்தென்று கூறிக் களிப்பதல்லால்
காப்பியஞ்சொல் நல்லுரைக்குக் காதைக்
கொடுப்பதில்லை;
வள்ளுவரின் வாய்மையினை வையகத்து மக்களெல்லாம்
கொள்ள உரைப்பதல்லால் கூற்றுவழி நிற்பதில்லை;
கீரன் துணிவுபற்றிக் கூறிமகிழ் வேற்பதல்லால்
வீரத் துணிவில்லை, நெஞ்சில் வலிவில்லை!
சாதிப் பெருமடமும் சாத்திரமும், பன்னூலை
ஓதி விடுவதனால் ஓய்ந்துவிடப் போவதில்லை;
கீழென்றும் மேலென்றும் கொள்ளுதலால் இந்நாடு
பாழடைவ தல்லாற் பயனடையப் போவதில்லை;
செல்வச் சிறப்பென்றும், ஏழ்மைச் சிறுமையென்றும்
பல்வாறு கூறிப் பலனெதுவுங் கண்டதில்லை;
கோளறிந்து திங்கள் குடியேறுங் காலத்தில்
வாளெரிந்து, வில்லேவி வாழ்ந்துவிடப் போவதில்லை;
அண்டத் திருவுலகை ஆய்வாளர் நாளும் போய்க்
கண்டறியும் காலத்தில் 'கால'மொன்றும் செய்வதில்லை;
மெய்யில் அழுக்கேறி நெஞ்சில் இருள் வைத்துக்
கைகூப்பிப் போற்ற கடவுளருள் சேர்வதில்லை;
தம்மைப்போ லோருயிரைத் தாழ்த்தி நடக்கையிலே
செம்மையாய்ப் பண்டைச் சரித்திரங்கள் பேசுவதில்
நாணமில்லை! மக்களுள்ளே நல்லொழுங்கு
தானுமில்லை;
மாணப் பெரும்பேச்சில் மக்களுயர் வேற்பதில்லை;
'எவ்வுயிரும் ஒருயிராய் எண்ணீர்; பெருமையுறுஞ்
செவ்வை ஒழுங்கேற்பீர்; சேர்ந்தொருங்கே வாழ்வீர்;
உயரன்பு கொள்வீர்; உறுந்தமிழ்நூல் கற்பீர்;
அயர்வின்றி எப்பொழுதும் எப்பணியும் ஆற்றுவீர்;
நன்றல்ல நீக்குவீர்'' என்று நவின்றொருவன்,
ஒன்றினையும் கொள்ளா தொழிந்துவிடின் நாமவனை
என்னென்று கொள்ளுவோம்? எள்ளி இகழோமா?
பொன்னென்றா கொள்ளுவோம்? போவென்று
தள்ளோமா?
உள்ளத் துயர்வில்லா ஓதுகல்வி கல்வியல்ல!
வள்ளுவரும் உள்ளத்து வாய்மை உயர்வென்றார்,
வெள்ளத் தனைய மலர்நீட்டம் மாந்தர்தம்
உள்ளத் தனைய துயர்வு.

(1958 மலரில்)

தமிழ் மொழியைப் பழிப்பவனைத் தாக்காமல் விடாதே
தனிமுறையில் கடுமொழியைத் தொடாதே — புரட்சிக்கவிஞர்

பலநூற்றாண்டாய்ப் பாரத நாட்டில் போரே இல்லை
அதனால் மக்கள்பால் அஞ்சாமை என்பதே இல்லாதழிந்தது
— புரட்சிக் கவிஞர்



என் பழைய நினைவுகள்

S.C. வெங்கடாசலம், B.Sc., B.T.

முன்னாள் செயலாளர், சேலம் மாவட்ட திராவிடர் கழகம்
(தலைவர், சேலம் மில் ஜவுளி வியாபாரிகள் சங்கம்)

நான் பயின்ற பள்ளி, நான் ஆசிரியனாகப் பணிபுரிந்த பள்ளியாகிய கோட்டை நகராட்சி மேல்நிலைப் பள்ளி, சேலம் மாவட்டத்திலேயே முதல் முதலாகத் தோன்றிய பள்ளி என்பதை அறியும்போது பெருமகிழ்ச்சியும், பெருமையும் அடைகிறேன். ஏறக்குறைய நூற்று அய்ம்பது ஆண்டுகாலம் பழமை வாய்ந்தது என்று அறியும்போது பெருமிதம் அடைகிறேன். 150 ஆண்டுகள் பழமை வாய்ந்தது என்றாலும் 1885ம் ஆண்டு தான் சேலம் நகராட்சியிடம் ஒப்படைக்கப்பட்டது. ஆக இப்பள்ளி நூற்றாண்டு · விழாவைக் கொண்டாட இருக்கிறது.

என் நினைவலைகள் இந்தப் பள்ளியில் மாணவனாகப் பயின்ற காலத்தை நோக்கிப் பின் செல்கின்றது. நான் 1941ம் ஆண்டில் இப்பள்ளியின் கிளையான செவ்வாய்ப் பேட்டை, அப்புச்செட்டித் தெருவில் அமைந்திருந்த டவுன் ஸ்கூலில் முதல் பாரத்தில் பயின்றேன். அப்போதெல்லாம் இப்போது இருப்பதுபோல் 6-ம் வகுப்பு எல்லாம் கிடையாது. I, II, III, IV, V, VI 'பார்ம்' - படிவம் என்றுதான் இருந்தது. நான் முதல் படிவத்தில் பயிலும்போது லத்தீப் என்பவர் (என் வகுப்பிற்கு) ஆசிரியராக இருந்தார். அடுத்த ஆண்டு முதல் நான் சேலம் சிறுமலர் உயர்நிலைப் பள்ளியில் சேர்ந்து பயின்று 1948ம் ஆண்டு பள்ளி இறுதித்தேர்வு (எஸ்.எஸ்.எல்.சி) எழுதினேன். அதை அடுத்து சேலம் நகராட்சிக் கல்லூரியில் இண்டர்மீடியட் வகுப்பில் இரண்டு ஆண்டுகள் பயின்றேன். பதினோறு ஆண்டு பள்ளியில் படித்த பிறகு தான் பள்ளி இறுதித் தேர்வு (எஸ்.எஸ்.எல்.சி) எழுத வேண்டும். இப்போது பத்து ஆண்டோடு பள்ளிப் படிப்பை முடித்துவிட்டு அடுத்த இரண்டு ஆண்டுகள் மேல்நிலைப் பள்ளியில் சேர்ந்து பயில வேண்டியதாக உள்ளது. பட்டப்படிப்பு, நாங்கள் படிக்கும் போதெல்லாம் நான்கு ஆண்டுகள் கல்லூரியில் சேர்ந்து படிக்க வேண்டும். இப்போது பட்டப்படிப்பு மூன்று ஆண்டுகளாகக் குறைக்கப்பட்டுள்ளது. நான் சேலம் கல்லூரியில் இண்டர்மீடியட் முடித்தவுடன் சென்னை மாநிலக் கல்லூரியில் B.Sc. இல் சேர்ந்து படித்து பட்டம் பெற்றேன். அதன் பிறகு எங்கள் பரம்பரை வணிகமான, ஜவுளி வியாபாரத்திற்கு என் தந்தையார் சுயமரியாதைச் சுடரொளி M.V. சொக்கலிங்கம் அவர்களுக்குத் துணையாக வந்துவிட்டேன். வணிகத்தில் ஈடுபட்டிருந்த போதிலும் எனக்கு மேற்கொண்டு ஏதாவது படிக்க வேண்டும் என்ற ஆர்வம் மேலோங்கியது. மீண்டும் என் படிப்பைத் தொடர்ந்தேன். அப்போது எனக்கு ஆசிரியராக பணி புரியவேண்டும் என்ற எண்ணம் இருந்ததால் 1957ல் கொமாரபாளையம் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் சேர்ந்து பயின்று பி.டி. பட்டம் பெற்றேன். சுயமரியாதை வீரரும் தீவிர பகுத்தறிவு வாதியும் நீதிக்கட்சி காலத்திலேயே தந்தை பெரியார் அவர்களிடம் நெருங்கிப் பழகியவரும் 1971ல் சேலத்தில் நடைபெற்ற மூடநம்பிக்கை ஒழிப்பு மாநாட்டின் வரவேற்புக் கமிட்டியின் தலைவருமான பேராசிரியர் தி.வை.சொக்கப்பா அவர்கள் பட்டம் பெற்ற காலத்தில் எல்லாம் எல்.டி. என்ற பட்டம்

சூதும் வாதும் நிறைந்த பூதலமீது நல்லார்
ஓதும் வழி நடந்தால் யாதும் துயரமில்லை

— புரட்சிக் கவிஞர்

தான், சென்னைப் பல்கலைக் கழகம் அளித்து வந்தது. அப்போதைய ஆசிரியப் பெருமக்கள் எல்.டி. என்ற பட்டம் எங்கள் கவுரவத்துக்கு உகந்ததாக இல்லை என்று பல்கலைக் கழகத்திற்கு கோரிக்கை விடுத்தார்கள். எல்.டி. என்றால் (லைசென்சியேட் இன் டீச்சிங்) கற்பிப்பதில் உரிமம் என்று பொருள். அதை ஆசிரியப் பெருமக்கள் விரும்பவில்லை. இது ஏதோ வாகனங்கள் ஓட்டுவதற்கு உரிமம் (Driving License) வழங்குவது போல் இருக்கிறது என்று நினைத்திருப்பார்கள் என்று நான் உணருகிறேன். அதனால் எல்.டி. என்று பட்டம் கொடுப்பதை சென்னைப் பல்கலைக் கழகம் கைவிட்டு பி.டி. என்ற பட்டத்தை அளித்து வந்தது. மற்ற பல்கலைக் கழகங்கள் எல்லாம் பி.எட். (Bachelor of Education) என்ற பட்டத்தை அளித்ததைப் பின்பற்றி, இப்போதெல்லாம் B.Ed என்ற பட்டத்தை வழங்கி வருகிறது.

நான் இந்தப் பள்ளியில் 1958ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் அறிவியல் ஆசிரியனாகச் சேர்ந்தேன். நான் ஆசிரியனாகப் பணிபுரிய வந்து சேரும்போது காலஞ்சென்ற ப.மாணிக்கம் பிள்ளை என்பவர் தலைமை ஆசிரியராக இருந்தார். அவரை லண்டன் மாணிக்கம் பிள்ளை என்று அழைப்பார்கள். அவர் லண்டன் சென்று வந்தவர். அவர் நிர்வாகத்தில் மிகவும் கண்டிப்பானவர். பள்ளியில் பயிலும் மாணவர்களும், ஆசிரியர்களும் ஒழுக்கமாகவும் பொறுப்புணர்ச்சியுடனும் இருக்க வேண்டும் என்பதில் கண்ணும் கருத்துமாக இருப்பவர். அவர் ஓய்வு பெற்ற பின் சேலம் நகர கூட்டுறவு வங்கியில் நானும் அவரும் இயக்குநர்களாக இருந்தோம். நான் இந்தப் பள்ளியில் ஒன்றரை ஆண்டுக் காலம் தான் பணிபுரிந்தேன். அப்போது நான் பணியில் சேர்ந்து ஒரு வார காலம் இருக்கும். ஆறாம் படிவம் (VI Form) பயிலும் மாணவன் ஒருவனுக்கும் தொழிற்கல்வி ஆசிரியர் ஒருவருக்கும் வாக்குவாதம் ஏற்பட்டு அது கடைசியில் கை கலப்பில் முடிந்தது. இதைக் கண்ணுற்ற நான் அதிர்ச்சி அடைந்தேன். அந்த மாணவன் ஆசிரியரின் சட்டையைப் பிடித்து இழுத்து கீழே தள்ளிவிட்டான். அந்த மாணவன் பெயரையும் அந்த ஆசிரியர் பெயரையும் நான் சொல்ல விரும்பவில்லை. அப்போது தொழிற் கல்விப் பிரிவு, 5ம் படிவத்திலும் 6-ம் படிவத்திலும் பொறியியல் பிரிவு இருந்தது. அந்த மாதிரி தொழில் கல்விப் பிரிவு மாவட்டத்திலேயே ஒரு சில பள்ளிகளில்தான் இருந்தது. அதில் இப்பள்ளியும் ஒன்று. தொழில் கல்விப் பிரிவுக்கு நான் பொறியியல் அறிவியல் (Engineering Science) ஆசிரியனாக இருந்தேன். அந்த ஆசிரியர் கீழே விழுந்ததில் காலில் அடிபட்டு ஒரு மாதம் கட்டுப்போட வேண்டியதாகிவிட்டது. அந்த மாணவன் மீது தலைமை ஆசிரியர் கடுமையாக நடவடிக்கை எடுத்துப் பள்ளியை விட்டே நீக்கி விட்டார். நான் இந்த நிகழ்ச்சியைக் கண்டு அசந்துபோனேன். அப்போதெல்லாம் சேலம் நகராட்சிப் பள்ளி மாணவர்கள் என்றாலே ஒரு விதமாகப் பொதுமக்கள் பார்ப்பார்கள். மாணவர்களைக் கண்டு ஆசிரியர்கள் பயந்து கொண்டு இருந்தது, என் நினைவுக்கு வருகிறது. ஆனால், தலைமை ஆசிரியருக்கும் ஒருசில ஆசிரியர்களுக்கும் பயந்து கொண்டு மரியாதையாக நடந்து கொள்ளுவார்கள். அப்படிப்பட்ட ஆசிரியர்களில் நானும் ஒருவன்.

ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும்

என்ற குறள் நெறியைப் பின்பற்றி மாணவர்கள் ஒழுக்கமாக இருக்க வேண்டும்; ஆசிரியர்களும் ஒழுக்கமாகவும், கடமை உணர்ச்சியுடன் இருக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு உள்ள தலைமை ஆசிரியர் இருக்கும் காலத்தில் மாணவர்கள் இப்படி நடந்து கொள்கிறார்களே என்று அப்போதே என் மனம் வேதனைப்பட்டது. தற்போது

தாழ்வில்லை உயர்வில்லை சமமென்ற நிலைவந்தால்
வாழ்வெல்லை காண்போமடி சகியே வாழ்வெல்லை காண்போமடி — புரட்சிக் கவிஞர்

தலைமை ஆசிரியராக இருக்கும் புலவர் பி.அண்ணாமலை, எம்.ஏ.,பி.எட்., மாண வர்களை ஒழுக்கமாகவும், பொறுப்புணர்ச்சி உடையவர்களாகவும் கட்டுப்படுத்தி வைத்தி ருக்கிறார் என்று அறிந்து மகிழ்ச்சி அடைகி றேன். இன்னொரு நிகழ்ச்சியைப் பற்றியும் சொல்ல விரும்புகிறேன். நான் 4ம் படிவத்திற் கும் அறிவியல் ஆசிரியனாக இருந்தேன். அப்போது நான் பாடம் நடத்திக் கொண்டு இருக்கும்போது ஒரு மாணவன் புத்தகத்தை விரித்து வைத்துக் கொண்டு அதை வாயின் அருகே கொண்டு போய் முத்தம் கொடுக்கும் படி செய்து கொண்டிருந்தான். உடனே அந்த மாணவன் அருகே சென்று அந்தப் புத்தகத் தைப் பிடுங்கி பார்த்தபோது அந்தப் புத்தகத் தின் உள்ளே ஒரு பிரபல சினிமா நடிகையின் படம் இருந்தது. மற்ற மாணவர்களுக்கெல் லாம் தெரியாத வகையில் கண்டித்து பேசா மல் விட்டுவிட்டேன். அதன் பிறகு ஆசிரியர் கள் அறைக்கு வந்து நடந்த நிகழ்ச்சியை எடுத்துரைத்தேன். அவர்கள் எல்லாம் அச் சம்பவத்தை அப்படியே விட்டுவிடுங்கள், தலைமை ஆசிரியரிடம் புகார் செய்யாதீர் கள். ஏன் என்றால் அவன் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுத்து அவனை டிஸ்மிஸ் செய்து விடுவார் என்று சொன்னதனால் அந்த மாணவனை எதுவும் செய்யாமல் விட்டுவிட்டேன்.

என்னுடன் அப்போது அறிவியல் ஆசி ரியராகப் பணியாற்றிய என் இனிய நண்பர் திரு.லட்சுமிநாராயணன் சேலம் மாவட்ட கல்வி அதிகாரியாகப் பதவி உயர்வு பெற்று பள்ளிக்கல்வி இணை இயக்குநராகிப் பிறகு ஓய்வு பெற்று தற்போது சேலத்திலேயே இருக்கிறார். இதற்கு முன்பு தலைமை ஆசிரி யராக இருந்த மானமிகு சோ. வீரசேகரி, எம்.ஏ.,எம்.எட்., என் நண்பர். என்னுடன் சேலம் நகராட்சிக் கல்லூரியில் இன்டர்மீடி யட் வகுப்பில் படித்தவர். அவரும் தீவிர பகுத்தறிவுவாதி. தந்தை பெரியார் அவர்க ளின் கொள்கைகளை முழுமையாக ஏற்றுக் கொண்டவர். தற்போது சேலத்தில் சிறந்த கவிஞர்களில் ஒருவரான மானமிகு முருகுசுந் தரம், எம்.ஏ.,பி.டி. அவர்களும், நான் இப்பள்ளியில் பணியாற்றும்போது தமிழாசிரி யராகப் பணிபுரிந்தவர். அப்போது அவ ருக்கு பெயர் சண்முகசுந்தரம். பிற்காலத்தில் தமிழின்பால் இருந்த பற்று காரணமாகத் தன் பெயரை மாற்றிக் கொண்டார். அவரும் ஒரு தீவிர பகுத்தறிவு வாதி, தந்தை பெரியாரின் கொள்கையைப் பின்பற்றி வருபவர்.

1959 அக்டோபர் மாதத்தில் என் தந்தை யார் திடீரென இறந்துவிடவே நான் ஆசிரி யர் பதவியை ராஜினாமா செய்துவிட்டு ஜவுளி வியாபாரத்திற்கே வந்துவிட்டேன். நானும் என் தந்தையாரைப் போலவே தீவிர பகுத்தறிவு வாதி. தந்தை பெரியாரின் கொள் கைகளை முழுமையாக ஏற்றுக்கொண்டு இன் றுவரை வாழ்ந்து வருபவன். சேலத்தில் என் முயற்சியாலும் காலஞ்சென்ற தாதம்பட்டி குப்புசாமி (N.G.G.O சங்கத்தின் முன்னாள் தலைவர்) முயற்சியாலும்தான் 1970ல் பகுத் தறிவாளர் கழகம் ஏற்படுத்தப்பட்டது. அப் போது இப்பள்ளியின் தலைமை ஆசிரியராக இருந்தவர் சுயமரியாதைச் சுடரொளி எஸ். தீனதயாளு, பி.ஏ.,பி.டி. அவர் என்.சி.சி. ஆசிரியராகவும் இருந்தவர். அவர் தீவிர பகுத்தறிவு வாதி. தந்தை பெரியார் கொள் கையை முழுமையாக ஏற்றுக்கொண்டு நடை முறையில் வாழ்ந்து காட்டியவர். அப்படிப் பட்ட சோ. தீனதயாளு அவர்களைத் தலைவ ராகவும், சேலம் மாவட்ட பகுத்தறிவாளர் கழகத்துக்கு தாதம்பட்டி குப்புசாமி அவர் களை செயலாளராகவும் தற்போது இப்பள்ளி யின் தலைமை ஆசிரியராக இருக்கும் புலவர் பி.அண்ணாமலை அவர்களைத் துணைச் செயலாளராகவும் தேர்ந்தெடுத்தோம். நான் பொருளாளராக இருந்து தொண்டாற்றினேன். 1970ம் ஆண்டு டிசம்பர் மாதம் 2 ஆம் தேதி தந்தை பெரியார் வந்திருந்து இப்பள்ளி

மனிதரில் நீயுமோர் மனிதன்! மண்ணன்று
இமைதிற எழுந்து நன்றாய் எண்ணுவாய்! — புரட்சிக் கவிஞர்

யின் அரங்கில்தான் துவக்கி வைத்தார்கள். அவ்விழாவிற்குத் தந்தை பெரியார் அவர்கள் வந்திருந்தபோது சேலத்தில் மூடநம்பிக்கை ஒழிப்பு மாநாடு நடத்துவது என்று முடிவு செய்யப்பட்டது. 1971 ஆம் ஆண்டு ஜனவரி 23, 24 தேதிகளில் நடந்த மூடநம்பிக்கை ஒழிப்பு மாநாடு இந்தியாவையே ஒரு கலக்கு கலக்கி விட்டது. அந்த மாநாட்டின் வரவேற்புக் கமிட்டியின் தலைவராகப் பேராசிரியர் தி.வை.சொக்கப்பா, எம்.ஏ.,எல்.டி. இருந்தார். நான் துணைத்தலைவராக பொறுப்பேற்று மாநாடு சிறப்பாக நடக்கப் பெரிதும் பாடுபட்டேன். 1971 செப்டம்பர் மாதம் தந்தை பெரியார் அவர்களுக்கு அப்போது முதலமைச்சராக இருந்த டாக்டர் கலைஞர் மு.கருணாநிதி தலைமையில் வெள்ளி சிம்மாசனம் ஒன்று சேலம் பொதுமக்கள் சார்பில் பிறந்த நாள் பரிசாக அளிக்கப்பட்டது. அந்த விழாக் கமிட்டியின் செயலாளராகவும் பணியாற்றினேன்.

திராவிடர் கழகத்திற்கு ஒரு சிறந்த பேச்சாளியை நமக்கு அளித்த குடும்பம் புலவர் அண்ணாமலை அவர்கள் குடும்பம். அவர் தற்போது திராவிடர் கழக முன்னணி பேச்சாளர்களில் ஒருவராக விளங்கும் வழக்குரைஞர் அருள்மொழி, பி.ஏ.,பி.எல். ஆவார். சிறந்த பகுத்தறிவுவாதிகளும், தமிழ் பற்று மிகுந்தவர்களும் பணியாற்றிய பள்ளி தான் இந்தப் பள்ளி என்பது என் போன்ற பெரியார் தொண்டர்களுக்கு மிக்க மகிழ்ச்சியும் பெருமையும் தரும் செய்தியாகும்.

இந்தப் பள்ளியில் தற்போது பணிபுரியும் ஆசிரியப் பெருமக்களை நான் வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்வதெல்லாம் மாணவர்களைப் பகுத்தறிவு வாதிகளாக ஆக்குங்கள், சுயசிந்தனையாளர்களாக ஆக்குங்கள். இந்தப் பள்ளிக்குப் பெருமை தேடித் தாருங்கள் என்பதுதான்.

வாழ்க! வளர்க இப்பள்ளி!!

அறிவுப் பயிர்

நறுமணம் வீசும் நகரவைப் பள்ளியே!
உறுபுகழ் பெற்ற மாங்கனி நகரில்
கலைமகள் பணியில் கலங்கரை விளக்காய்
மலைசூழ் உலகில் மறையாப் புகழுடன்
ஆண்டுகள் நூறைத் தாண்டியே நடந்தாய்...!
ஆசிரியர் தலைமையில் அயரா உழைப்பால்
வண்டுகள் சூழும் வண்ண மாமலர் போல்
பண்புள்ள மாணவர் பயிலும் பள்ளியாய் - பின்
ஆல் போல் விளங்கும் அறிவுப் பயிரானாய்!
ஏழை மக்களின் அறிவுப் பசிக்கு உணவானாய்
அமைந்த புகழ் பரப்பி அறிவுப் பயிர் வளர்க்க
அனைவரும் முயன்று படிப்பது நன்றே!

— கோ. வெங்கட ***சீனிவாசன்***
10-ஆம் வகுப்பு 'ஆ'

தமிழகத்தில் கல்விக் கூடங்கள்

1993-94

மேல்நிலைப் பள்ளிகள்

அரசு	1731
அகில இந்தியப் பள்ளி	28
மெட்ரிக்	373
சென்ட்ரல் போர்டு	89
மொத்தம்	2221

உயர்நிலைப் பள்ளிகள்

அரசு	2412
அகில இந்திய பள்ளிகள்	13
மெட்ரிக்	759
சென்ட்ரல் போர்டு	86
மொத்தம்	3760

எக்குறையும் தீர்ந்துவிடும், வறுமைபோகும்
எந்நலமும் பெற்றிடுவோம் அனைவருக்கும்
சக்கரைப் பந்தலிலே தேன் மாரி பெய்யும்
சாதிவெறி சமயவெறிதலை கவிழ்ந்தால் — புரட்சிக்கவிஞர்

வெளிச்சம் தேடும் விழிகள்

மு. அழகரசன், 12-ஆம் பனிரெண்டாம் வகுப்பு முதல் தொகுதி (தமிழ் வழி)

முகவுரை

மேதினியில் பல நாட்டவர் பல மொழிகள் பேசினாலும், சில மொழிகள் மட்டுமே நெடுங்காலத் தொன்மையினையும், சிறப்பையும், பெற்றுவிளங்கும். அவற்றுள் நம் அன்னை மொழியாகிய செந்தமிழும் ஒன்று. நாம் பிறந்தது முதல் நம் நாவை அசைத்துப் பேசும் முதன் மொழியாக விளங்குவது தாய் மொழியாகிய தமிழ் மொழியே ஆகும் என்பதை

''நண்ணு மிளமைப் பருவத்திலே முதல்
நாவை யசைத்த மொழி - எங்கள் தமிழ் மொழி''

என வரத நஞ்சையப் பிள்ளை தம் மொழி வாழ்த்தின் மூலம் மிக வனப்புடன் எடுத்துரைக்கிறார். மேலும்,

''தமிழுக்கு அமுதென்று பேர்! - அந்தத்
தமிழ் இன்பத்தமிழ் எங்கள் உயிருக்கு நேர்!''

என்னும் பாடல் வரிகளின் மூலம் தமிழின் மேல் உள்ள பரந்த பற்றைப் புரட்சிக்கவிஞர் எடுத்துரைக்கிறார்.

''யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழிபோல்
இனிதாவதெங்கும் காணோம்''

என முண்டாசுக்கவி பாரதியும் நம் மொழியை எழில்பட வருணித்துச் சிறப்பிக்கிறார்.

பழமையில் தமிழ்

''கல்தோன்றி மண் தோன்றாக் காலத்தே முன்
தோன்றி மூத்த மொழி தமிழ்மொழி''

என்னும் இவ்வடிகளின் மூலம் தமிழின் தொன்மையினை அறியலாம்.

''என்றுமுள தென் தமிழ் இயம்பி இசை
கொண்டான்''

என்று அகத்தியரைக் கவிச்சக்ரவர்த்தி கம்பர் சிறப்பிப்பதன் மூலம் தமிழின் தொன்மையினையும், பெருமையினையும் அறியலாம். தமிழின் இலக்கண நூலான நன்னூல், எட்டுத்தொகை நூல்களான நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, பரிபாடல், கலித்தொகை, அகநானூறு, புறநானூறு, ஐம்பெருங்காப்பியங்களான, சிலப்பதிகாரம்; மணிமேகலை, சீவகசிந்தாமணி, வளையாபதி, குண்டலகேசி, கவிச்சக்ரவர்த்தியின் கம்பராமாயணம் போன்ற தொன்மையும், பழமையும் வாய்ந்த நூல்கள் தமிழில் தோன்றித் தமிழின் பெருமையை உலக அரங்கில் இன்றும் பறைசாற்றிக் கொண்டிருக்கின்றன என்பதில் ஐயம் ஏதும் இல்லை.

முப்பாநூல்

தமிழின் பெருமையைத் தரணியிலுள்ள நாடுகள் அனைத்திற்கும் தெரியப்படுத்திய பெருமை ஒரு தமிழ் ஏட்டிற்கு உண்டு எனில் அது நம் திருக்குறளையே சாரும் என்றால் மிகையாகாது. ஏனெனில் ஞாலத்திலுள்ள அனைத்து மொழியினரும் தமிழ் மறையான திருக்குறளில் உள்ள கருத்துக்களை ஏற்றுக் கொள்ளத்தக்க வகையில் அந்நூலின் பாடற் கருத்துக்கள் அமைந்துள்ளன.

''அணுவைத் துளைத்தேழ் கடலைப் புகட்டிக்
குறுகத்தறித்த குறள்''

என்று ஔவைபிராட்டியும்,

மனிதரில் நீயுமோர் மனிதன்! மண்ணன்று
இமைதிற எழுந்து நன்றாய் எண்ணுவாய்! — புரட்சிக் கவிஞர்

''கடுகைத்துளைத்தேழ் கடலைப் புகட்டிக்
குறுகத் தறித்த குறள்''

என்று இடைக்காடனாரும் பாராட்டுவதன் மூலம் வாயுறை வாழ்த்தான திருக்குறளின் பெருமையினை அறியலாம்.

புரட்சிக்கவியும், புதுமைக் கவிஞனும்

உலோகங்களில் தங்கத்தைவிட பிளாட்டினம் விலை உயர்ந்தது. சிலர் ராஜாக்களுக்கெல்லாம் ராஜாவாக விளங்குவது போல - தங்கம் பிளாட்டினத்தைவிட பிரபலமாயிருப்பதைப் போல - கணனி நூற்றாண்டின் (இருபதாம் நூற்றாண்டின்) முற்பகுதியில் எத்தனையோ கவிஞர்கள் வாழ்ந்திருந்தாலும் பாரதியும், பாரதிதாசனும் தங்கமாகத் திகழ்கிறார்கள். பாரதி

''சொல்லில் உயர்வு தமிழ்ச் சொல்லே - அதைத்
தொழுது படித்திடடி பாப்பா''

என்றும்

''தேமதுரத் தமிழோசை உலகமெலாம்
பரவும் வகை செய்தல் வேண்டும்''

என்றும், பேரவா கொள்வதன் மூலம் தமிழின் மேல் உள்ள மிகுந்த பற்றை வெளிப்படுத்தி, தமிழை வளர்க்க வேண்டும் என்றும் கூறுகிறார்.

''எளிய நடையில் தமிழ் நூல்கள் எழுதிடவும் வேண்டும்
இலக்கண நூல் புதிதாக இயற்றுதலும் வேண்டும்
வெளியுலகில் சிந்தனையில் புதிது புதிதாக
விளைந்துள்ள எவற்றினுக்கும் பெயர்கெல்லாங் கண்டு
தெளிவுறுத்தும் படங்களொடு சுவடியெல்லாம் செய்து
செந்தமிழைச் செழுந்தமிழாய்ச் செய்வதும் வேண்டும்''

எனப் பாவேந்தர் மெய்மறந்து பாடுவதன் மூலம் நம் தமிழில் எளிய நடை உடைய புதிய புதிய நூல்கள் தோன்றிடச் செய்ய வேண்டும், இலக்கண நூல் ஒன்று புதிதாகத் தமிழுக்கு இயற்ற வேண்டும் என்று கூறிய அவரது அவாவை நாம் பூர்த்தி செய்து தமிழின் பெருமையினையும், சிறப்பினையும் பாருக்கு எடுத்துரைக்க வேண்டும்.

பகுத்தறிவுப் பகலவன்

பகுத்தறிவு பகலவன் தந்தை பெரியார் கூறுகையில் ''நான் ஒரு தமிழனாகவும், திராவிடனாகவும் பிறந்ததில் பெருமகிழ்வு கொள்கிறேன். எனக்கு இவ்வுலகில் மீண்டும் ஒரு பிறப்பு என்பது உண்டெனில் இத்தமிழ் நாட்டில் தமிழனாகவும், திராவிடனாகவும் பிறக்கவே ஆசைப்படுகிறேன். ஏனெனில் தமிழ் மொழியில் தான் மிகப் பழமை வாய்ந்த சிறப்பு மிக்க நூல்களும், உலகப் பொதுமறையான திருக்குறளும் தமிழில்தான் தோன்றியது'' எனவும் குறிப்பிடுகிறார். இவ்வமயம்,

''தமிழன் என்று சொல்லடா
தலை நிமிர்ந்து நில்லடா''

என்று எங்கோ ஒரு தமிழ்க்கவிஞன் கூறியது நம் நினைவிற்குத் தோன்றுகிறது.

இன்றைய நிலையில் தமிழ்

இவ்வாறெல்லாம் சிறப்பும், தொன்மையும், எழிலும் மிக்க நம் தாய் மொழியாகிய தமிழ் மொழி இப்பொழுது நம்மை விட்டு, சிறிது சிறிதாக விலகிச் சென்று கொண்டேயிருக்கிறது. அது முழுமையாக நம்மிட மிருந்து விலகிச் செல்வதற்கு முன் அதனை நாம் நம் பக்கம் கவர்ந்திழுத்துக் கொள்ள வேண்டும். கவர்ந்திழுத்துக் கொண்டால் மட்டும் போதாது, அதனை இனிவரும் இளைய

இந்த உலகில் எண்ணிலா மதங்கள்
கந்தக வீட்டின் கனவின் கொள்ளிகள். — புரட்சிக் கவிஞர்

தலைமுறையினர் முறைப்படி கற்றுத் தெளிந்து இதனின் தொன்மையினையும், பழமையினையும் உணர்ந்து அதற்குப் பெருமைச் சேர்க்கவும் வேண்டும். இது ஒவ்வொரு தமிழனுக்கும் உள்ள சொந்தக் கடமைகளில் ஒன்றாகும்.

தமிழ் தனி மொழியே!

இன்றைக்கு ஒரு நூற்றாண்டுக்கு முன்னர், சென்னைக்கு அருகில் உள்ள திருமணம் என்னும் சிற்றூரில் பிறந்தவர் செல்வகேசவராயர். அவர் காலத்தில் தமிழ்மொழி வடமொழி வழி பிறந்ததென்றும், கடவுள் அருளிய மொழி என்றும் கூறுவதிலே பலரும் பெருமை கொண்டனர். அதன் குற்றத்தையும் குறையையும் உணர்ந்தாரில்லை. அவர்கள் இவ்வாறு கொள்ளுவதற்கு எடுத்துக்காட்டிய பாடல்கள் பல. அவற்றை ஐயுதற்கும் அஞ்சினர் புலவர். ஆனால், செல்வகேசவராயர் அந்த அச்சத்தை விலக்கித் தாம் கண்ட உண்மையைத் துணிவுடன் உரைக்க முற்பட்டார். அவ்வாறு அவர் எழுதியது இது.

''தமிழ்தான் ஆரியத்தின் வழிவந்ததன்றித் தன்னில் தானாயதோர் தனிமொழி அன்று என்று ஒருசார் புலவர்கள் தமிழ் நூல்களின் மேல் சான்று காட்டுவர். அன்றியும், தமிழ் நூற்கு அளவில்லை. அவற்றுள் ஒன்றேயாயினுந் தனித்தமிழ் உண்டோ? அன்றியும், ஐந்தெழுத்தால் ஒரு பாடை உண்டென்று அறையவே நாணுவர் அறிவுடையோரே'' என்ற இலக்கணக் கொத்தைக் காட்டினால், அலக்கண் உறுவேன்.

''தழற்புரை சுடர்க் கடவுள் தந்த தமிழ் தந்தான்''

என்று அகத்தியனாரைக் கூறும் இராமாயண அடியை ஓத எனக்கு நா எழுவதில்லை.

என்று செல்வகேசவராயர் கூறுவதின் வாயிலாகத் தமிழ்மொழி வடமொழியிலிருந்து பிறக்கவில்லை என்பதனையும், சிவபெருமான் அகத்தியருக்கு ஓதி அதன் மூலம் செந்தமிழ் தமிழ் நாட்டில் பரவியது என்பதனையும் முற்றிலும் வெறுத்து ஒதுக்குவதிலிருந்து தமிழ் ஒரு தனிமொழியே என்பதும் அது யாரிடமிருந்தும் யாசகம் பெற்று வளர்ந்தது அல்ல என்பதும் தெளிவுறப் புலனாகிறது.

''கண்ணுதற்பெருங் கடவுள் கழகமோடமர்ந்து
பண்ணுறத் தெரிந்து ஆய்ந்தவிப் பசுந்தமிழ் ஏனை
மண்ணிடைச்சில விலக்கண வரம்பிலா மொழிபோல்
எண்ணிடைப்படக் கிடந்தா எண்ணவும் படுமோ!''

''தொண்டர் நாதனைத் தூதிடை விடுத்தும் முதலை
உண்ட பாலனை யழைத்தும் எலும்புபெண் ணுருவாக்
கண்டதும்மறைக் கதவினைத் திறந்ததுங் கன்னித்
தண்டமிழ்ச்சொலோ மறுபுலச் சொற்களோ சாற்றீர்''

என்ற திருவிளையாடலைப் படிப்பதுதான எனக்குப் பெருவிளையாடல்! (ஒருவாறு தமிழினைப் பெருமைப்படுத்தியுரைப்பதால் இதனைப் படிப்பதிலே அவர் மகிழ்ந்துள்ளார் போலும்!) 'செந்திறத்த தமிழோசை வடசொல்லாக்கி' என்பது ஒன்றுமே எனக்குப் பேரானந்தத்தை விளைவிப்பது?'' - இவ்வாறு தமிழின் பெருமைக்கு ஒவ்வாத எந்தக் கருத்தையும் செல்வகேசவராயர் ஏற்க மறுத்துப் புராணக் கருத்தைப் பொய்யாக்கினார்.

மேலும் அவர் தனித்தமிழ் நூலாக 'தகடூர் யாத்திரை - சிலப்பதிகாரம் முதலியன உரைநடையிட்ட பாட்டுடைச் செய்யுட்களாகத் தமிழிலேயே மலர்ந்தவை. உரைநடை

சினம் அவா சாதி மதம் புலைநாறும் யாகம்
தீர்ப்பதே இந்நாளில் நல்லறம் ஆகும்! — புரட்சிக் கவிஞர்

யும் தமிழர்கள் அறியாததொன்றன்று' என வும், 'பத்துப் பாட்டெனும் பாட்டுகள் பத்தும் தமிழ்நாட்டின் ஐந்திணை வளங்களையும், குடிகளின் நிலைமைகளையும், அற்றை நாள் அரசர் பெருமைகளையும் பலவற்றையுங் கூறும் நற்றிணை நானூறு முதலிய எட்டுத் தொகையும், தமிழுக்கே உரிய அகப்பொருள் களைப் பல வகையான் விரித்தியம்புகின் றன. ஆசாரக் கோவை ஒழிந்த ஏனைக் கீழ்கணக்கெல்லாம் அகப் புறப்பொருளான உலகியனெறியும் வீட்டு நெறியும் கூறும் தமிழ் இலக்கியங்களாம். கல்லாடம் தமி ழுக்கே உரியது. முத்தொள்ளாயிரம் என்ப தும் தமிழரசனைப் புனைந்துரைத்த நூலே. கலிங்கத்துப்பரணி, மூவருலா, மடல் முதலி யன தமிழே. ஆத்திசூடி முதலியன தமிழுக் கான இலக்கியங்களே. மருத்துவ நூல்கள் பலவும் மொழி பெயர்ப்பு ஆவனவல்ல' எனவும் சமயத்துறை இலக்கியங்களான நாலாயிரத் திவ்யப் பிரபந்தமும், சைவத் திருமுறைகள் பன்னிரண்டும் வடமொழியி னின்றும் மொழிபெயர்க்கப் பெற்றனவென்று கூறுவதற்குச் சான்றுண்டா?' எனவும் அறி வித்துத் தமிழின் முதன்மையை நிலைநிறுத்தி யுள்ளார்.

கூடா நட்பு

''மனத்தின் அமையா தவரை எனைத் தொன்றும்
சொல்லினால் தேறற்பாற்று அன்று''

மனத்தினால் நட்பு கொள்ளாதாரை எந்த ஒரு செயலிலும் அவரது சொல்லைக் கொண்டு நம்புதல் கூடாது என்று குறள் கூறுவதிலி ருந்து தமிழோடு நட்புகொள்ளவே முடியாத பிறமொழிச் சொற்களை நாம் கலந்துவிட்டு விட்டால் அது நம் தமிழையே அழித்துவி டும. இது கூடாத நட்பாகும். அப்பொழுது தான் தமிழின் சுவை குன்றாது இருக்கும்.

இறுதியுரை

''இனிய உளவாக இன்னாத கூறல்
கனியிருப்பக் காய்கவர்ந் தற்று''

என்ற வள்ளுவனின், இனிய சொற்கள் இருக்கும்போது இனிமையில்லாத கடுஞ் சொற்களை கூறுதல் தன்னிடம் உள்ள கனியை உண்ணாது இனிமையில்லாத காயை உண்பது போலாகும் என்ற கூற்றைப் போல நம் தமிழர்கள் இப்பொழுது இனிமையை (தமிழுக்கு 'இனிமை' என்ற வேறு பெயரும் உண்டு) விட்டுவிட்டு இந்தி, ஆங்கிலம் போன்ற பிற மொழிகளைக் கற்க விரும்புகின் றனர். அனைத்து மொழிகளும் கற்றல் நமக்கு பயனே, இருப்பினும் நம் தமிழை நன்கு ணர்ந்து பிறகு இவ்வினையானது இனிமை யான கனி (செந்தமிழ்) இருக்க இனிமையில் லாத (மற்ற மொழிகள்) காயை உண்பதற்குச் சமமாகும். அதுமட்டுமங்கில் 'கண்ணிருந் தும் குருடனாவதற்குச் சமமாகும்' நம் விழி கள் எப்போதும் வெளிச்சத்தைத் (செந்தமிழ் பற்றிய சிந்தனையில்) தேடும் விழிகளாக இருக்க வேண்டும். அப்பொழுதுதான் நம் தமிழ் மொழியின் சிறப்பு தரணியெங்கும் பரவினால்தான் அதன் வனப்பும், சிறப்பும் தெரியும்.

வாழ்வதிலும் நலம்சூழ்வதிலும் புவி மக்களெல்லாம் ஒப்புடையார்
ஏழ்மையில் மக்களைத் தள்ளுவதோ?
இதை இன்பமெனச் சிலர் கொள்ளுவதோ?

— பாரதிதாசன்

விளையாட்டுத் திடலில் ஒரு திருவிளையாடல்

உடம்பார் அழியில் உயிரார் அழிவர்
திடம்பட மெய்ஞ்ஞானம் நண்ணவும் மாட்டார்
உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே
உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே!

நல்ல உடலில்தான் நல்ல உயிர் இருக்கும். நல்ல உயிரில்தான் நல்ல சிந்தனை, நல்ல எண்ணம் பிறக்கும். நலிந்த உடலில் இருக்கும் உயிர் விரைந்து அழிந்துபோகும். நல்ல அறிவும் வளராது என்கிறார் திருமூலர்.

நல்ல உடலை இளமை முதலே உருவாக்க வேண்டும். ஒரு நாட்டின் செல்வம் அந்த நாட்டின் குழந்தைகள். நல்ல ஒழுக்கமுள்ள சமுதாயமாக அவர்களை உருவாக்குவதற்கு வேண்டிய பயிற்சிகள் பள்ளிகளில் அவர்களுக்குக் கொடுக்கப்படுகிறது. பொதுக்கல்வி அகத்தையும் உடற்கல்வி உடல் வளர்ச்சியையும் கட்டுப்பாடு, ஒழுக்கம் மனத்திடம் ஆகியவற்றையும் செம்மைப் படுத்துகின்றன.

சுருங்கக் கூறின், பள்ளி விளையாட்டுத் திடல் எந்த அளவுக்குப் பயன்படுத்தப்படுகிறதோ அந்த அளவுக்கு நல்ல சமுதாயத்தை ஒரு நாடு உருவாக்க முடியும். இந்த நோக்கத்தில்தான் பள்ளிகளுக்கு 5 ஏக்கர் விளையாட்டுத் திடல் இருக்க வேண்டும் என்ற திட்டத்தினைக் கல்வித்துறை செயல்படுத்துகிறது.

போதிய கட்டிடங்களோ, விளையாட்டுத் திடலோ இல்லாத பள்ளிக்கூடங்களுக்கு அவைகளை அமைத்துக் கொடுப்பது பெற்றோர் ஆசிரியர் கழகத்தின் கடமை என்று அரசு கூறுகிறது.

அத்துடன் கல்வி நிறுவனங்களுக்குச் சொந்தமான நிலங்களைக் கையகப்படுத்துவோரை வெளியேற்றச் சட்டமியற்ற இது போன்ற நிகழ்வுகளைத் தலைமை ஆசிரியர்கள் விரிவான அறிக்கை மூலம் அரசுக்கு அனுப்புமாறு அரசு 4.10.91-ல் அறிவித்துள்ளது.

இப்பள்ளிக்கு 2.13 ஏக்கர் விளையாட்டுத் திடல் சகாதேவபுரம் பகுதியில் வார்டு பி, பிளாக் எண்.19, டி.எஸ்.எண்.53, பழைய டி.எஸ்.எண்.1174/எ, ஏரியா 3, 39163/0-90 விளையாட்டுத்திடல் உள்ளது என நகராட்சியே அரசுக்கு எழுத்து மூலம் தெரிவித்துள்ளது.

இத்திடலின் வட பகுதி ஓரத்தில் மாணவர் புத்துணர்வுக் கலை மன்றம் ஒன்று உள் விளையாட்டு அரங்கமாக மத்திய அரசு நிதி உதவியுடன் 1960-ல் கட்டப்பட்டு கல்வி வள்ளல் காமராசர் அவர்களால் மாணவர்களுக்கெனத் திறந்து வைக்கப்பட்டது.

இத்திடலில் சேலம் நகராட்சி 1990-ல் தொங்கு தோட்டம் என்ற பெயரில் ஒரு கல்யாண மண்டபத்தைக் கட்டி, மத்திய அரசு கட்டித் தந்த மாணவர் புத்துணர்வுக் கலை மன்றத்தை அதற்கு உணவுக்கூடமாக மாற்றி 22.2.91 அன்று அதற்குத் திறப்பு விழாவும் நடத்தியது.

கடைக்கால் போட்டவுடன் அதை எதிர்த்து பள்ளி விளையாட்டுத் திடலில் கல்யாண மண்டபம் கட்ட வேண்டாம் என்று நகராட்சித் தலைவரிடமும், ஆணையாளரிடமும் முறையிட்டும் பயன் இல்லாததால் உயர்நீதிமன்றத்தல் வழக்குப் போடப்பட்டது. பயன் கைமேல் கிடைத்தது. பெற்றோர் ஆசிரியர் கழகத்தின் தலைவர் வீட்டுக் குடிநீர் குழாய் சேலம் நகராட்சியால் துண்டிக்கப் பட்டது. மேலிடங்களுக்கு இதுபற்றி முறையீடு செய்தும் யாரும் ஒன்றும் கண்டு கொள்ளவே இல்லை. இருந்தாலும் தொடர்ந்து பெற்றோர் ஆசிரியர் கழகம் என் கடன் பணி செய்து கிடப்பதே என்று பணியாற்றி வருகிறது.

அறிவு வளர வளரத் தருமம் அரோகரா - ஒழுக்கம் அரோகரா! — புரட்சிக் கவிஞர்

கல்வி வளர்ச்சி பெறாத நாட்டின் காவலர்களின் களியாட்டங்களுக்குப் பள்ளிகள் பல பலியாகி வரும் காலமிது. இன்று பெரும்பாலான பள்ளிகள் சமூக விரோதிகளுக்குச் சத்திரங்களாகப் பயன்பட்டு வருகின்றன.

திருமணம் ஒரு கிரிமினல் குற்றமாக்கப்பட வேண்டும் என்று சொன்ன தலைவர்களின் வழிவந்தவர்கள் பள்ளிக் கூடத்திடலையே பலி தந்து அதற்கு எதிர்மாறாக நடக்கும் விந்தை சேலத்தின் வரலாற்றில் படிந்த ஒரு கரும்புள்ளியாகும். புதிதாகப் பள்ளிகள் பல தொடங்கப்பட்டு வரும் மாநகரில், வீட்டுக்கு வீடு கல்வி வரி வாங்கிக் கொள்ளும் நகராட்சி கல்விக்கு எதிரான வழியில் செயல்பட்டு நன்கு இயங்கி வந்த இரண்டு பெரிய நடுநிலைப் பள்ளிகளை 5 நட்சத்திர ஓட்டல்கள் கட்டத் தாரை வார்த்துள்ளது. ஓர் உயர்நிலைப் பள்ளியை மூடியது. பல பள்ளிகள் கவனிக்காமையால் மூடும் நிலைக்குப் போயுள்ளன. நகராட்சியால் நகரில் கட்டப்பட்டுள்ள பல கல்யாண மண்டபங்களின் நிலையும் இதுதான். சமூக விரோதச் செயல்களுக்கெனவே அவை உள்ளன.

இந்நிலையில் இப்பள்ளியின் விளையாட்டுத் திடலும், மத்திய அரசு தந்த மாணவர் புத்துணர்வுக் கலைக் கூடமும் அத்தகைய செயலுக்கு இரையாக்கப்பட்டுள்ள செயல் இந்த நூற்றாண்டின் அவமானச் செயல்களில் தலையாய ஒன்று. அச்செயல் நிறைவேறிய நிலைகளைப் பத்திரிகைகள் வெளியிட்டுள்ளன. அவை வருமாறு:

தினமணி கோவை திங்கள் கிழமை பிப்ரவரி 25, 1991 பக்கம் 3 சேலத்தில் தொங்கும் தோட்டம் வேகமாக உருவாகிவருகிறது

தமிழகத்தில் முதன்முறையாக அமைக்கப்படும் தொங்கும் தோட்டம் சேலம் நகரில் வேகமாக உருவாகிவருகிறது

அனைத்து நகராட்சிகளின் பதவிக்காலமும் அடுத்த மாதம் முதல் வாரத்தில் முடிவடைவதால் அதற்கு முன்னதாகவே இதன் துவக்கவிழாவை நடத்திவிடவேண்டும் என்று சேலம் நகராட்சித் தலைவரும் உறுப்பினர்களும் விரும்பியுள்ளனர்.

எனவே, இதன் பணிகள் எல்லாம் முழுமையாகப் பூர்த்தியடையா விட்டாலும் இதன் முறைப்படியான துவக்கவிழா வெள்ளியன்று நடத்தப்பட்டது.

இதன் மையப்பகுதியில் அமைக்கப்படும் அரங்கின் பணிகள் முடிவடைந்துவிட்டன. தொங்கும் தோட்டத்தைத் துவக்கி வைத்துப் பேசிய மாவட்ட ஆட்சித் தலைவர் சுர்ஜித் கே. சௌத்ரி, ராமகிருஷ்ணா சாலையில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சி கார்ப்பரேஷன் ஹோட்டல் கட்ட இடம் ஒதுக்கித் தந்ததற்காக சேலம் நகராட்சிக்கு நன்றி தெரிவித்தார். (பள்ளிக்கூடம்)

ஒருங்கிணைந்த நகர வளர்ச்சித் திட்டத்தின் கீழ் பூங்காக்களின் மேம்பாட்டுக்கும், **ராஜாஜி கலையரங்க மேம்பாட்டுக்கும்** 9 லட்சம் செலவிடப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டார். நகராட்சித் தலைவர் டாக்டர் ஜி. சூடாமணி நகரின் மையப்பகுதியில் ரூ. 9 லட்சம் செலவில் தொங்கும் தோட்டம் அமைக்கப்படுவதை ***அவர் நியாயப்படுத்தினார்.***

இந்த தோட்டத்தினாலும், இதிலுள்ள சமூக அரங்கினாலும் நகராட்சிக்கு ஆண்டுக்குக் குறைந்தது ரூ. 5 லட்சம் வருவாய் கிடைக்கும் என்று அவர் கூறினார். இந்தத் தோட்டம் அமைப்பதற்காகச் செலவிடப்பட்ட தொகையை இரண்டு ஆண்டுகளில் திரும்பப் பெற்றுவிடலாம் என்று அவர் உறுதியாகக் கூறினார்.

தினத்தந்தி சேலம் 24.2.91 பக்கம் 14
(தொங்கும் தோட்டத்தை சேலம் நகரசபைத் தலைவர் சூடாமணி திறந்துவைத்தபோது எடுத்தபடம். அருகில் கலெக்டர் சுர்சித் சவுத்திரி)

நமதே என்று பிறன் பொருள்கொண்டு
தாம் வாழ எண்ணினார் எங்குனார் பண்டு — புரட்சிக் கவிஞர்

சேலம் நகர மையத்தில் தமிழ்நாடு சுற்றுலா ஓட்டல் கலெக்டர் தகவல்

இப்போது சேலத்தில் தமிழ்நாடு சுற்றுலா ஓட்டல் ஒன்று கட்டப்பட உள்ளது. இதற்காக ராமகிருஷ்ணா ரோட்டில் சேலம் நகர சபை தேவையான நிலத்தை அளித்துள்ளது. (பள்ளிக் கூடம்) இன்னும் ஒரு மாதத்திற்குள் அதற்கு அடிக்கல் நாட்டப்படும். இந்தத் தகவலை கலெக்டர் சுர்ஜித் சவுத்ரி சேலம் நகரசபை சார்பில் அமைக்கப்பட்டுள்ள தொங்கும் பூங்கா மற்றும் கலைக்கூடத் திறப்பு விழாவில் தெரிவித்தார்.

இந்த தொங்கும் பூங்கா 9 லட்சம் ரூபாய் செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. மேலும் ராஜாஜி கலை மன்றமும் (மாணவர் புத்துணர்வுக் கலைமன்றம்) சீரமைக்கப்பட்டு மேம் படுத்தப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் சேலம் நகரசபையால் மட்டும்தான் தொங்கும் பூங்கா தொடங்கப்பட்டு உள்ளதைப் பாராட்டுகின்றேன்.

சேலம் நகரசபை தலைவர் சூடாமணி தொங்கும் பூங்கா மற்றும் கலைக்கூடத்தைத் திறந்து வைத்துப் பேசுகையில் இன்னும் 9 நாளுக்குள் பதவி முடியப்போகிறது என்று உறுப்பினர்கள் பேசினார்கள். 5 ஆண்டு காலத்தில் நகரசபை சார்பாக பல சாதனைகள் செய்யப்பட்டுள்ளன.

மாலை மலர் சேலம் 23.2.91 (தொங்கும் பூங்கா கலைக்கூடத்தை நகரசபைத் தலைவர் சூடாமணி திறந்துவைத்தார். அருகில் கலெக்டர் சுர்ஜித் சவுத்ரி

சேலத்தில் ரூ. 9 லட்சம் செலவில் தொங்கும் பூங்கா கலைக்கூடம் சூடாமணி திறந்துவைத்தார்

சேலம் முள்ளுவாடி கேட் அருகே நகரசபைப் பள்ளிக்கூட மைதானத்தில் சேலம் நகரசபைக் கூடம் கட்டப்பட்டுள்ளது. இதனைத் திருமண மண்டபமாகவும் பயன்படுத்திக்கொள்ளலாம். ஏற்கெனவே, அங்கிருந்த புத்துணர்வுக் கலைமன்றம் சாப்பிடும் ஹாலாக விரிவுபடுத்தப்பட்டுள்ளது. வெளியே செயற்கைமலை போன்ற அமைப்பும், நீர் ஊற்றுகளும், பூஞ்செடிகளும் அலங்கரித்து வைக்கப்பட்டுள்ளது. இதன் திறப்பு விழா நேற்று கலெக்டர் சுர்ஜித் சவுத்ரி தலைமையில் நடந்தது.

சேலம் நகரில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சி கழகம் சார்பில் தமிழ்நாடு ஓட்டல் கட்டப்பட உள்ளது. இதற்காக ராம கிருஷ்ணா ரோட்டில் உள்ள இடத்தை சேலம் நகரசபை வழங்கியுள்ளது (பள்ளிக்கூடம்). ஒரு மாதத்துக்குள் இதற்கு அடிக்கல் நாட்டப்படும். இவ்வாறு கலெக்டர் சுர்ஜித் சவுத்ரி பேசினார்.

ரூ. 5 லட்சம் வருமானம்: கலைக்கூடத்தைத் திறந்துவைத்து நகரசபைத் தலைவர் சூடாமணி பேசியதாவது: வெளிநாடுகளில் ரோடுகள் பூங்காக்கள் துப்புரவாக இருப்பதைப் பார்த்துவிட்டு நம் நாடும் எப்போது இப்படி மாறும் என்ற அங்கலாய்ப்புதான் இந்தக் கட்டடம். இந்தச் செலவை **இரண்டே ஆண்டில் திரும்ப அடைத்துவிட லாம்.** இந்தத் திருமண மண்டபம் **ரூ 8 ஆயிரத்துக்கு** வாடகைக்கு விடப்பட்டால் ஆண்டுக்கு சுமார் ரூ. 5 லட்சம் வரை நகர சபைக்கு வருமானம் கிடைக்கும். இந்த மண்டபத்துக்கு கருணாநிதி பெயர் வைக்கலாம் என்று நினைத்தோம். இப்போது உள்ள அரசு அதற்கு அனுமதிக்காது. என்றைக்காவது ஒரு நாள் அந்தப் பெயர் வைத்தே தீருவோம் என்றார் அவர். ஆணையாளர் அப்துல் ரஹீம் வரவேற்றார்.

இன்றே செயத்தக்க தொன்றே - தொண்டு செய்
இன்பத் தமிழ் நாட்டுக் கென்றே.
— புரட்சிக் கவிஞர்

பள்ளி இலக்கிய மன்றம்

செயலாளர் : புலவர் பெ.கோவிந்தராசுலு, எம்.ஏ.,பி.எட்.

சேலம் நகராட்சி ஆண்கள் மேனிலைப் பள்ளியில் நடைபெற்ற இலக்கிய மன்ற நிகழ்ச்சிகள்

இப்பள்ளியில் இரா.பி. சேதுப் பிள்ளை திரு.வி.க., அ. வரதநஞ்சையப் பிள்ளை போன்ற தமிழ்ச் சான்றோர்கள் பலர் மாண வர்களுக்கு தமிழுணர்வூட்ட, இலக்கிய மன் றத்தில் உரையாற்றியுள்ளனர். 16.9.1976 அன்று டாக்டர். திரு.ப.இராஜண்ணன் இயக் குநர், கொங்கு ஆய்வகம் அவர்கள் தலை மையில் ''தேசியக்கவி பாரதியாரின் நினைவு விழா'' நடைபெற்றது. திரு. கவிஞர் முருகு சுந்தரம் தலைமையில் தேசியக்கவியே என்ற தலைப்பில் (1) புலவர் ஏ.ப.தட்சணாமூர்த்தி (2) புலவர். கிருஷ்ணராசு, (3) புலவர் திருமதி.பரிபூரணம் ஆகியோரும் புரட்சிக்க வியே என்ற தலைப்பில் (1) புலவர் விசயரா சன், எம்.ஏ., (2) புலவர் மி.மு.சின்னாண் டார், (3) திருமதி. கௌசல்யா கிருஷ்ணன், எம்.ஏ.,பி.எட். ஆகியோரும் உரையாற்றி னர்.

6.2.80 இல் பட்டிமன்றம் நடைபெற்றது. தலைப்பு - சிலப்பதிகாரத்தில் சிந்தையை மிகவும் கவர்ந்த பாத்திரம் - கண்ணகியா? மாதவியா? என்ற தலைப்பில் புலவர் ஏ.ப. தட்சிணாமூர்த்தி தலைமையில் கண்ணகியே என்று (1) புலவர் திருமதி.ஏ. அரங்கநாயகி, (2) புலவர் பெ.கந்தசாமி, பி.லிட்., (3) புலவர் கணேசன், பி.லிட்., ஆகியோரும் வாதிட்டனர். புலவர் பெ.கோவிந்தராசுலு நன்றியுரை ஆற்றினார்.

14.3.80 - இல் திரு. V. நமச்சிவாயம், B.A.,B.T., அவர்கள் தலைமையில் இலக்கிய மன்ற விழா நடைபெற்றது.

27.2.81 - இல் பாரதியின் கவிதைகளில் விஞ்சி நிற்பது நாட்டுப்பற்றா? மொழிப் பற்றா? என்ற தலைப்பில் பட்டிமன்றம் திரு.கவிஞர் துரை அந்தோணி தலைமையில் நடைபெற்றது.

23.11.81 இல் சேலம் 2-ஆவது தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு.மு. ஆறுமுகம் அவர்கள் தலைமையில் புலவர் திருக்குறள் சி.இராமசாமி அவர்கள் ''ஆசாரக் கோவை'' யைப் பற்றி சொற்பொழிவு ஆற்றினார்.

17.12.81 - இல் சேலம் நகராட்சித் தனியதி காரி திரு. T.A. சிவசுப்ரமணியன் அவர்கள் தலைமையில் விழா நடைபெற்றது. சேலம் நகராட்சி ஆணையர் திருமிகு R. லெனின், B.A., B.Com., அவர்கள் பரிசு வழங்கினார்.

18.2.83 - இல் சேலம் கல்வி மாவட்ட உயர்நிலைப் பள்ளிகளின் ஆய்வு மருத்துவர் திரு. R. சுகுமார், M.B.,B.S., அவர்கள் தலைமையில் சேலம், ஆத்தூர் நகராட்சி களின் தனியதிகாரி திரு. K.V. லெட்சுமிநாரா யணன், அவர்கள் மாணவர்களுக்குப் பரிசு வழங்கினார்.

26.8.83 - இல் திருமிகு. சோம.வீரகேசரி, M.A., M.Ed. அவர்கள் தலைமையில் பேராசிரி யர் திருமிகு. தி.வை.சொக்கப்பா, M.A., L.T., அவர்கள் சிறப்புரை ஆற்றினார்.

20.2.84 - இல் சேலம் நகராட்சித் தனியதி காரி திருமிகு. K.A. சுப்பிரமணியம், B.A., அவர்கள் தலைமையில் சேலம் நகராட்சி ஆணையாளர் திருமிகு. A. கணேசன், B.A., அவர்கள் பரிசுகளை வழங்கினார்.

13.4.91 - இல் சேலம் மாவட்டக் கல்வி அலுவலர் கே.ஆர்.வாசுதேவன், எம்.ஏ.,

எல்லாம் இருந்த தமிழ்நாடு படிப்பில்லாமல்
பொல்லாங் கடைந்தது பிற்பாடு. — புரட்சிக் கவிஞர்

எம்.எட். அவர்கள் தலைமை தாங்கினார். பெற்றோர் ஆசிரியர் கழகத்தலைவர் முன்னிலை வகித்தார். சேலம் தமிழ் வளர்ச்சித் துறை உதவி இயக்குநர் திரு.பொ.துரைசாமி, எம்.ஏ. அவர்கள் ''புரட்சிக்கவிஞரின் தமிழ்'' என்ற தலைப்பில் சிறப்புரை ஆற்றினார். முன்னாள் நகரத்தந்தைகளான திரு.சி. பழனியப்பன் அவர்களும் இரா. அர்ச்சுனன் அவர்களும் ஓய்வு பெற்ற ஆசிரியர்களுக்குப் பொன்னாடை போர்த்திப் பாராட்டிப் பேசினர்.

திரு.சீ. அரங்கநாதன், எம்.ஏ., எம்.எட். திரு.சி.அர்ச்சுனன், துணைத் தலைமை ஆசிரியர், திரு.சே.தா. மீனாட்சிசுந்தரம், உடற்கல்வி ஆசிரியர், ஆகியோர் நன்றி உரையாற்றினர்.

23.12.91 - இல் திருமிகு ஓ.ச. சுப்ரமணிய செட்டியார் அவர்கள் தலைமையில் கரந்தைப் புலவர் கல்லூரி முன்னாள் பேராசிரியர் பாவலரேறு புலவர் திரு.ச.பாலசுந்தரனார் அவர்கள் சிறப்புரை ஆற்றினார்கள்.

21.2.92, 29.7.92 ஆகிய இரு நாட்களில் நினைவுக்கலை ஏந்தல் திருக்குறள் பெ.இராமையா மகனார் திருக்குறள் இரா.கனகசுப்புரத்தினம், பதின் கவனகர் (தசாவதானி) அவர்கள் ஒரே நேரத்தில் பத்து வகையான நினைவாற்றல் கலையைச் செய்து காண்பித்தார்கள்.

10.3.92 - இல் பெற்றோர் ஆசிரியர் கழகத் தலைவர் திருமிகு. ஓ.ச.சுப்பிரமணியம் செட்டியார் தலைமையில் மாவட்டக் கல்வி அலுவலர் திருமிகு.மொ.மாசிலாமணி அவர்கள் ஓய்வு பெற்ற ஆசிரியர் திரு.புலவர் க.கணேசன் அவர்களுக்கு பொன்னாடை போர்த்திப் பாராட்டிப் பேசினார். சேலம் நகராட்சி ஆணையாளர் திருமிகு.இரா. வேலு, பி.ஏ., அவர்கள் வெற்றி பெற்ற மாணவர்களுக்குப் பரிசு வழங்கினார். திரு.சி.பழனியப்பன், Ex-M.P. திரு.வி.நந்தகோபால் முதலியோர் பாராட்டுரை வழங்கினர்.

26.8.92 - இல் நடைபெற்ற இலக்கியமன்ற விழாவிற்குத் தலைமையாசிரியர் புலவர் பி.அண்ணாமலை அவர்கள் தலைமையில் திருக்குறள் வி.முனிசாமி, B.A., B.L., அவர்கள் திருக்குறளைப் பற்றிச் சிறப்புரை ஆற்றினார்.

15.3.94 - ஆம் நாள் திங்கட்கிழமை நடைபெற்ற இலக்கிய மன்ற ஆண்டு விழா, குடிநீர்த் தொட்டி, சத்துணவுக் கூடத்திறப்பு விழாவிற்குப் பேராசிரியர் தி.வை.சொக்கப்பா, எம்.ஏ., எல்.டி., தலைமை தாங்கினார். ஸ்ரீ அம்பிகாபிரசு உரிமையாளர் திருமிகு. S.A. பெருமாள் அவர்கள் வழங்கிய குடிநீர்த் தொட்டியைத் திராவிடர் கழகப் பொதுச் செயலாளர் தமிழினக் காவலர் மானமிகு கி.வீரமணி, எம்.ஏ.,பி.எல்., அவர்கள் திறந்து வைத்தார். பள்ளி நலக்குழு உறுப்பினர் க.அ.பழனிச்சாமி வாழ்த்துரை வழங்கினார்கள்.

12.7.93 - அன்று நடைபெற்ற முப்பெரும் விழாவிற்கு மாவட்ட ஆட்சித்தலைவர் உயர் திரு.பி.ஏ.இராமையா அவர்கள் தலைமை தாங்கினார்கள். அறிவியல் மற்றும் தொழில் நுட்பத்துறை மத்திய அமைச்சர் மாண்புமிகு. டாக்டர் பி. அரங்கராசன் குமாரமங்கலம், B.Sc. (Hon), LLB, அவர்கள் தந்தை பெரியார் ஈ.வெ.ரா. அறிவியல் கூடத்தையும், புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் புத்துணர்வுக் கலைமன்றத்தையும் திறப்பு விழா செய்து உரையாற்றினார். பள்ளி நலக்குழு உறுப்பினர்கள் பாராட்டுரை வழங்கினார்கள். பழைய மாணவர் கழகச் செயலர் கா.இராமசாமி நன்றி கூறினார்.

புலவர் பெ.கோவிந்தராசுலு ஆகிய நான் 26.10.79 ஆம் நாள் முதல் இன்றைய நாள் வரைக்கும் இலக்கியமன்றச் செயலாளராகப் பணியாற்றி வருகிறேன். ஆண்டு ஒன்றுக்கு ஏறத்தாழ 500க்கு மேற்பட்ட மாணவர்களைப் போட்டியில் கலந்து கொள்ள ஊக்குவித்தேன். இப்பள்ளி மாணவர்கள் பெரியார், தஞ்சை, கோவை மாவட்டங்களில் நடைபெற்ற போட்டிகளில் பங்கேற்று வெற்றி பெற்றுள்ளார்கள். இப்பள்ளி மாணவர்கள் பலர் சிறந்த பேச்சாளர்களாகத்

சாதியால் சமயங்களால் அறிவு தழைக்காது
தமிழ்நூலில் மடமையே இருக்காது. — புரட்சிக் கவிஞர்

திகழ்கிறார்கள். தமிழ்நாடு அரசு நடத்தும் கவியரங்கத்திலும் கலந்து கொண்டு வெற்றி பெற்றுள்ளனர். சிறந்த ஓவியர்களாகவும் சிலர் திகழ்கிறார்கள். இத்துறையில் பள்ளிக்கு நல்ல பெயரைத் தேடித் தந்துள்ளனர்.

இவ்வாண்டு, முதல் உதவிப் பயிற்சிக்காக 91 மாணவர்களைச் சேர்த்துப் பள்ளியிலேயே பயிற்சி அளிக்க ஏற்பாடு செய்து பயிற்சி அளிக்கப்பட்டது.

1993-94 ஆம் ஆண்டுகளில் நூற்றுக் கணக்கான மாணவர்கள் பேச்சுப் போட்டி, கட்டுரைப்போட்டி, ஓவியப்போட்டி, திருக்குறள் ஒப்புவித்தல், பாட்டுப்போட்டி, கரகாட்டம், காவடியாட்டம், மிருதங்கம் முதலிய கலைத்துறைப் போட்டி, வினாடிவினா, தபால் தலை சேகரித்தல், வண்ணம் தீட்டல், உருவப்படம் கட் அவுட் தயாரித்தல், ஓரங்க நாடகம், பல குரல் பேச்சு ஆகிய போட்டிகளில் 512 மாணவர்கள் கலந்து கொண்டார்கள். அவர்கள் பெற்ற பரிசுகள்

	மாணவர்கள்
முதற் பரிசு	126
இரண்டாம் பரிசு	215
மூன்றாம் பரிசு	320
ஆறுதல் பரிசு	112
மொத்த பரிசு	773

போட்டிகளுக்காக ஆசிரியர், ஆசிரியைகள் ஒத்துழைத்தனர். அவர்களுடைய உதவியினால் இத்தகைய பரிசுகள் மாணவர்கள் பெற முடிந்தது. அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

நன்றி! வணக்கம்!!

இன்னனம்
புலவர் பெ.கோவிந்தராசுலு, எம்.ஏ.,பி.எட்.
இலக்கியமன்றச் செயலர்
ந.மே.பள்ளி
கோட்டை, சேலம்-1

பழைய மாணவர் சங்கம்

சேலம் நகராட்சி கோட்டை மேல்நிலைப் பள்ளியில் பழைய மாணவர் சங்கம் இயங்கி வருகிறது. இச்சங்கம் 1950-ல் தொடங்கப்பட்டது. காமராசர் கொண்டு வந்த பகலுணவுத் திட்டத்தை நடைமுறைப் படுத்தியதில் நல்ல தொண்டு செய்துள்ளது. தற்போது பள்ளியின் வளர்ச்சிப் பணிக்கும் முன்னின்று பணி செய்து வருகிறது. தற்போது அதன் புதுப்பிக்கப்பட்ட பொறுப்பாளர்கள் பின்வருமாறு:

பழைய மாணவர் சங்கம்

தலைவர்
திரு.க.அ.பழனிச்சாமி, பி.ஏ.பி.எல்.

துணைத்தலைவர்

1. **வே.தேவராசன்,** பி.ஏ.பி டி.
2. **இரா. பழனிச்சாமி**

செயலர்
ல.முக்தர் பாட்சா, எம்.ஏ.,எம்.எட்.,

துணைச் செயலர்
1. **ஆர்.எஸ்.புருசோத்தமன்,** எம்.காம்., பி.எட்.,
2. **பி.கே. பழனியப்பன்**

பொருளர்
புலவர் பி.அண்ணாமலை (தலைமை ஆசிரியர்)

தணிக்கைக் குழு உறுப்பினர்கள்

1. **க. இராமசாமி,** எல்.இ.இ.,
2. **ஆர்.ஆசைத்தம்பி,** பி.ஏ.,பி.எல்.

மக்கள் நலத்துக்கு மதமா? அன்றி மதத்தின் நலத்துக்கு மக்களா சொல்வீர்!

— புரட்சிக் கவிஞர்

12-ஆம் வகுப்பு முதல்தொகுதி தமிழ் வழி

திரு. ம. ரா. மரியசோசப்
முதுகலை ஆசிரியர்

திரு. புலவர் பி. அண்ணாமலை
தலைமை ஆசிரியர்

திரு. கு. ந. வரதாச்சாரி முதுகலை ஆசிரியர்

12-ஆம் வகுப்பு முதல்தொகுதி தமிழ் வழி

முதுகலை ஆசிரியர்கள் : திரு. க. சீ. வெங்கடேசுவரன் திருமதி. எ. தவுலத்பேகம் திருமதி. அ. கவுசல்யா கிருஷ்ணன் புலவர் பி. அண்ணாமலை (தலைமை ஆசிரியர்) திரு. கு. ந. வரதாச்சாரி திரு. ம. இரா. மரியசோசப் திரு. வை, அருணகிரி.

EMARA PUBLIC LIB

12-ஆம் வகுப்பு இரண்டாம் தொகுதி

முதுகலை ஆசிரியர்கள் : திரு. வீ. நாகராசன் திரு. ம. இரா. மரியசோசப்
புலவர் பி. அண்ணாமலை திரு. க. ந. வரதாச்சாரி திரு. க. சீ. வெங்கடேசுவரன்.

12-ஆம் வகுப்பு சிறப்புத் தமிழ்

திரு. ல முக்தர்பாசா
முதுகலை ஆசிரியர்

திரு. புலவர் பி. அண்ணாமலை
தலைமை ஆசிரியர்

திரு. ரா. சு. புருசோத்தமன் முதுகலை ஆசிரியர்

NEMARA PUBLIC LIB

12-ஆம் வகுப்பு வரலாறு



திரு ல. முக்தர்பாசா
முதுகலை ஆசிரியர்

திரு. புலவர் பி. அண்ணாமலை
தலைமை ஆசிரியர்

திரு. ரா சு புருசோத்தமன்
முதுகலை ஆசிரியர்

திருமதி. வே காவேரி வள்ளி
முதுகலை ஆசிரியை

12-ஆம் வகுப்பு E.D.A.



திரு. வை. அருணகிரி
முதுகலை ஆசிரியர்

திரு. வி. நாகராசன்
முதுகலை ஆசிரியர்

திரு. புலவர் பி. அண்ணாமலை
தலைமை ஆசிரியர்

திரு. இரா. அங்கமுத்து பகுதிநேர ஆசிரியர்

திரு. கா இராமசாமி பொறியியல் ஆசிரியர்

11-ஆம் வகுப்பு முதல்தொகுதி தமிழ் வழி

திருமதி. அ. கவுசல்யா கிருஷ்ணன்
முதுகலை ஆசிரியை

திரு. புலவர் பி. அண்ணாமலை
தலைமை ஆசிரியர்

திரு. க. சீ. வெங்கடேசுவரன்
முதுகலை ஆசிரியர்

திருமதி. எ தவுலத் பேகம்
முதுகலை ஆசிரியை

திரு கு. ந வரதாச்சாரி
முதுகலை ஆசிரியர்

திரு. வை. அருணகிரி
முதுகலை ஆசிரியர்

திரு. ம. ரா. மரியசோசப் முதுகலை ஆசிரியர்

11-ஆம் வகுப்பு இரண்டாம் தொகுதி



திரு. ம ரா. மரியசோசப்
முதுகலை ஆசிரியர்

திருமதி. அ. கவுசல்யா கிருஷ்ணன்
முதுகலை ஆசிரியை

திரு கு. ந. வரதாச்சாரி
முதுகலை ஆசிரியர்

திருமதி. எ. தவுலத் பேகம்
முதுகலை ஆசிரியை

திரு. புலவர் பி. அண்ணாமலை
தலைமை ஆசிரியர்

திரு. க. சீ. வெங்கடேசுவரன்
முதுகலை ஆசிரியர்

11-ஆம் வகுப்பு மூன்றாம் தொகுதி வரலாறு

திருமதி. வே. காவேரி வள்ளி
முதுகலை ஆசிரியை

திருமதி. அ கவுசல்யா கிருஷ்ணன்
முதுகலை ஆசிரியை

திரு. புலவர் பி. அண்ணாமலை
தலைமை ஆசிரியர்

திரு வி. நாகராசன்
முதுகலை ஆசிரியர்

11-ஆம் வகுப்பு சிறப்புத் தமிழ்

முதுகலை ஆசிரியர்கள் : திருமதி. அ. கவுசல்யா கிருஷ்ணன்
திரு புலவர் பி. அண்ணாமலை (தலைமை ஆசிரியர்) திரு. இரா. புருசோத்தமன்

10-ஆம் வகுப்பு 'அ' பிரிவு



திரு. நா. குமரேசன்
துணைத் தலைமை ஆசிரியர்

